கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(19.02.2017 - 19 மாசி, 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 154, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ஞான ஒளி

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

## தவக்கால நிகழ்வுகள்



பங்குனி 1ஆம் திகதி – விபூதிப்புதன்

சித்திரை 09 – குருத்தோலை ஞாயிறு

சித்திரை 13 – புனித வியாழன்

சித்திரை 14 – புனித வெள்ளி

சித்திரை 15 – அல்லேலூயா சனி

சித்திரை 16 – ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா

“வறியோர், அகதிகள், ஒடுக்கப்பட்டோர் அனைவருக்காகவும் இம்மாதம் முழுவதும் மன்றாடுவோம், உதவுவோம்”

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்கள்



# “மரியன்னையின் அன்புக்கு இணையான அன்பு வேறொன்றுமில்லை”



உலகில் வாழ்கின்ற அனைத்து மனிதர்களுக்கும் வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவது அவன் அல்லது அவளை இவ்வுலகில் ஈன்றெடுத்த தாயே, தன் பிள்ளைக்கு துன்பம், பிரச்சினைகள் ஏற்படும்போது அம்மாவின் துன்பங்கள் மறைந்து போய்விடும்.

அம்மா அதிகமாக அன்பு செய்வது தன்னை அதிகமாக கண்ணீர் சிந்தவைக்கும் பிள்ளையையே. கத்தோலிக்கராகிய எமக்கு மரியன்னையின் அன்பு, இதைவிட மேலானது. இந்த முழு உலகத்திலும் இருக்கின்ற அம்மாக்களின் அன்பை ஒன்று சேர்த்தாலும், மரியன்னையின் அன்புக்கு ஈடில்லை என கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் நீர்கொழும்பு கிம்புலாப்பிட்டிய லூர்து அன்னை திருத்தலத்தின் வருடாந்த திருவிழா மாலை ஆராதனையின் போது இக்கருத்தை தெரிவித்தார். 1963ஆம் ஆண்டு உரோமையில் நடைபெற்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் இரண்டாம் அமர்வு முடிவில் திருத்தந்தை 6ஆம் சின்னப்பரால், மரியன்னை திருச்சபையின் தாயாக பிரகடனப்படுத்தப்பட்டார். இவ்வுலகில் துன்ப வேதனைகளில் மற்றும் பாவத்தோடு போராடும் எமக்கு விண்ணக தாயின் பரிந்துரையால் விண்ணக வல்லமையைப் பெற்றுக்கொள்ளலாம்.....

படம் மற்றும் தகவல் :
T சுனில்

15




# திருப்பாலத்துவ சபை

நீங்களும் திருப்பாலத்துவ சபையின் வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்த நிரந்தர சின்னம் பெற்ற ஊக்குவிப்பாளரா? அருட்தந்தையாக, அருட்சகோதர சகோதரியாக வாழும் தேவ அழைத்தல் பயணத்திற்கு திருப்பாலத்துவ சபை உமக்கு வித்திட்டதா?

எனவே, உமக்கு எங்களோடு இணைய ஓர் அழைப்பு! விசேட விதமாக இயேசுவின் அன்பை உலகிற்கு எடுத்துரைக்க திருப்பாலத்துவ சபை உறுப்பினர் என்ற ரீதியில் நிரந்த உறுப்புரிமை (சின்னம் ) பெற்று 2015ஆம் ஆண்டிற்கு முன் இச்சபையின் வளர்ச்சியில் முன்னின்று உழைத்தவரென்றால், இன்றே உமது முழுப்பெயர், விலாசம், பங்கு மறைமாவட்டம் சின்னம் பெற்ற ஆண்டு, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை கீழ் காணும் முகவரிக்கு எழுதி அனுப்பவும். மேலும் திருப்பாலத்துவ சபையின் மூலம் தேவ அழைத்தலை பெற்று இப்போது அருட்சகோதர சகோதரியாகவோ அருட்பணியாளர்களாகவோ உங்களை இறை சேவைக்கு அர்ப்பணித்திருக்கிறீர்கள் என்றால் கீழே தரப்பட்டுள்ள தகவல்களை எங்களுக்கு உடனே அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மறைச்சேவையில் ஈடுபட்டுள்ள இடம். 2017 பங்குனி 5ஆம் திகதிக்கு முன், பாப்பிறை மறைபரப்புச் சபை இயக்குனருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

15

## ஆயர்த்துவ வாழ்வில் ஐந்து வருடங்கள்



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்களான மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, மேதகு ஆயர் மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை இருவரும் தமது ஆயர்த்துவ வாழ்வில் 5 வருடத்தை 11.02.2017 அன்று நினைவு கூர்ந்து கொண்டாடினார்கள். இவர்களின் ஆயர்த்துவ பணிவாழ்வு மேலும் சிறக்க, இறையாசீரோடு ஞான ஒளி வாழ்த்துகின்றது.

## அகில இலங்கை திருவிவிலியப் போட்டியில் கொழும்பு உயர் மறைமாவட்ட மாணவர்கள் “முதலிடம்” ஜனாதிபதியிடம் இருந்து விருது



K கொரினா பர்னாந்து (புதுச்செட்டித்தெரு) A. நிதுஷா நிதியாழன் (கொட்டாஞ்சேனை, பிரமோதினி மோகன் (வத்தளை), A. J எட்ரியன் (கொட்டாஞ்சேனை), N. கேர்ஸ்டன் (புதுச்செட்டித்தெரு)

15

## கொழும்பு உயர் மறைமாவட்ட சிறுவர் தினம் 2017

கொழும்பு உயர் மறைமாவட்ட சிறுவர் தினமானது இவ்வருடம் பங்குனி மாதம் 4ம் திகதி சனிக்கிழமை தேவத்தை பெசிலிக்காவில் நடைபெறவுள்ளது. காலை 7.00 மணிக்கு மாணவர் பதிவும், 7.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத்தொடர்ந்து 8.30க்கு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் சிறப்புத் திருப்பலியும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.....



15

என் நெஞ்சே கடவுளுக்காக மௌனமாய் காத்திரு (திபா 62)

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில், தரம் 01ல், 2018ஆம் ஆண்டு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல் தொடர்பான விபரம்

| இல | பாடசாலையின் பெயர் | திகதிகள் | நேரம் |
|---|---|---|---|
| 01 | புனித தோமையார் கத்தோலிக்க சர்வதேச பாடசாலை, சீதுவ | பங்குனி 01, 02, 03, 06 மற்றும் 07 திகதி - 2017 | காலை 9.00 - நண்பகல் 12.00 மணி வரை |
| 02 | புனித சூசையப்பர் ஆண்கள் கல்லூரி, நுகேகொடை | பங்குனி 01 தொடக்கம் 31ம் திகதி வரை - 2017 | காலை 7.30 - 1.30 மணி வரை |
| 03 | புனித பேதுரு கல்லூரி, உடுகம்பொல, கம்பஹா | பங்குனி 01, 02, மற்றும் 03ம் திகதி வரை 2017 | பிற்பகல் 2.00 - 04.00 மணி வரை |
| 04 | வெற்றிமாதா கன்னியர் மடம், மொறட்டுவை | பங்குனி 02, 03ஆம் திகதிகள் 2017 | காலை 9.00 - 12.00 மணி வரை |
| 05 | புனித லோரன்ஸ் கன்னியர் மடம், கொழும்பு - 06 | பங்குனி 02ஆம் திகதி 2017 : பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்,<br>பங்குனி 03ஆம் திகதி 2017 : அனைத்து கத்தோலிக்க மாணவர்கள் | பிற்பகல் 2.00 - 4.00 மணி வரை<br>காலை 11.00 - 2.00 மணி வரை |
| 06 | ஆவே மரியா கன்னியர் மடம், நீர்கொழும்பு | பங்குனி 04ஆம் திகதி 2017 : ஆவே மரியா பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்,<br>05 பங்குனி 2017 : ஏனைய மாணவர்கள் | காலை 8.30 - 02.00 மணி வரை<br>காலை 8.30 - 12.00 மணி வரை<br>பகல் 1.30 - 3.30 மணி வரை |
| 07 | புனித பேதுரு கல்லூரி, கொழும்பு - 04 | பங்குனி 06 - 08ஆம் திகதி 2017 : எல்லா கத்தோலிக்க மாணவர்கள்<br>பங்குனி 9ஆம் திகதி பாடசாலையில் படித்த பழைய மாணவர்களின் பிள்ளைகள், பாடசாலையில் படிக்கும் மாணவர்களின் சகோதரர்கள் | காலை 10.00 - 12.00 மணி வரை |
| 08 | புனித சூசையப்பர் கல்லூரி, எந்தேரமுல்லை, வத்தளை | பங்குனி 06 தொடக்கம் 10ம் திகதி வரை 2017 | காலை 9.00 - 1.00 மணி வரை |
| 09 | புனித சூசையப்பர் கல்லூரி, கடோல்கலேலை, நீர்கொழும்பு | பங்குனி 06 தொடக்கம் 10ம் திகதி வரை 2017 | காலை 08.30 - 01.30 மணி வரை |
| 10 | திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு 04 | பங்குனி 06ஆம், 07ஆம் மற்றும் 8ஆம் திகதி 2017 | காலை 8.30 - 02.00 மணி வரை |
| 11 | திருக்குடும்ப கன்னியர் மடம், களுத்துறை | பங்குனி 09ஆம் மற்றும் 10ஆம் திகதி - 2017 | பிற்பகல் 02.00 - 05.00 மணி வரை |
| 12 | லொயலா கிளைக் கல்லூரி, போபிட்டிய, பமுனுகமை | பங்குனி 09ஆம் மற்றும் 10ஆம் திகதி - 2017 | பிற்பகல் 02.00 - 5.00 மணி வரை |
| 13 | கிறிஸ்து அரசர் கல்லூரி, வெலிவேரிய | பங்குனி 09ஆம் மற்றும் 10ஆம் திகதி - 2017 | காலை 8.30 - 10.30 மணி வரை |
| 14 | மாரிஸ்டெலா கல்லூரி, நீர்கொழும்பு | பங்குனி 11ம் திகதி 2017 | காலை 9.00 - 12.00 மணி வரை |
| 15 | புனித பெனடிக்ட் கல்லூரி, கொழும்பு - 13 | பங்குனி 11 மற்றும் 18ம் திகதி வரை 2017 | காலை 9.00 - 12.00 மணி வரை |
| 16 | புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவை | பங்குனி 13 தொடக்கம் 16ம் திகதி வரை 2017 | காலை 8.30 - 12.00 மணி வரை |
| 17 | லொயலா கல்லூரி, தளுவகொட்டுவ, நீர்கொழும்பு | பங்குனி 13 தொடக்கம் 17ம் திகதி வரை 2017 | காலை. 9.00 - 2.00 மணி வரை |
| 18 | கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு - 13 | பங்குனி 14, 2017 : நல்லாயன் பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள், பழைய மாணவர்கள் அல்லாத பெற்றோர்களின் பிள்ளைகள் (5 வருடங்களுக்கு மேல் பாடசாலையில் படித்தவர்கள்)<br>பங்குனி 15, மற்றும் 16ம் திகதி : அனைத்து கத்தோலிக்க மாணவர்கள் | காலை 8.00 - 9.00 மணி வரை |
| 19 | புனித பிரிஜட் கன்னியர்மடம், கொழும்பு -07 | பங்குனி 15, 16, மற்றும் 17ஆம் திகதி 2017 | காலை 8.30 - 10.30 மணி வரை |
| 20 | டி மெசனட் கல்லூரி, கந்தானை | பங்குனி 18ம் திகதி 2017<br>பங்குனி 19ம் திகதி 2017 | காலை 9.30 - 3.30 மணி வரை<br>காலை 9.30 - 12.30 மணி வரை |
| 21 | திருச்சிலுவை கல்லூரி, களுத்துறை | பங்குனி 18ம் திகதி 2017 | காலை 8.00 - 01.00 மணி வரை |
| 22 | திருச்சிலுவை கிளை பாடசாலை, பயாகலை | பங்குனி 18ம் திகதி 2017 | காலை 8.00 - 01.00 மணி வரை |
| 23 | தூய சம்மனசுகள் மகளீர் பாடசாலை, பயாகலை | பங்குனி 19ம் திகதி 2017 | காலை 9.30 - 01.00 மணி வரை |
| 24 | புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு - 10 | பங்குனி 27 தொடக்கம் 31ம் திகதி வரை 2017 | காலை 8.00 - 01.00 மணி வரை |
| 25 | புனித யூட் கல்லூரி, குரண, நீர்கொழும்பு | பங்குனி 27 தொடக்கம் 31ம் திகதி வரை 2017 | காலை 7.30 - 01.30 மணி வரை |
| 26 | ஆவேமரியா கன்னியர் மடம், போலவலானை | பங்குனி 29, 30 மற்றும் 31ம் திகதி வரை 2017 | பி.ப 12.30 - 3.00 மணி வரை |
| 27 | நல்லாயன் கன்னியர் மடம், பானந்துரை | பங்குனி, 30ம் திகதி 2017 - அனைத்து கத்தோலிக்க மாணவர்கள்<br>பங்குனி 31ம் திகதி 2017 - கத்தோலிக்கர் அல்லாத மாணவர்கள் | காலை 11.00 - 2.00 மணி வரை |
| 28 | கிறிஸ்து அரசர் கல்லூரி, பன்னிப்பிட்டிய | பங்குனி 30ம், 31ம் திகதி 2017 | காலை 08.00 - 11.00 மணி வரை |
| 29 | திருச்சிலுவை கல்லூரி, கம்பஹா | சித்திரை 7ம், 8ம் திகதி 2017 | காலை 8.00 - 12.30 மணி வரை |

1. விண்ணபத்தைப் பெற்றுக்கொள்ள உங்களது குடும்ப புத்தகம், குழந்தை திருமுழுக்கு பெற்றதற்கான சான்றிதழ், பிறப்புச் சான்றிதம் அவசியம். இவ் ஆவணங்களை ஒவ்வொரு பாடசாலைக்கும் ஏற்றவிதத்தில் சமர்ப்பிப்பதுடன், விண்ணபத்தை பெற்றுக்கொள்ள திருமுழுக்கு சான்றிதழினை சமர்ப்பித்தல் போதுமானது, அதனை பரீசிலித்துவிட்டு மீண்டும் உங்களுக்கே திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் போது பிரதிகளை மாத்திரம் கொடுத்தால் போதும். குழந்தைகளை பாடசாலையில் சேர்க்கும் போது முதற் பிரதிகளை கொடுத்தல் அவசியமாகும்.

2. விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை அனுமதி வழங்குவதற்கு போதிய இடவசதியின்மையின் காரணமாக, அரசாங்க பாடசாலைகளிலும் பிள்ளைக்கான விண்ணப்பங்களை கோரவும்.

3. மேலும் பணம் பெறும் நோக்குடன் அனுமதியினை பெற்றுத்தருவதாக கூறும் நபர்கள் மட்டில் உங்கள் கவனத்தை செலுத்துவதோடு, அத்தகையவர்கள் பற்றிய விபரம் அறிந்தால் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*அருட்பணி. ஐவன் பெரேரா, கொழும்பு உயர் மறைமாவட்ட கல்வி இயக்குனர்,*
*கத்தோலிக்க தனியார் பாடசாலை, அதிகாரி*(WP)

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
19, மாசி 2017 ஞாயிற்றுக்கிழமை.

## “சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது” (மத்.19:14)”

பங்குனி மாதம் 4ம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டம் சிறுவர் தினத்தை கொண்டாடவுள்ளது. வருடந்தோறும் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. காரணம் சிறுவர்கள் நாளைய உலகின் தலைவர்கள். நாளைய உலகின் எதிர்காலமே இச்சிறுவர்களில்தான் தங்கியுள்ளது. எனவே இவர்கள் ஒழுக்கமும், நேர்மையும், பிறரன்பும், பக்தியும், ஆன்மீகமும் உள்ள சிறார்களாக உருவாக்கப்பட வேண்டியவர்கள். இதனால்தான் ஒவ்வொரு வருடமும் எல்லாச் சிறார்களையும் அவர்களது குடும்பங்களையும் அன்னை மரியின் கரங்களில் ஒப்புக்கொடுத்து பாதுகாத்து தரும்படி வேண்டி வருகின்றோம்.

அண்மையில் கிறிஸ்துவின் பிறப்பு விழாவை நினைவுகூர்ந்து கொண்டாடி மகிழ்ந்தோம். மீண்டும் ஒரு தவக்காலத்தில் நுழையவிருக்கின்றோம். தவக்காலத்தின் சிறப்பு என்னவென்று பார்ப்போம். தவக்காலம் என்பது துயருவதற்கும் மனந்திரும்புவதற்கும் உள்ளத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் திருச்சபையினால் தரப்பட்ட பொன்னான காலம்தான் இத்தவக்காலம். பாவத்தை மட்டுமல்ல மாறாக பாவத்திற்கு ஏதுவான சூழமைவு மற்றும் பாவம் செய்யத் தூண்டுக்கோலாக இருப்பவர்களையும் தவிர்க்க வேண்டிய காலமாகும். மனிதன் சாதாரணமாக எப்போதும் பலவீனமானவன். அடிக்கடி பாவத்தில் விழுந்துவிடுவான். தூய பவுல் இவ்வாறு கூறுகின்றார் “உங்களுடைய முந்திய நடத்தையை மாற்றி தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்குரிய பழைய இயல்பைக் களைந்து விடுங்கள். உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும். கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்துகொள்ளுங்கள்” (எபே.4:22-24). தீமைகளிலிருந்து விடுதலைப் பெறவும் நன்மைத்தனங்களில் நிலைத்திருக்கவும் தவக்காலம் எமக்கு அழைப்புவிடுக்கின்றது.

பாலைவனத்தில் இஸ்ரயேலர் 40 வருட காலம் வாழ்ந்து இறை அனுபவத்தைப் பெற்றனர். இதைப்போன்று நாமும் இறை அனுபவத்திற்குள் பயணிக்க தரப்பட்டதுதான் தவக்காலம். நினிவே நகர மக்கள் மனந்திரும்புவதற்காக கடவுளால் நினிவேக்கு அனுப்பப்பட்டவர்தான் யோனா. யோனாவின் செய்தியைக் கேட்டதால் அவர்கள் புதுவாழ்வுப் பெற்றனர். இதுபோல் ஆபிரகாம் மூலம் சோதோமுக்கும் கடவுளின் செய்தி அனுப்பப்பட்டது. ஆனால் அவர்கள் செவிமடுக்கவில்லை. எனவே அழிந்தது அழிக்கப்பட்டது சோதோம் நகரம். இறைவன் எம்மை தண்டிக்கவல்ல மாறாக மனந்திரும்பி புதுவாழ்வு கண்டிடவே வாய்ப்புகளையும் வளங்களையும் தருகின்றார் என்பதை உணர வேண்டும். இவை எமக்கு எப்போதும் கிடைப்பதில்லை. சாதாரணமாக விழுபவர்கள் எழுந்து நடப்பார்கள். அல்லது யாரேனும் எழுவதற்கு உதவி செய்வார்கள். இதுதான் நியதி. நாமாக எழுவதற்கு முயற்சிப்போம். அல்லது நாம் எழுவதற்கு உதவி செய்பவர்களை அலட்சியப்படுத்தாது ஏற்றிடுவோம். என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள் தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் (லூக் 9:23).

இறையாசிருடன்
ஆசிரியர்

# நம்மை உண்மையான செல்வராக்குவது பணம் அல்ல பிறரை அன்பு கூர்வதே

திருத்தந்தையின் தவக்கால செய்தி



**‘வீட்டுக் கதவுக்கருகில் ஏழை மனிதர் இருப்பது, தொந்தரவு கிடையாது, ஆனால் அது மனமாற்றத்திற்கு அழைப்பு விடுப்பதாக உள்ளது’**

வருகிற மார்ச் முதல் நாள் தொடங்கும் தவக்காலத்திற்கென, “இறைவார்த்தை ஒரு கொடை. மற்ற மனிதர்களும் ஒரு கொடை” என்ற தலைப்பில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள தவக்காலச் செய்தி, இறை வார்த்தையிலும், அருளடையாளங்களிலும், மற்ற மனிதரிலும் கிறிஸ்துவைச் சந்திக்க நம்மையே புதுப்பித்துக் கொள்வதற்கும், நம் கண்களைக் கட்டிப்போடும் பாவத்தினின்று தூய்மையடைவதற்கும், தேவையில் இருப்போரில் கிறிஸ்துவைக் கண்டு அவர்களுக்குப் பணிசெய்வதற்கும் ஏற்ற காலம், தவக்காலம் என்றும், இச்செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருஅவை நமக்கு வழங்கும், நோன்பு, செபம், தர்மம் செய்தல் ஆகியவை வழியாக, நம் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தவும், முழு மனத்துடன், நாம் இறைவனிடம் திரும்பி வரவும், தவக்காலத்தில் அழைப்பு விடுக்கப்படுகின்றோம் என்றும், திருத்தந்தை கூறியுள்ளார்.

லூக்கா நற்செய்தியில் கொடுக்கப்பட்டுள்ள, செல்வரும் இலாசரும் என்ற உவமையை மையப்படுத்தி, தனது தவக்காலச் செய்தியை வழங்கியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செல்வரைவிட, ஏழை மனிதர் இலாசரைப் பற்றி, நற்செய்தியில் எவ்வாறு விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் விளக்கியுள்ளார். மற்ற மனிதர்களும் ஒரு கொடையே என்றும், மக்களோடு சரியான உறவு வைத்திருப்பது என்பது, மக்களின் மதிப்பை நன்றியுணர்வுடன் ஏற்பதில் அடங்கியுள்ளது என்றும், செல்வரின் வீட்டுக் கதவுக்கருகில் ஏழை மனிதர் இருப்பது, தொந்தரவு கிடையாது, ஆனால் அது மனமாற்றத்திற்கு அழைப்பு விடுப்பதாக உள்ளது என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை.

எந்த ஒரு மனிதரும், அவர் நம் அடுத்த வீட்டு நபரோ அல்லது நமக்குத் தெரியாத ஏழையோ, யாராய் இருந்தாலும், ஒவ்வொரு மனிதரும் ஒரு கொடை என்பதால், நம் இதயக் கதவைப் பிறருக்குத் திறக்குமாறு இந்த உவமை அழைப்பு விடுக்கின்றது என்று கூறியுள்ள திருத்தந்தை, தேவையில் இருக்கும் அனைவரின் முகத்திலும் கிறிஸ்துவைக் கண்டு, அவர்களுக்கு, நம் கதவுகளைத் திறப்பதற்கு, தவக்காலம் ஏற்ற காலம் என்று கூறியுள்ளார்.


நாம் ஒவ்வொருவரும், இத்தகைய மக்களை, ஒவ்வொரு நாளும் சந்திக்கிறோம், நாம் சந்திக்கும் ஒவ்வொரு வாழ்வும், ஏற்கப்படவும், மதிக்கப்படவும், அன்புகூரப்படவும் தகுதியுடைய ஒரு கொடை வாழ்வை, குறிப்பாக, நலிந்தவர்களின் வாழ்வை வரவேற்று, அன்புகூர, நம் கண்களைத் திறப்பதற்கு, இறைவார்த்தை நமக்கு உதவுகின்றது என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை.

இலாசர் போன்று, அந்தச் செல்வருக்குப் பெயர் கொடுக்கப்படவில்லை, ஆனால், அவர் விலையுயர்ந்த ஆடை அணிந்தவராக, அவரின் செல்வச் செழிப்பு நற்செய்தியில் விளக்கப்பட்டுள்ளது எனவும் கூறியுள்ள திருத்தந்தை, பணத்தின் மீது ஆசை வைப்பது எல்லாத் தீமைகளுக்கும் காரணம் (1திமொத்.6,10) என்ற புனித பவுலின் கூற்றையும் குறிப்பிட்டுள்ளார்.

நம்மை உண்மையான செல்வராக்குவது பணம் அல்ல, ஆனால் பிறரை அன்புகூர்வதே என்றும், தனது தவக்காலச் செய்தியில் குறிப்பிட்டு, மனமாற்றத்தின் உண்மையான பயணத்தில் தூய ஆவியார் நம்மை இட்டுச் செல்வாராக எனச் செபித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**நன்றி**
**வத்திக்கான் வானொலி**

## உண்மை உரைக்கும் கமிலஸ்



திருவழிபாட்டு ஆண்டில் வரும் 01.03.2017 அன்று விபூதிப் புதனோடு தவக்காலத்தை தொடங்குகின்றோம். இக்காலம் மிக முக்கியமான காலமாகும். செபம், உண்ணா நோன்பு, ஈகை இவற்றின் மூலம் உண்மையான மனமாற்றத்தை ஏற்படுத்த ஒவ்வொரு கத்தோலிக்கரிடமும் ஒரு தாக்கத்தை உந்துகின்ற காலம் இதுவாகும். நமது வாழ்வை மாற்றிக்கொள்வதற்கு தகுந்த காலம் இதுவே. இரக்கத்தின் ஆண்டு முடிவடைந்தாலும் இறைவனின் இரக்கம் முடிவடைவதில்லை. இறைவனின் இரக்கத்தை கூடுதலாக பெரும் இத்தவக்காலத்தில், மீக்கா இறைவாக்கினரின் வார்த்தைகளை நமதாக்கிக்கொள்வோம்.

**உமக்கு நிகரான இறைவன் யார், எஞ்சியிருக்கும் போரின் தீச் செயலை மன்னிக்கின்றீர். உமக்கு நிகரானவர் யார், அவர் தம் சினத்தில் என்றென்றும் நிலைத்திரார். ஏனெனில் அவர் பேரன்பு கூர்வதில் விருப்பமுடையவர். அவர் நம்மீது இரக்கம் காட்டுவார். நம் தீச் செயல்களை மிதித்துப் போடுவார். நம் பாவங்கள் அனைத்தையும், ஆழ்கடலில் எறிந்து விடுவார்.** (மீக்கா 7:18-19).

ஆகவே நாம் இவ்வருட தவக்காலத்தில் எம் தீச்செயல்களை விட்டுவிட்டு ஒப்புரவு மனப்பான்மையுடன் கடவுளை நோக்கிச் செல்வோம். கடவுள் பாவியை நோக்கி வருவதில் எப்போதும் சோர்வடைவதில்லை. ஆகவே நம் இதயங்களை திறப்போம் இயேசு தொடுவதற்கு அனுமதிப்போம். அதற்கு இத்தவக்காலத்தில் பின்வரும் எட்டு வழிகளைப் பின்பற்றுவோம்.

**"தவக்காலத்தில் எம் தீச்செயல்களை விட்டுவிட்டு ஒப்புரவு மனப்பான்மையுடன் கடவுளை நோக்கிச் செல்வோம்."**




### அக்கறைக் கொள்ளுதல்




அடுத்தவரின் துன்பம், நம் துன்பம்போல், பிறரின் நோய் நம் நோய் போல்

### தீர்ப்பிடாதீர்கள்



உங்கள் பகைவர்களுக்கு, உங்களை பிடிக்காதவர்களை, உங்களை தீமைக்கு உள்ளாக்கியவர்களை

### புறணி பேசாதீர்கள்



ஒருபோதும் அடுத்தவரைப்பற்றிய வீண்பேச்சிலும், வரம்பற்ற உரையாடல்களிலும் ஈடுபடாதீர்கள்.

### பழிக்குப் பலி வாங்காதீர்கள்



இரக்கமுடையவர்களாக இருங்கள். காழ்ப்புணர்ச்சி கொள்ளாதீர்கள், மற்றவர்களுக்கு மனவெறுப்பு காட்டாதீர்கள் தங்களுக்கு என்ன நேர்ந்தாலும், பழிவாங்கும் எண்ணம் கொள்ளாமல் மன்னித்து விடுங்கள்.

### இரக்கம் காட்ட மறுக்காதீர்கள்



இரக்கம் காட்ட வாய்ப்புக்கள் வரும்போது விலகிச் செல்லாதீர்கள்

### சிறு சிறு இரக்கச் செயல்களில் கவனம் செலுத்துங்கள்



ஒவ்வொரு நாளும் சிறிய அளவில் இரக்கம் காட்ட பல வாய்ப்புகள் வரும், அவற்றைத் தவற விடாதீர்கள்

### மற்றவர்களுக்காக மன்றாடுங்கள்



நோயாளர், வறுமையில் வாடுவோர், சிறுவர்கள் அனாதைகள், விதவைகள், சிறையில் இருப்போர், இளைஞர்கள், முதியோர்.

### உலக காரியங்களில் ஈடுபடுவதை குறைத்துக் கொள்ளுங்கள்



சுற்றுலா, சினிமா, களியாட்டங்கள்

ஆகவே இந்த எட்டு அறச் செயல்களாலும், நமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி, பிறரோடு உள்ள உறவில் உறுதிப்பெற்று, இறைவனைச் சார்ந்து வாழ இத்தவக்காலத்தை தகுந்த காலமாக ஆக்கிக் கொள்வோம்.

# 'உடைகளை அல்ல உள்ளத்தை கிழிப்போம்'




மனிதர்கள் என்பவர்கள் மரணிக்க வேண்டியவர்கள் "மண்ணிலிருந்து இறைவன் படைத்த மனிதா! நீ மண்ணாக செல்ல வேண்டும் ஒருநாள்" என்ற பாடல் வரி நாம் மண்ணிற்கு கிடைக்க வேண்டிய பரிசு என்பதை உணர்த்துகின்றது. மரணத்திற்கு முன் நான் எப்படி வாழ்கின்றேன்? ஏன் வாழ்ந்தேன்? எதற்கு வாழ்ந்தேன்? என்ற கேள்விகளை சிந்தனைக்குள் புகுத்தும் போது தான் நாம் வாழும் வாழ்வுக்கு ஒரு அர்த்தம் கிடைக்கும். இந்த வாழ்வு இவ்வுலகோடு முடிவுபெறும் வாழ்வல்ல, மாறாக இன்னொரு முடிவில்லா வாழ்வு உண்டு என்பதை உணர்த்தும் வாழ்வு, இத்தயை மரணத்தையும் எம் வாழ்வையும் பக்குவப்படுத்தி அறிந்த, தீமையின் ஆதிக்கத்தை நீக்கி, இறைவன் தரும் அருளின் பண்புகளை உணர்ந்து இறைவனின் உறவில் வளர எமக்கு கிடைத்திருக்கும் காலமே இந்த தவக்காலம்.

திருநீற்றுப் புதனோடு இந்த அருளின் காலத்தை ஆரம்பிக்கும் நாம், மீண்டும் ஒருமுறை எமது உன்னதமான வாழ்வை சீர்த்தூக்கி பார்க்க அழைக்கப்படுகின்றோம். அதேபோல் கடவுளிடம் மீண்டும் நாம் செல்ல வேண்டும். எப்படி செல்ல வேண்டும். விசாலமான வாயில் வழியே நுழைந்தால் - பாவத்திற்கும், இடுக்கமான வாயில் வழியே நுழைந்தால் - பரலோகத்திற்கும், நாம் பயணிக்க முடியும். இந்த இடுக்கமான வாயில் வழியே நுழைய இறைவன் கொடுக்கும் கட்டளைகளையும், அவரின் போதனைகளையும் ஏற்று வாழ வேண்டும்.

"சின்னஞ் சிறியோராகிய இச்சகோதர சகோதரிகளுக்கு செய்தது எல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்பது நாம் என்ன செய்துள்ளோம் என்பதை சிந்திக்க இக்காலம் எம்மை அழைத்து நிற்கின்றது. நான் பசியாயிருந்தேன் எனக்கு உணவு கொடுத்தீர்களா? நான் தாகமாய் இருந்தேன் எனக்கு தண்ணீர் கொடுத்தீர்களாக நான் ஆடையின்றி இருந்தேன் என்னை உடுத்தினீர்களா? நான் சிறையிலிருந்தேன் என்னை தரிசித்தீர்களா? என்று எம் ஒவ்வொருவரையும் பார்த்து இயேசு கேட்கிறார்? இதற்காக பதில் என்ன என்பதை சிந்திப்போம். வெறுமனே நெற்றியில் சாம்பல் பூசி, உபவாசம் இருந்து, செப, தவ முயற்சிகளில் ஈடுபட்டால் மட்டும் நாம் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. காரணம் மேற்குறிப்பிட்ட இயேசுவின் கேள்விகளை மறுதலித்து, தனக்கு வேண்டிய கிறிஸ்தவ கடமைகளை மட்டும் நிறைவேற்றுபவர் கிறிஸ்தவர் அல்ல, என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இத்தகைய புனிதமான தவக்காலம் என்ற இறையருளின் காலத்தில் இறைவன் முழு மனதோடு என்னிடம் திரும்பி வா என்று எமக்கு அழைப்பு விடுப்பது எமது உடைகளை அல்ல, இதயத்தை கிழித்துக் கொண்டு முழுமனதுடன் வரவேண்டும் என்பதற்கே. கடல் நீரில் மீன்கள் அன்றாடம் ஓடித்திரிவது போல, கிறிஸ்தவரின் வாழ்விலும் பல சிலுவைகள் நாளாந்தம் வந்து கொண்டே இருக்கும். இச்சிலுவைகளை சுமையாக அல்லாமல் சுகமாக பார்க்கும் போது நாம் பயணிக்கும் இத்தவக்காலம் எமக்கு மாபெரும் உண்மைகளை புரிய வைக்கும். காரணம் இந்த சிலுவைதான் விண்ணகத்தின் நுழைவாயில்.இதனால் தான் இந்த சிலுவையைப் பற்றி புனித அந்திரேயார் பின்வருமாறு கூறுகிறார் "ஓ வாழ்க பரிசுத்த சிலுவையே! ஓ வியத்தகு சிலுவையே ஏனைய மனிதர்களிடம் இருந்து விடுவித்து என்னை உன் கரங்களில் ஏற்றுக்கொள். இதன் வழியாக என்னை மீட்ட என் இரட்சகரிடம் என்னை சேர்த்துக்கொள். ஆகவே கடவுளை அன்பு செய்கிறவர்கள் சிலுவையையும் அன்பு செய்ய வேண்டும். இதற்கான வழியை ஏற்படுத்தித் தரும் தகுந்த காலமே இந்த தவக்காலமாகும்.

செயலினால் அல்ல, மாறாக அது உண்மையாக ஏற்பட வேண்டும். இயேசுவின் மனநிலையை பின்பற்றும் போது இம்மனமாற்றம் எம்மிலே தானாக உருவாகுவதுடன் சிலுவையை பற்றிக் கொள்ளும் ஆசையும் ஏற்படும். "சிலுவை என்பது துன்பம்தான். ஆனால் அதன் பயன் இன்பம்" என்பதை உணர்த்தும் இந்த காலத்தில், இதயத்தை கிழித்து வாழ்வை திரும்பிப் பார்ப்போம். ஜெஸ்தமனி தோட்டம் இல்லாமல் வாழ்வு இல்லை என்பதை உணர்வோம். இந்த பொற்காலமாகிய இந்த தவக்காலத்தில் அர்த்தமுள்ள ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபட்டு எம் வாழ்வை தூயதாக்குவோம். அனைத்து வலிகளும் இனிமையானது, நாம் கடவுளுடன் இணைந்து துன்புற்றால் தொடர்ந்து துன்புறுவோம் இன்பமாக துன்பமின்றி வாழ்வில்லை இணைந்து செல்வோம் இயேசுவின் பயணத்தில் புதுவாழ்வு தொடர.....

**ஆக்கம்**
**சகோ. டிலோய்ட்சன் பெர்னான்டோ**



# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா

09

தெரேசா மோட்டி ஜீல் சேரியில் வீடு வீடாய்ச் சென்று அம்மக்களுடைய குறைகளை நேரில் கேட்டு அறிந்து பார்த்து இவர்கள் ஏன் பாடசாலை செல்லவில்லை என வினவுகிறார். அவர்களுக்கு பாடசாலை செல்லக்கூடிய வசதி எதுவுமே இல்லை. அதை அறிந்த தெரேசா தாமே அவர்களுக்கு பாடசாலை ஒன்றைத் தொடங்கப் போவதாக அவர்களிடம் கூறினார். அதுமட்டுமல்லாமல் நாளைக்கே உங்கள் பிள்ளைகளை அனுப்பி வையுங்கள் எனக் கூறினாள்.

மறுநாளே தெரேசா தனது பாடசாலையைத் தொடங்கிவிட்டார். வெறும் 5 பிள்ளைகள் மட்டும் தெரேசாவின் வகுப்புக்கு வருகை தந்திருந்தனர். இது பெரிதும் ஏமாற்றம் தரக்கூடியதாக இருந்தது. இருப்பினும் மனம் தளராது அந்த ஐந்து சிறுவர்களை வைத்துக் கொண்டு தம் பாடசாலையைத் தொடங்கினார். இதுதான் அவரது முதற் பாடசாலை. பாடசாலை என்ற உடனே கட்டிடம் என எவரும் எண்ணிவிட வேண்டாம். இவரின் பாடசாலை கூரையில்லாப் பாடசாலை. உட்காருவதற்கு கதிரையோ, பெஞ்சுகளோ கிடையாது. எழுதுவதற்கு கரும்பலகைகளும் கிடையாது. அச்சிறுவர்களை ஒரு மரத்தடியில் உட்காரவைத்து வங்காள மொழியில் முதல் எழுத்துக்களைத் தரையில் எழுதிக்கொடுத்தார். இதுவரை பாடசாலைப் பக்கமே சென்றிராத அச்சிறுவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. தங்களுக்குப் பாடம் சொல்லித்தர ஒருவர் வந்திருக்கிறாரே என்று. இதுவரை தங்களைப் பார்க்க எவரும் வந்ததுமில்லை, தங்களைப் பற்றி ஒருவர் கூட அக்கறை எடுத்ததுமில்லை.

வங்காள எழுத்துக்களைச் சொல்லிக்கொடுத்த பின் சிறுவர்களுக்கு சுகாதார முறைகளைப் பற்றியும் கற்றுக்கொடுத்தார் தெரேசா. அவர்களுடைய கால்களிலும், கைகளிலும் படிந்திருக்கும் அழுக்கைச் சுட்டிக் காட்டுவார். "இதோ சவர்க்காரம் தாராளமாகப் போட்டுக் கொள்ளுங்கள்" என்பார். சவர்க்காரம் போட்டுக் கழுவியதும் கறை பிடித்திருந்த அப்பிஞ்சுக் கரங்கள் பளிச்சிட்டன. கரி பிடித்திருந்த அச்சிறுமுகங்கள் பொலிவுடன் காட்சியளித்தன. அடுத்து எப்போதும் சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் வாழ்வது எப்படி என்று அவர்களுக்கு சொல்லிக் கொடுத்ததோடு சுத்தமாக வகுப்புக்கு வரும் மாணவ மாணவியருக்கு பரிசுகளையும் கொடுத்தார். எழுது பலகை, எழுதுகோல், சவர்க்காரம் போன்ற பரிசுகளைப் பெற அச்சிறுவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வந்தனர்.

இவ்வாறு நான்கு மாதங்கள் உருண்டோடின. தெரேசாவின் பாடசாலையில் கற்ற சிறுவர்கள் கல்லாதவர்களை விட மிகவும் சுத்தமாக இருந்தனர். திறமைசாலிகளாகவும் இருந்தனர். "மண் மாண்புனை பாவை" போல இருந்த அச்சிறுவர்களுக்கு இப்போது எழுத்துக்களை எழுதத் தெரியும். கூட்டி வாசிக்கவும் தெரியும்.

இன்று உலகை ஆட்டிப்படைப்பது சிந்தனையா சாதனையா என்று பட்டிமன்றம் போட்டு முழங்கிக்கொண்டிருக்கலாம். ஆனால், மோட்டி ஜீலைப் பொறுத்த வரையில் தெரேசாவின் பள்ளியில் பயின்ற சிறுவர் சிறுமியர் படிப்பில் சாதனை படைத்தவர்களாகவே விளங்கினர். இதனால், கற்றவன் கல்லாதவன் என்ற பாகுபாடு சிறுவர்களுக்குள்ளே ஏற்பட்டது. படியாதவர்க்கும் கற்கவேண்டும் என்ற ஆசை உண்டானது. இதன் விளைவாக தெரேசாவின் வகுப்பு மாணாக்கர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

இங்ஙனம் வரவர விரிவு அடைந்து கொண்டே வந்த தெரேசாவின் பாடசாலை பெரியவர்களின் கவனத்தையும் ஈர்த்தது. தெரேசா நின்று கொண்டே பாடம் சொல்லிக் கொடுப்பதைக் கவனித்த பெரியவர் ஒருவர் அவருக்கு ஒரு நாற்காலியை கொண்டுவந்து கொடுத்தார். மற்றொருநாள் இன்னொருவர் ஒரு கரும்பலகையை அளித்தார். இவ்வாறு பிள்ளைகட்கு வேண்டிய ஏடுகளும் புத்தகங்களும் வந்து சேர்ந்தன.

வசதி படைத்தவர் சிலர் தெரேசாவுக்குப் பணத்தையும் நன்கொடையாக வழங்கினர். இதை வைத்துக் கொண்டு தெரேசா குடிசை ஒன்றை வாடகைக்கு எடுத்து அக்குடிசையில் வகுப்புக்களை நடத்தலானார். பகலின் வெப்பத்தையும் மாரிகாலத்து மழையையும் தாங்கிட அந்தக் கூரைவீடு போதுமானதாக இருந்தது. ஆனால், அத்தனை பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்கப் போதுமான ஆசிரியர்கள் இல்லையே. இதுதான் தெரேசாவின் ஒரே கவலை. தமது பணியை மோட்டி ஜீல் மக்கள் ஏற்றுக் கொண்டதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த போதிலும் தமக்கு உதவிட ஒருவரும் வாராததைக் கண்டு மனம் கலங்கினார்.

இதற்கிடையில் தெரேசா தமது இருப்பிடத்தை வேறு இடத்துக்கு மாற்றிக் கொண்டார். தமக்கென்று ஒரு வீடு வேண்டும் என அவர் வான் எக்செம் அடிகளாரிடமும் பங்குத் தந்தை ஜீலியன் ஹென்றி அடிகளாரிடமும் கூறியிருந்தார். அவ்விருவரும் ஒரு வீடு கிடைக்குமா என தேடிப் பார்த்திருக்கின்றனர்.

ஒரு நாள் ஜுலியன் ஹென்றி அடிகளார் மிக்கேல் கோமஸ் என்னும் நண்பருடைய வீட்டுக்கு நோயுற்றிருந்த அவருடைய தாயாரைச் சந்திக்கச் சென்றிருந்தார். அப்போது அவர் மிக்கேல் கோமசிடம் தெரேசாவைப் பற்றியும் அவர் லொரேட்டோ கன்னியர் மடத்தை விட்டு வந்ததைப் பற்றியும் எடுத்துக் கூறியிருக்கிறார். தெரேசாவின் புதுப்பணிகளைப் பற்றிக் கேள்விப்பட்ட மிக்கேல் கோமஸ் மிக்க வியப்படைந்தார். அவருக்கு தம்மால் ஏதாவது உதவி செய்யக்கூடுமா என கோமஸ் கேட்டிருக்கிறார். அதற்கு ஹென்றி அடிகளார் தெரேசாவுக்குத் தற்போது தேவைப்படுவது தங்குவதற்கு வசதியான ஒரு வீடுதான் என்றார்.இதைக் கேட்டுக் கொண்டிருந்த மிக்கேல் கோமஸ் தமது பெரிய வீட்டின் மாடி அறைகளில் ஒன்றைத் தெரேசாவின் தேவைக்காக விட்டுக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். இவ்வாறுதான் தெரேசா க்ரீக் சந்திலுள்ள 14ஆவது வீட்டில் குடிபுக நேர்ந்தது. முதலில் தெரேசா தனிமையாக மிக்கேல் கோமஸின் வீட்டு மாடி அறையில் தங்கி வந்தார். அங்கிருந்து மோட்டி ஜீல் பகுதிகளுக்குச் செல்வதும் வகுப்புகளை நடத்துவதுமாக இருந்தார். பின்னர் புனித மரியன்னைப் பாடசாலையில் அவர் இருந்த போது சமையல் செய்துவந்த கைம்பெண் ஒருத்தி வந்து தெரேசாவுக்கு உணவு சமைத்துக் கொடுத்து உதவினாள். அவர் பெயர் சாருமா. சாருமா என்றால் சாருவின் தாய் என்பது பொருள். அவள் மகன்தான் சாரு. பிற்காலத்தில் சாருமாவுக்கு நிலையானதொரு வேலை தெரேசாவின் சிசுபவனில் கிடைத்தது.



தெரேசாவின் பாடசாலை மாணவ, மாணவியரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போனது. தெரேசாவால் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. தம் உதவிக்கு ஒருவரும் வரவில்லையே என ஏங்கிக் கொண்டிருந்த தெரேசாவுக்கு ஓர் ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது. ஒருநாள் தெரேசா மிக்கேல் கோமசின் வீட்டு மாடி அறையில் இருக்கும் போது இளம்பெண் ஒருத்தி அவரைப் பார்க்க வந்தாள். யார் அவள்? அடடே, சுபாசினி தாஸ் அல்லவா? இவள் ஏன் இங்கே வர வேண்டும்? புனித மரியன்னைப் பாடசாலையில் தெரேசா தலைமை ஆசிரியையாகப் பணிபுரிந்த சமயம் அவரது வகுப்பில் மாணவியாக இருந்து வந்தவள் சுபாசினிதாஸ். வங்காளத்திலுள்ள நல்லதொரு குடும்பத்திலிருந்து வந்தவள். தனது 9வது வயது முதல் பள்ளி இறுதி வகுப்புவரை தெரேசாவின் கண்காணிப்பில் விடுதி மாணவியாகப் பயின்று வந்தவள். தெரேசா மரியன்னைப் பாடசாலையையும் லொரேட்டோ கன்னியர் மடத்தையும் துறந்து விட்டதைக் கேள்விப்பட்டு அவரைத் தேடி வந்திருக்கிறாள். தனது முன்னாள் தலைமை ஆசிரியைக்கு என்னவாயிற்றோ, இப்போது என்ன பாடுபடுகிறாரோ என நேரிலே பார்த்து அவர்களுக்கு உதவிட வந்திருக்கிறாள் சுபாசினி.

இதுவல்லவா உண்மையான குருபக்தி! குரு பக்தி நிறைந்த மாணாக்கர் பலரைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். குருபக்தி மிகுந்தவன் ஏகலைவன். தன்னுடைய குரு துரோணாச்சாரியார் குருதட்சணையாக தன் வலது கட்டைவிரலைக் கேட்டபோது சிறிதும் தயக்கமின்றி அதை வெட்டிக் கொடுத்தவன் ஏகலைவன். குருபக்தி மிகுந்த மாணவன் ஒருவன் பீமாராவ் இராம்ஜி என்னும் தன் பெயரை விடுத்து தனது குருவின் பெயரையே தனது பெயராக மாற்றிக் கொண்டதை நாம் அறிவோம். அவர்தான் நாம் இன்று போற்றும் டாக்டர் அம்பேத்கார்.

இதோ, சுபாசினி தாஸ் தன் வாழ்வையே தன் குருவுக்காக அர்ப்பணம் செய்ய முன்வந்திருக்கிறாள். சுபாசினி தாஸ் தான் தெரேசாவின் முதல் சீடர். தெரேசா நிறுவின சபையின் முதல் உறுப்பினர். அவள் வந்த நாள் 1949 பங்குனி 19. நெடுநாள் செய்த தவப் பயன் அவள். அவளது வருகை தெரேசாவுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. ஆயினும் அவருக்கு ஓர் ஐயம். "சுபா நீ இங்கே வந்திருப்பது உன் பெற்றோருக்குத் தெரியுமா? அவர்களது இசைவு பெற்றுத்தான் வந்திருக்கிறாயா?" இது தெரேசா கேட்கவேண்டிய கேள்விதான். ஏனென்றால் தம் முன்னாள் மாணவிக்குத் தம்மால் எவ்வித விபரீதமும் வரக்கூடாது அல்லவா? ஆகவே, முன் எச்சரிக்கையாக தெரேசா இக்கேள்வியைக் கேட்டார். ஆனால், சுபாசினி தாஸ் தனது பெற்றோரின் சம்மதத்தைப் பெற்றுத்தான் வந்திருக்கிறாள். பதினெட்டு வயதுடைய சுபாசினி உருவில் சிறியவள்தான். ஆனால் அவளது உள்ளம் மிகப் பெரிது. தெரேசாவின் எண்ணத்தில் அவள் மிகவும் உயர்ந்தவள்.

உணவு அருந்தவேண்டிய நேரம் வந்துவிட்டது. இருவரும் ஒரே பெஞ்சில் அமர்ந்து உணவு அருந்த விரும்பினார் தெரேசா. ஆனால், சுபாசினி தன் ஆசிரியையுடன் சமமாக உட்கார்ந்து உணவு கொள்ள மறுத்துவிட்டாள். இந்நிலையைச் சமாளிக்க வேறு வழியின்றி தெரேசா அறையைவிட்டு வெளியே போக வேண்டியிருந்தது. சுபாசினி உணவு கொண்ட பின்தான் தெரேசா உள்ளே வந்தார். இவ்வாறு ஏற்பட்ட அவர்களது உறவு நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே சென்றது.

தெரேசாவுடன் நட்புகொண்ட மற்றொருவர் மதலேனா கோமஸ் ஆவார். இவரும் புனித மரியன்னைப் பாடசாலையில் தெரேசாவின் மாணவியாக இருந்தவர்தான். சுபாசினி தாஸ் தெரேசாவிடம் வந்து சேர்ந்த சில தினங்களுக்குள் மதலேனா கோமசும் வந்துசேர்ந்தார். தெரேசாவின் நெருக்கடி காலத்தில் "உடுக்கை இழந்தவன் கைபோல்" அவரது இடுக்கண் களைய வந்திருக்கின்றார். சுபாசினி தாஸ் பிற்காலத்தில் தன் பெயரை ஆக்னெஸ் என மாற்றிக் கொண்டார். ஆக்னெஸ் என்பதுதானே தெரேசாவின் முதற்பெயர்? மதலேனா கோமஸ் தன்னுடைய பெயரைக் கெர்ட்ரூட் என மாற்றிக் கொண்டார். முதற்சீடர்களாகிய இவ்விருவரும் தான் தெரேசாவின் துன்ப நாட்களில் அவருக்கு உறுதுணையாக இருந்து உதவியவர்கள். அவரது உள்ளத்தை நன்கு புரிந்து கொண்டவர்கள்.

**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்



# நோன்பு

**எகிப்தியர் நோன்பு இருந்தனர்**
**இளமையாக இருக்க...**
**கிரேக்கர் நோன்பு இருந்தனர்**
**விழிப்பான மனநிலைபெற...**
**இந்தியர் நோன்பு இருந்தனர்**
**வீரத்தை வெளிக்காட்ட...**
**ரஷ்ய ஓவியர் நோன்பு இருந்தார்**
**நல்ல ஓவியராக மாற...**
**நீங்களும் நானும் எதற்காக நோன்பு இருக்கின்றோம்?**

ஆடம்பரங்கள் அதிகரித்துக் கொண்டு இருக்கும் நுகர்வு கலாச்சாரத்தில், உண்மை நிலையையும், நம் செயல்பாடுகளின் முழு அர்த்தங்களை நாம் மறந்து கடனுக்காக காரியங்களை செய்து கொண்டு இருக்கின்றோம். இதை நம் அன்றாட ஆன்மீக வாழ்விலும் கடைப்பிடித்து வருகின்றோம். வருடத்திற்கு ஒருமுறை பாதயாத்திரை மேற்கொள்ளுதல், தவக்காலத்தில் நோன்பு இருத்தல், திருவிழாவின்போது நவநாட்கள் ஒப்புக்கொடுத்தல், புண்ணியத் தலங்களில் பலிகொடுத்தல், மெழுகுதிரி ஏற்றி காணிக்கை செலுத்துதல் போன்ற பல விதமான பக்தி முயற்சிகளில் நாம் ஆர்வத்தோடு ஈடுபடுவது அனைவரும் அறிந்ததே! இப்படி பக்தி முயற்சிகளிலும், செயல்பாடுகளிலும், ஈடுபடுபவர்களிடம், அவர்கள் இவ்வாறு ஈடுபடுவதற்கான காரணம் என்னவென்று கேட்டால் வழக்கமாக இரண்டுவிதமான பதில்களைக் கொடுப்பார்கள். அதாவது “எல்லோரும் செய்கிறார்கள், எனவே நாங்களும் செய்கிறோம்” என்ற பதிலையே, இவ்வாறு அர்த்தமற்ற முறையில், ஈடுபாடற்ற முறையில் செய்யப்படக்கூடிய பக்தி முயற்சிகளினால் எந்தப் பயனும் இல்லை என்பதையும், இந்தப் பக்தி முயற்சிகளை சரியான மனப்பக்குவத்தோடு செய்வது எப்படி என்ற செய்தியையும், நற்செய்தி நமக்கு வெளிப்படுத்துகிறது. பக்தி முயற்சிகளில் ஒன்றான “நோன்பு” பற்றி நாம் சிந்திப்போம். இது எல்லாம் பக்தி முயற்சிகளுக்கும் பொருந்தும்.

யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட சட்டப்படி வருடத்திற்கு ஒரு நாள் தான், அதாவது “பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளன்று மட்டும் நோன்பு இருக்க வேண்டும் (லேவி 16:29,32) மேற்கூறிய நாள்போக, மற்றும் சிலநாட்களிலும் நோன்பு கடைப்பிடிக்கப்பட்டதைப் பழைய ஏற்பாட்டில் பார்க்கின்றோம். இவ்வாறு கடைப்பிடிக்கப்பட்ட நோன்புகள், வெறும் சடங்குகளாக அல்ல, மாறாக குறிப்பிட்ட சில காரணங்களுக்காக கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக நோன்பு இருக்கும் மனிதர்கள் தங்களை இறைப்பிரசன்னத்திற்குக் கொண்டு வருவதற்காக நல்ல சூழலை ஏற்படுத்துகின்றனர். வெறுமனே சாப்பிடாமல் இருந்தால் அது “பட்டினி” என்றழைக்கப்படுகிறது. சாப்பாட்டை விட்டுக்கொடுப்பதோடு, இறைவனை நினைத்து அவரது சன்னிதிக்கு வர முயற்சி செய்வதுதான் உண்மையான நோன்பு.

“யூதர்களை அழிக்க ஆமான் என்பவன் திட்டமிட்ட பொழுது, அவனுக்கு எதிராக யூதர்களுக்கு சார்பாக பேச அரசரிடம் செல்வதற்கு முன்பாக தனக்காக நோன்பிருந்து செபிக்க அனைத்து யூதர்களையும் எஸ்தர் அரசி கேட்டுக் கொள்கின்றாள். (எஸ் 4:6) மேலும் சிறப்பு பணிக்காக தேர்ந்து கொள்வதற்கு முன்பாக பவுலும், பர்னபாவும் நோன்பு இருந்து செபித்தார்கள் (தி.ப 13:2)

இரண்டாவது நோக்கம் கடவுள்முன் ஒருவர் தன்னையே தாழ்த்துவது, தன்னுடைய வாழ்க்கையில் அகந்தையையும், ஆணவத்தையும் விலக்கி, தான் எப்பொழுதும் கடவுளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவராக இருப்பதை சுட்டிக் காட்டும் செயல்தான் நோன்பு.

“இஸ்ரயேலின் ஆண்கள் யாவரும் நோன்பிருந்து தங்களையே தாழ்த்திக் கொண்டார்கள்” (யூதித் 4:9). இஸ்ராயேல் மக்கள் பென்யமின் மக்களுடன் போரிடச் சென்றபோது, பலர் வெட்டப்பட்ட சூழ்நிலையில், தங்களையே தாழ்த்தி நோன்பிருந்ததாக நாம் வாசிக்கின்றோம் (நீ. த 20:26)


மூன்றாவதாக, நோன்பு இருப்பவர், கடவுளை முழுமையாகச் சார்ந்திருப்பதை அறிக்கையிடுவதோடு, கடவுளிடமிருந்து சிறப்பான வல்லமையையும், ஆற்றலையும் பெறுகின்றனர். சாகக்கிடந்த குழந்தை பிழைக்கும் என்ற நம்பிக்கையில் தாவீது நோன்பிருந்து மன்றாடினார் (2 சாமு 12:16,22). தோமியர் போர் தொடுத்தபோது, யூதா மக்கள் யோசபாத்து அரசன் தலைமையில் நோன்பிருந்து கடவுளது உதவியை நாடியது (2குறி 20:3) சிறுவனிடமிருந்து பேயை தங்களால் ஓட்ட முடியாததற்காக காரணம் என்னவென்று கேட்டபோது “இவ்வகைப் பேய் இறைவேண்டலினாலும், நோன்பினாலுமேயன்றி வேறு எதனாலும் வெளியேறாது” என இயேசு பதில் கொடுத்தார். (மத் 17:21)

நான்காவது நோன்பு இருப்பது மனமாற்றத்தின் அடையாளம் (1சாமு7:6, யோவே 1:14, யோனா 3:5, 1 சாமு31:13, சாமு 1:2) மேற் சொல்லப்பட்டவைகளில் நாம் விபூதிப்புதனன்று நற்செய்தியை எடுத்துக் கொள்ளுவோம். இயேசு நோன்பு இருப்பதற்கு எதிராகப் பேசுவது போலத் தோன்றினாலும், நிச்சயமாக அது இயேசுவின் நோக்கம் கிடையாது. காரணம் அவர், நோன்பின் தன்மையை சுவைத்தவர், அவற்றின் வல்லமையை தம் சீடர்களுக்கும் சொல்லிக் கொடுத்தவர் (மாற் 6:29) மேலும் அவரே நோன்பிருந்து செபித்தார் என்று மத் 4:2ல் நாம் வாசிக்கின்றோம்.

பரிசேயர்கள் வாரத்திற்கு இருமுறை நோன்பு இருப்பார்கள். திங்கள் மற்றும் வியாழன் அந்த நாட்களில் தான் சந்தை கூடும் நாள், மக்கள் அதிகமாக வருவதும்போவதும் தேவையான பொருட்களை வாங்குவதுமாய் இருப்பார்கள். மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக அவர்கள் தெருவின் நடுவிலும் முக்கிய பகுதிகளிலும் நோன்பு இருப்பார்கள். தாங்கள் மற்றவர்களை விட மேலானவர்கள் என்று பெருமை பட்டுக் கொள்வார்கள். (லூக் 18:12) வெளிவேடத்தின் பொருட்டே அனைத்தையும் செய்வார்கள். இந்த தவறான மனப்பான்மையை இயேசு சுட்டிக்காட்டினார்.

உண்மையான காரணிகளாகிய, இறைபிரசன்னத்தை உணர்தல், தங்களையே தாழ்த்துதல், கடவுளது வல்லமையை பெறுதல், மனமாற்றம் பெறுதல் போன்றவற்றை பக்தி முயற்சிகளின் நோக்கத்தை உணர்ந்து செய்வது, சுட்டிக்காட்டப்படும் நிலவைப் பார்க்காமல், சுட்டிக்காட்டுகின்ற விரலைப் பார்த்து, திருப்தியடைகின்ற மூடத்தனத்திற்கு சமம். பக்தி முயற்சிகளை சாவை விளைவிக்கும் சட்டத்தின் அடிப்படையில் அல்ல, மாறாக வாழ்வு தருகின்ற தூய ஆவியின் துணையோடு முயற்சிப்போம்.

**நன்றி அமைதியின் அரசி [பங்குனி 2013]**



# ஆணவக் காரருக்கும், கொடுமை செய்வோருக்கும் அன்பு செய்வது கடினம்

**மலாக்கி 4:1-2**

“இதோ சூளையைப்போல் எரியும் அந்த நாள் வருகிறது. அப்போது ஆணவக்காரர் கொடுமை செய்வோர் அனைவரும் அதனுள் போடப்பட்ட சருகாவர். வரப்போகும் அந்த நாள் அவர்களுடைய வேரையோ, கிளையையோ விட்டுவைக்காது முற்றிலும் சுட்டெரித்துவிடும்”.

பாவிகளுக்கும் ஆணவக்காரருக்கும் வேறுபாடுண்டு. ஆணவம் என்பது நானே கடவுள் என்று எண்ணுவோர். தாழ்ச்சி உள்ளோருக்கு அன்பு காட்ட முடியும். ஆணவக்காரருக்கும் கொடுமை செய்வோருக்கும் அன்பு காட்டுவது கடினமானதாகும். இப்படிப்பட்டவர்களுக்கு இறை அரசில் இடமிராது.

“ஆனால் என் பெயருக்கு அஞ்சி நடக்கின்ற உங்கள் மேல் நீதியின் கதிரவன் எழுவான். அவனுடைய இறக்கைகளில் நலம் தரும் மருந்து இருக்கும்”.

பொதுவாகப் பெலவீனருக்கு இறைபயம் இருக்கும். இறைபயம் என்பது கௌரவமான பயமாகும். இது இல்லையேல் நல்ல மனச்சாட்சி உருவாகாது. இறைவனுக்குக் கீழ்ப்படிய மனம் வரும்.

இங்கே நீதியுடன் நடப்பவருக்கு நலம் கிடைக்கும். அநீதியுள்ளோர், கொடுமைக்காரர், ஆணவக்காரருக்கு நலம் கிடைக்காது. சூரியனின் இறக்கையில் பறந்து வருவது போல் நலம் கிடைக்கும்.

**லூக்கா 21:5-19**

உண்மையான கோவில் இறைமக்களாகும். கட்டப்படும் கோயில் இறை மக்கள் ஒன்று கூடுவதற்கே. கட்டிடம் கட்டினாலும் மக்களைக் கட்டவில்லையேல் பிரயோசனமில்லை. நாம் உயிர்த்த ஆண்டவரின் உறுப்புக்கள்.

“ஒரு காலம் வரும். அப்போது கற்கள் ஒன்றின் மேல் ஒன்று இராதபடி இவையெல்லாம் இடிக்கப்படும் என்றார். அவர்கள் இயேசுவிடம் போதகரே நீர் கூறியவை எப்போது நிகழும்” என்று கேட்டனர். உலக முடிவின் முன்னடையாளம் இங்கே கூறப்படுகிறது. இதை நான்கு தலைப்புகளில் நோக்குவது முக்கியம்.

1. இது எப்போது நடக்கும்? என்று கேட்டது.
2. “நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்”. பொய்யான இறைவாக்காளர்கள் பொய்யான மெசியாக்கள் தோன்றுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.
3. “பெரிய நில நடுக்கங்களும் பல இடங்களில் பஞ்சமும் கொள்ளை நோயும் ஏற்படும்”.
4. நான் சிலுவை வரை துன்பப்பட்டது போல நீங்களும் துன்பப்பட ஆயத்தமாக வேண்டும்.

மேலும் இன்னும் நான்கு தலைப்புகள் முக்கியமானவை.



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு 131

(அ) “எனக்குச் சான்று பகர இவை உங்களுக்கு வாய்ப்பளிக்கும்”. ஆகவே சான்று பகர ஆயத்தமாக வேண்டும்.

(ஆ) பயப்பட வேண்டாம். உங்களுக்குள் இருந்து நானே கதைப்பேன். அவர்கள் உங்களைத் துன்பப்படுத்தும் போது உங்களுக்குள் இருக்கும் என்னையே துன்பப்படுத்துவர்.

(இ) “என் பெயரின் பொருட்டு எல்லோரும் உங்களை வெறுப்பார்கள்”.

(ஈ) “இருப்பினும்... உங்கள் தலைமுடி ஒன்றுகூட விழவே விழாது. நீங்கள் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்.

மேலே முதலில் கூறிய நான்கும் உலகம் முடிவிற்கு அடையாளங்களே. ஆனால் முடிவு உடனே வராது. நாம் பொறுமையோடும் மன உறுதியோடும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும். விசுவாசத்தோடு இருக்க வேண்டும். வாக்குறுதியை எதிர்பார்த்து வாழ வேண்டும். இப்படி நீங்கள் வாழ்ந்தால் அதுவே உலக முடிவின் அடையாளமாக இருக்கும்.

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



# இறைவார்த்தை வழிபாடு

WLX

- பேதுரு -

## பொதுக்காலத்தின் ஏழாவது வாரம் (19.02.2017)

**வாசக விளக்கம்:** “தூயவராய் இருங்கள் ஏனெனில் உங்கள் ஆண்டவரும் கடவுளுமான நான் தூயவர்” என்ற இறைவார்த்தையை இன்றைய ஞாயிறு தினத்தில் சிந்திக்க வந்திருக்கும் இறை உள்ளங்களே! இன்றைய முதல் வாசகத்தில் “பழிக்குப் பழியென, உன் இனத்தார் மேல் காழ்ப்புக் கொள்ளாதே. உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” என்ற சட்டம் வளர்ச்சியினை கண்டு இயேசுவிலும் இன்றைய நற்செய்தியிலும் முழுமை பெறுவதைக் காண்கின்றோம். உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக செபியுங்கள் என உன்னத கட்டளையாக மாறுகின்றது. நீங்கள் பழைய ஏற்பாட்டின் இஸ்ராயேல் மக்கள் அல்ல, புதிய இஸ்ராயேல் மக்கள், ஆகவே பகைவரையும் நேசியுங்கள் என்கிறார் இயேசு. நாமும் எமது தூயவாழ்வை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். எமது எண்ணமும், வாழ்வும் ஏனையோர்க்கு பயன்கொடுக்க வேண்டும் இதற்காக தூய தந்தையிடம் மன்றாடுவோமாக.

**முதல் வாசகம் : லேவி 19:1-2, 17-18**
உன் மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 16-23**
நீங்கள் கிறிஸ்துவுக்கு உரியவர் கிறிஸ்து உங்களுக்குரியவர்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
அல்லேலூயா அல்லேலூயா கிறிஸ்துவின் வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைவடைகிறது. அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத் 5:38-48**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உண்மை அன்பில் என்றும் வாழ தன் மக்களை வழி நடத்தும் தூய திருச்சபைக்கும் அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உமது அன்பைப் பொழிந்து, அன்பின் பாதையில் அவர்களை வழிநடத்தியருள வேண்டுமென்று...

அன்பின் வல்லமையைப் புரிந்து கொண்டவர்களாக நாட்டின் தலைவர்களும், சமூக, சமய அரசியல், தொண்டர்களும், பழிவாங்கும் அரசியலைப் புறம் தள்ளி மக்களின் நலனுக்காகவும், வாழ்விற்காகவும் அன்பின் வல்லமையை உலகிற்கு உணர்த்திய மகான்களைப் போல் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

இறை இயேசுவின் பிள்ளைகளாகிய நாமும் எமது பகைவர்களை அன்பு செய்யவும், எம்மைத் துன்புறுத்துவோருக்காக செபிக்கவும், பழிவாங்கும் உணர்வில் இருந்து விடுப்பட்டு எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டிய நல்மனதை எமக்குத் தந்தருள வேண்டுமென்று ...

## பொதுக்காலத்தின் எட்டாவது ஞாயிறு 26.02.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 08ஆவது ஞாயிறு தின திருவழிபாட்டில் பங்கு கொள்ள வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! பால் குடிக்கும் மகனைத் தாய் மறப்பாளோ, அப்படி அவள் மறந்தாலும் நான் மறப்பதில்லை என்ற நம்பிக்கையூட்டும் இறைவார்த்தையை சிந்திக்க நாம் அழைக்கப்படுகின்றோம். இன்றைய நற்செய்தியில் கவலை வேண்டாம் கடவுள் தம்முடைய எல்லையற்ற கருவூலத்திலிருந்து உனக்கு கொடுப்பார் எனப்பார்க்கின்றோம். படைத்த இறைவன் அனைத்தையும் பராமரித்து வருகின்றார். வானத்துப் பறவைகள் விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. ஆனால் கடவுள் இவற்றுக்கு உணவு கொடுக்கிறார். நாம் இறைவன் மீது நம்பிக்கையும் முழு உறுப்பாடும் கொண்டிருக்க வேண்டும் கடவுளின் பராமரிப்பையும் நாம் தியானித்தால் நம் கவலைகள் பறந்து போகும் வானத்துப் பறவைகளுக்கும் கடவுள் உணவு கொடுக்கின்றார். வயல்வெளி மலர்களைப் சிறப்பாக உடுத்துகிறார். இறைவனால் அழைக்கப்பட்ட நாம் விசுவாசத்தின் சாட்சிகளாக திகழ வேண்டும். இறைப்பணிக்காக அழைக்கப்பட்ட பணியாளர்களும் தூய பவுலடியாரின் மனநிலையை தமதாக்கிக் கொண்டு பணியாற்ற வேண்டும். இதற்கு வேண்டிய வரங்களைத் தந்தருளுமாறு இறைத்தந்தையிடம் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எசா 49:14-15**
நான் உன்னை மறக்கவே மாட்டேன்

**பதிலுரைப்பாடல் :** என் நெஞ்சே கடவுளுக்காக மௌனமாகக் காத்திரு.

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 4:1-5**
ஆண்டவர் உள்ளத்தின் நோக்கங்களை வெளிப்படுத்துவார்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத் 6:24-34**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

திருச்சபையை அன்பு செய்து பராமரித்து வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து அவர்களுக்கு வேண்டிய உடல், உள ஆன்ம நலத்தை தந்தருள வேண்டுமென்று...

கடவுளின் பராமரிப்பை நாம் உணர்ந்து அவரிடம் நாம் சரணடைந்தால் நம் கவலைகள் பறந்து விடும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டவர்களாக நாம் வாழவும், கடவுளின் கரத்தில் நாம் களிமண் என்ற உணர்வுடன் என்ன நேர்ந்தாலும் எப்பொழுதும் இறைவனுக்கு நன்றி கூறி வாழவும் வேண்டிய நல் மனதைத் தந்தருள வேண்டுமென்று...

எமது வாழ்வில் இறை நம்பிக்கை உள்ளதா என்று சிந்திக்கவும், உலக செல்வங்களையும், இன்பங்களையும் தேடி ஓடாமல், இறைவன் மீது நம்பிக்கை கொண்டு அவர் எமக்குத் தரும் நிலை வாழ்வை நாடி ஓடவும், யார் மறந்தாலும் எம்மை மறவாத் தெய்வத்திடம் நாம் சரணாகதி அடையவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...




தனிமையில் இருக்கும்போது ஸ்மார்ட் போனைத் தொடாமல் உங்களால் எவ்வளவு நேரம் இருக்க முடியும்.

✦✦ வைரஸ் தடுப்புச் சேவை நிறுவனமான “காஸ்பெர்ஸ்கி லேப்” என்ற நிறுவனம் ஒரு ஆய்வை நடத்தியது.

✦✦ பங்கேற்றவர்களில் பெண்களைப் பொறுத்த-வரை 57 நொடிகள் போனைத் தொடாமல் இருக்க முடிந்திருந்தது. ஆண்களோ 21 நொடிகள் மட்டுமே போன் பக்கம் கையைக் கொண்டு செல்ல முடியாமல் இருந்திருக்கின்றன.

✦✦ புதிய செய்திகள் மற்றும் தகவல்களைத் தவறவிடுவோமா” என்ற பதற்றம் காரணமாக அடிக்கடி போனை எடுத்துப் பார்க்கும் பழக்கம் இருப்பதாக கருதப்படுகிறது.



## புனித யோசேவ்வாஸ் பாடல்

யோசேவ்வாஸ் முனி தாசர் நாமினி
வணங்கியே வாழ்த்தி புகழ்ந்து
வந்தனை செய்கின்றோம்
உந்தன் வழியை பின்பற்றும்
உந்தன் பிள்ளைகள் நாம்
உம் வழி வாழ அருள் புரி புனிதனே

மகிழ்வுடன் துன்பங்களை
ஏற்றிட்ட செம்மலே உம் திகழ் நவ
உதயத்தை தந்தே காப்பீரே
கால நேர பசிநோக்க
சீல தருமங்கள் ஏற்று - 2
எல்லோருக்கும் எல்லாமாக
வாழ்ந்த அருள் முனி - 2

மனிதர்கள் இன்ப துன்பம்
தனில் நாம் பங்குகொண்டு
இனிதாக அவர்கட்கு வழிகாட்ட அருள்
காலநேரம் பசிநோக்கா
சீல தருமங்கள் ஏற்று - 2
எல்லோருக்கும் எல்லாமாக
வாழ்ந்த அருள் முனி - 2

## புனிதரின் அன்றைய தனிப்பட்ட தேவைகளாக இருந்தவை...

- ✳ **உணவு :** தண்ணீரில் அவித்த அரிசி. அத்தோடு சில வேளைகளில் உப்பிட்ட மீன். மிகவும் பலநாள் பயணமாக இருந்தாலும், ஒரு நாளுக்கு அவசியமான உணவை மட்டும் எடுத்துச் செல்வார். இறைபராமரிப்பில் உறுதியாக நம்பிக்கை வைத்து வாழ்ந்தார்.
- ✳ **உறக்கம் :** மாட்டுச் சானத்தால் மெழுகப்பட்ட நிலத்தில் பாய் விரித்து உறங்குவார்.
- ✳ **செபம் :** வெறுங்காலாய் காடு மேடெ-ல்லாம் நடையாக பிரயாணம் செய்வார். பிரயாணத்தின்போது திருச்செபமாலை-யையும், பரிசுத்த கன்னி மரியாளினதும், புனிதர்களினதும் பிரார்த்தனைகளையும் செபித்துக்கொண்டே செல்வார்.
எந்த வேளையிலும் செப நிலையிலே காணப்பட்டார்.

## புனிதர் நிறுவியவை சில

15 ஆலயங்கள்
400 சிற்றாலயங்கள்
வைத்தியசாலைகள்
மருந்து கொடுக்கும் இடங்கள்!!!!

# இலங்கை
## புனித யோசேவ்வாஸின்




### 1.4 யோசேவ்வாஸின் கல்வி

#### 1.4.1 பாடசாலைக் கல்வி

யோசேவ்வாஸினுடைய தாய்மொழி கொங்கணியாயிருந்தாலும் சங்கோலேயிலுள்ள ஆரம்பப் பாடசாலையிற் சேர்ந்து போர்த்துக்கேய மொழியைக் கற்றார். ஐந்து வயதளவில் இப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருடைய புத்திக்கூர்மையும், விவேகமும், சாதுரியமும் சீராக வளரவும் வெளிப்படவும் வழியாயிற்று. வீட்டுப் பழக்கங்கள் பாடசாலையிலே பரிணமித்தன. பாடசாலைக்குச் செல்லும் வழியிலும், திரும்பி வீட்டிற்குச் செல்லும் வழியிலும் சிறுவன் யோசேவ்வாஸ் செபமாலை செபித்துக் கொண்டு செல்வதைக் காணமுடிகிறது. கெட்டித்தனமான மாணவனாக யோசேவ்வாஸ் இருந்தது மட்டுமன்றி பிறருக்கு உதவுதல், செபித்தல் போன்ற உயர்ந்த பண்புகளால் பலராலும் பாராட்டப்பட்டார். பாடசாலையிலும், கல்லூரியிலும் அவருடைய வயதை ஒத்தவர்களிடம், எவருக்கும் இரண்டாவதாக யோசேவ்வாஸ் இருக்கவில்லை. மாறாக கல்வியிலும், நற்பண்புகளிலும் முதன்மையானவராகத் திகழ்ந்தார்.

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு கற்பிக்கவும், தவறு செய்தவர்களைத் தண்டிக்கவும் ஆசிரியர்கள் இவரைப் பணித்தார்கள் ஏனையோரைத் தண்டிப்பதற்கு ஒருபோதும் இவர் உடன்படவில்லை. ஒரு சம்பவத்தில் இவருடைய அண்ணன் பேத்றோவின் (Pedro) காதைத் திருகும்படி இவர் உத்தரவிடப்பட்டார். இதைக் கேட்டதும் யோசேவ்வாஸ் திகைப்புற்றவராய் தனக்கு அவரது காது எட்டாது என்று வெளிப்படையாகக் கூறி மறுத்துவிட்டார். ஆனால் ஆசிரியர் அவரை வாங்குப் பலகையின் மேல் ஏறித் தனது உத்தரவைச் செயற்படுத்துமாறு வற்புறுத்தினார். ஆனால் சிறுவன் தனது அண்ணனுக்கு அப்படிச் செய்வதை நினைத்துப் பார்க்க முடியாது என்று கூறி மறுத்துவிட்டார். யோசேவ்வாஸை அழைத்து மற்றவர்களைத் தண்டிப்பதை ஆசிரியர் விரும்புவதாகத் தெரிந்தது. இதனால் இந்த சிறுவன் யோசேவ்வாஸ் தனது வகுப்புத் தோழர்கள் கடினமாகத் தண்டிக்கப்படாது விவேகமான முறையில் சாதுரியமான இச்சந்தர்ப்பங்களைக் கையாளுவார். ஆனால், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உதவி செய்வதற்கு எப்போதும் தயாராக இருப்பார். மிகவும் பொறுமையுடன் மீண்டும், மீண்டும் அவர்கள் மனதில் பதியும் வரை அன்றைய நாள் பாடத்தைக் கற்றுக் கொடுப்பார்.

#### 1.4.2 மேல்நிலைப் பள்ளி

யோசேவ்வாஸ் தம்முடைய சிறிய வயதிலேயே குருத்துவ அழைத்தலுக்கான குண இயல்புகளைக் கொண்டிருந்தார். குறிப்பாக இறையன்பு, பிறரன்பு, சுயநலமற்ற தியாகம், பணி புரியும் ஆர்வம் என்பனவற்றை வெளிப்படுத்தினார். அவருடைய பெற்றோர் தமது வருமானத்தின் எல்லைக்குள் அவரது விருப்பப்படி வறியவர்களுக்கு உதவி செய்ய இடமளித்தனர். சாலக்கிராமத்தில் அவருடன் கூடவே இந்தப் பண்புகள் மிகப்பெரிய அளவில் வளர்ந்து அவருடைய பணிவாழ்வின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தன. யோசேவ்வாஸ் வளர்ந்து வரும் காலகட்டத்தில் மற்றவர்கள் அறியாவண்ணம் மறைவாக நற்செயல்கள் புரியும் பண்பு அவரில் இயல்பாகவே வளர்ந்தது. அவருடைய வாழ்வு முழுவதுமே வலக்கை செய்வதை இடக்கை அறியாதவாறு மிகச் சாதுரியமாக அடுத்தவர் அறியாமல் நன்மைகளைச் செய்து வந்தார். ஆனால், ஆரம்பத்திலிருந்தே தாம் இறைவனின் குருவாக வருவதற்குரிய ஆழமான விருப்பதை மறைக்க முயற்சி செய்யவில்லை.

யோசேவ்வாஸின் பெற்றோர் குருத்துவ வாழ்வின் பணிக்கு யோசேவ்வாஸை ஒப்படைப்பதில் தயக்கத்தைக் காட்டவில்லை. ஏனெனில் சிறுவயது முதல் இவரிடத்தில் குருவாக வேண்டுமென்ற எண்ணம் இருப்பதனைப் பெற்றோர் அறிந்திருந்தனர். யோசேவ்வாஸ் சிறுவனாக இருக்கும்போதே குருவாக உருவாக்கம் பெற செயற்படும் வகையில் எப்பொழுதும் தான் சரியெனக் கருதியதைச் செய்வார். உண்மையில் இந்த விருப்பை மறைப்பதற்கான தேவை அவருக்கு இருக்கவில்லை. ஏனெனில் அவருடைய தாயும் தந்தையும் அத்தைமார்களும் இதனை வரவேற்றார்கள்.

தங்களுடைய குடும்பத்திலிருந்து வரக்கூடிய முதலாவது குருத்துவ அழைத்தலை ஊக்குவித்து வளர்த்தெடுக்க வேண்டிய அனைத்தையும் செய்தார்கள். இதற்கு மேலும், அதிகம் செய்யவும் ஆயத்தமாகவும் இருந்தார்கள். எனினும் அனுபவமற்ற, வஞ்சகமற்ற சிறுவனின் இந்த ஆசை வெறும் கானல் நீராக மாறாமல், இறைவனின் உறுதியான அழைத்தலாக இருக்க வேண்டுமென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே கிறிஸ்தோப்பர் வாஸின் விருப்பமாக இருந்தது. சிறுவனின் ஆரம்ப பாடசாலைக் காலத்தில் காணப்பட்ட குணவியல்புகளும், நடத்தையும், அறிவுக் கூர்மையும் இந்த ஆசை இறைவனிடமிருந்து வந்ததாக எண்ணவே தோன்றியது. அதனால் அவனுடைய தந்தை கிறிஸ்தோப்பர் வாஸ் யோசேவ்வாஸின் குருத்துவ உருவாக்கத்திற்காக எந்தவிதமான தியாகங்களையும் செய்யத் தயாராக இருந்தார்.

எனவே குருத்துவ பணிக்கு அர்ப்பணிக்க விரும்பிய பெற்றோர் இலத்தீன் மொழி கற்பதற்காக “பாலிம்” இல் உள்ள மேல்நிலைப் பாடசாலைக்கு அனுப்பினர். அங்கு உலக அறிவிலும், ஞான அறிவிலும் வளர்வதற்குக் கூடிய வசதியிருந்தது. அங்குள்ள பெரிய தேவாலயத்திலே இறைவழிபாடு முறையாகவும், அழகாகவும், அருட்சிகரமாகவும் நிறைவேற்றப்பட்டன. இவையெல்லாம் வளரும் பிள்ளையில் மெழுகுபோன்ற உள்ளத்திலே ஆழப்பதிந்து பக்தி விருட்சம் பலித்து வளர்ந்தது. தினமும் காலையிற் பலிப்பூசையில் பங்குபற்றுவார். பாடசாலைக்குப் போகும் வழியில் செபமாலை சொல்லித் தியானிப்பார். சுற்றுபிரகாரம், சிலுவைப்பாதை போன்ற பக்தி முயற்சிகளில் பங்குபற்றி இன்பங் கண்டார்.

வீட்டிலே செய்தது போல் வறியவர்களுக்கு உதவிபுரிய வழியில்லாமையினால் மரித்தவர்களுக்கு உதவ முற்பட்டார். அவர்களுக்காகச் செபிப்பார். தன்னுடைய நேர்மையான பேச்சினாலும், நடத்தையினாலும் பெற்றுக் கொண்ட நற்பெயரைக் கொண்டு மாணவர்கள் மத்தியில் ஆத்துமாக்கள் பற்றிய பக்தியைப் பரப்பினார். மாலை வேளையில் தெருக்களில் ஒன்று கூடி மரித்தோருக்காக மன்றாடும்படி அழைத்தார். இதனை இவர் தன்னுடைய பணியின் போது தான் ஊழியம் செய்த கன்னடம், மற்றும் இலங்கை கிறிஸ்தவர்களுக்கு இடையிலும் பரப்பியதைக் காண்கின்றோம். மேலும், பிசாசு இந்தப் பழக்கத்தை வெறுத்தது என்பது பின்வரும் சந்தர்ப்பத்தின் மூலம் தெளிவாகின்றது.

இவர் ஆத்துமாக்கள் பக்தியை பரப்பியபோது ஒரு புளியமரத்திலே பூதங்கள் பேரிரைச்சலுடன் ஆரவாரம் செய்து அவரையும், சக நண்பர்களையும் பயமுறுத்தி அப்பக்தியை அவர்களிடமிருந்து அழித்து விடவே முடிவெடுத்தது. அவ்வேளை யோசேவ்வாஸ் நடுத்தெருவில் நெடு முழந்தாளிட்டு ஆண்டவரை வேண்டினார். உடனேயே அனைத்தும் அடங்கியதுடன் முழுமையான அமைதி நிலவியது. சிறுவர்கள் தங்களுடைய நற்செயலினை தொடர்ந்து செய்தார்கள். மேலும், யோசேவ்வாஸின் கல்விக்காலம் பற்றி ம. பாவிலுப்பிள்ளை பின்வருமாறு கூறுகின்றார். “தனது கல்விக் காலத்திலே ஞானதிரவியங்களைச் சேகரிக்கவும், அறிவுக்களஞ்சியத்தை நிரப்பவும் முழுக்கரிசனையையும் நேரத்தையும் நேர்த்தி செய்தான் சிறுவன்”.

இவரின் சொந்த ஊரினன் அன்ரோனியா கார்டோன என்பவர் இவரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். “சங்கோலே தான் எவ்விதமான புதையலைக் கொண்டுள்ளது என்பதை இன்னும் அறியவில்லை. இறைவன் இந்தப் பெற்றோரிடம் ஒப்படைத்த இந்த முத்தின் பெருமதியைக் காலம் உணர்த்தும்”

யோசேவ்வாஸ் தான் ஒரு குருவாக உருவாக்கம் பெறுவதில் மகிழ்சியும் இன்பமும் கொண்டமையினால் இவர் விளையாட்டில் அதிக நாட்டம் கொள்ளவில்லை. ஒரு குருவிடம் விளங்கவேண்டிய பக்தியும், புண்ணியமும் அளவு கடந்ததாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தார். ஆயினும் இவரிடம் விளங்கிய பக்தி இவர் தம் அறிவை வளர்த்துக் கொள்வதற்குத் தடையாக இருக்கவில்லை. கல்வியில் கொண்டிருந்த இத்தகைய ஆர்வம் காரணமாக இயேசு சபையினரால் தலைநகரில் நடத்தப்பட்டு வந்த பல்கலைக்கழகத்தில் சொல்லியலையும், மனிதத்துவத்தையும் கற்றுக் கொள்வதற்காக அவருடைய தந்தை அவரை அனுப்பத் தீர்மானித்தார். புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் தங்கியிருந்து தம் முன்னைய வாழ்க்கை முறைகளை எதுவிதமான இடையூறுகளும் இன்றி தொடர்ந்தார். தன்னுடைய சிந்தனையை ஒருபோதும் சிதறவிடாமல் சிறந்த குருவாக உருவாக்கம் பெறுவதற்கு வேண்டிய பண்புகளையும், அறிவையும் பெற்றுக் கொள்வதிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தினார். இவர் ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும், அடக்கத்துடனும், எளிமையுடனும் வாழ்ந்தார்.

### 1.5 குருத்துவக் கல்வி

யோசேவ்வாஸ் அடிகள் இயேசு சபையினரால் நடத்தப்பட்ட புனித பவுல் கல்லூரியில் தனது இலக்கணக் கல்வியை வெற்றிகரமாக நிறைவுசெய்தார். தொடர்ந்து டொமினிக்கன் சபையினரால் நடத்தப்பட்ட பிரசித்தி பெற்ற புனித தோமஸ் அக்குவைனாஸ் உயர் கல்விக்கூடத்தில் மெய்யியல், இறையியல் கற்கை நெறிகளை மேற்கொண்டார். இவர் கல்வி பயின்ற காலத்தில் கல்லூரியுடன் இணைந்திருந்த செபமாலை அன்னை ஆலயத்தில் ஏனைய குருமாணவர்களுடன் தங்கியிருந்து பயிற்சி பெற்றார். இவ்வாறு கோவாவில் தங்கியிருந்த ஆறு வருட காலமும், சன்கோலேயிலும், பெனோளிமிலும் வாழ்ந்தது போன்று அர்ப்பணத்துடன் வாழ்ந்து, பல பயனுள்ள விடயங்களைக் கற்று, நல்லதொரு குருவாக உருவாக்கம் பெறவேண்டும் என்பதை இலக்காகக் கொண்டிருந்தார். படிப்பின்மேல் இவர் கொண்டிருந்த ஆர்வமோ அல்லது சகபாடிகளின் நட்போ சிறிதும் கூட இவரது செப, தவ, புண்ணிய வாழ்வைத் தளர்வடையச் செய்யவில்லை. ஆரம்ப காலத்தில் இருந்து தம்மை முதன்மைப்படுத்தாத வாழ்வின் பழக்கம், மேலும் அவர் குருத்துவத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் போது ஆழமாக வேரூன்றியது.

#### 1.5.1 குருவாக திருநிலைப்படுத்தலும், பணியும்



# ...யின் திருத்தூதரான
# தூய வாழ்வும் இலங்கை வருகையும்

1671ஆம் ஆண்டு தன்னுடைய இருபதாவது வயதில் இவர் குருத்துவ வாழ்வுக்கும், இறைபணிக்கும் தன்னை அர்ப்பணித்து குருத்துவத்திற்கு முன் வழங்கப்படும் பட்டங்களைப் பெற்றார். இருபத்து மூன்றாம் வயதில் உபதொண்டர் பதவியும், அடுத்த ஆண்டு தொண்டர் பதவியையும் பெற்றார். 1676இல் யோசேவ்வாஸ் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இப்புதிய குரு தனது பேராசிரியர்களிடமிருந்து மிகச் சிறந்த நன்னடத்தைச் சாட்சியங்களைப் பெற்றிருந்ததனால் கோவாவின் மிகப்பரந்த ஆன்மீக எல்லைகளுக்குள் நற்செய்தி போதிப்பதற்கும், பாவமன்னிப்பு அருளடையாளங்களை வழங்குவதற்கும் அனுமதி பெற்றுக் கொள்வதில் எவ்வித சிரமங்களும் இருக்கவில்லை. ஆனால் அவருக்கு எந்தவிதக் குருத்துவ நிர்வாகப் பொறுப்பும் அளிக்கப்படாததால் அவர் தன்னுடைய சொந்தக் கிராமமான சன்கோலேயில் பங்குக் குருக்களுக்கு ஆர்வத்துடனும், விருப்பத்துடனும் உதவி வந்தார்.

கடவுளை புகழ்ந்தேத்தவும், இறந்த ஆத்துமாக்களுக்கு உதவி செய்யவும், பலிப்பூசையைப் பக்தியுருக்கத்துடனும் ஒப்புக் கொடுப்பார். பாவிகளான மனிதரை ஆண்டவருடன் ஒப்புரவாக்குவதற்கு நெடுநேரம் பாவசங்கீர்த்தன ஆசனத்தமர்ந்து ஆத்துமாக்களைச் சுத்திகரிப்பார். மீட்பரின் நற்செய்தியை அடிக்கடி பிரசங்கஞ் செய்வார். துன்மார்க்கத்தை கண்டித்து நன்னடத்தை வழியை விளக்குவார். அவருடைய தியாக சீவியமே மேலான போதனையாக இருந்ததால் அநேக மனிதர் “இனிப்புப் பாணிக்கு வரும் எறும்புகள் போல” அவருடைய அமிர்த பிரசங்கங்களைக் கேட்க வருவார்கள். வார்த்தையைக் கேட்டவர்கள் வாழ்க்கையைத் திருத்தி வாய்மையான கிறிஸ்தவர்களாகச் சீவிக்கப் பிரயத்தனை செய்வார்கள்.

அந்நாட்களில் இரு முக்கிய நபர்கள் டொன் றொட்றிக்கோ டோ கோஸ்ரா, லூயிஸ் கொன்சால்வெஸ் கோட்டா ஆகியோர் தொடர்ச்சியாகக் கோவா மாநிலத்தின் ஆளுநராக பணியாற்றிய காலகட்டத்திலே தமது ஆன்மீக வழிகாட்டியாக சன்கோலையின் யோசேவ்வாஸ் அடிகளாரையே கொண்டிருந்தனர். பணிசெய்ய வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருந்த இளைமைத்துடிப்பும், ஆர்வமும் கொண்டிருந்த இந்தக் குருவுக்கு இப்பணிகள் திருப்தியளிக்கவில்லை. எனவே தம் கிராமத்திலிருந்து உயர் கல்வியை அல்லது குருத்துவக் கல்வியை மேற்கொள்ள இருந்தவர்களுக்கு இலத்தீன் மொழியை கற்பித்தார். இதில் கற்கைநெறியை மேற்கொண்ட முதல் தொகுதி மாணவர்களாகிய யோசேப் கர்வாலோ (Joseph Carvalho) மற்றும் யோசேப் டொ மெனஸ்செஸ் ஆகிய இருவரும் முதன்மையானவர்கள் ஆவார்.

### 1.5.2.யோசேவ்வாஸின் மனநிலை.

யோசேவ்வாஸ் குருவாகிப் பணிசெய்த காலத்தில் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்கர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் அவருடைய காதில் விழுந்தது. மனதிற்பதிந்து, இறைவனின் விசேட அழைப்பாக உருவெடுத்தது. திருச்சபையின் தேவைக்கு எவ்வாறு உதவ முடியும் என்று யோசித்தார். இலங்கைத் தீவின் பக்கம் இந்தக் குருவின் இதயத்தை இறைவன் திருப்பினார். இந்த இறைவனின் அழைப்பினைப் பற்றி யோசேவ்வாஸின் எந்தவொரு விளக்கத்தையும் நாம் பெறமுடியாது. ஆயினும் மற்றவருடைய சாட்சியங்களில் இருந்தே இறைவன் தன்னுடைய விசேட பணிக்காக இவரைத் தெரிந்தெடுத்து, தனிப்பட்ட முறையிலே இவரது பணிக்காலம் முழுவதும் இவரை வழிநடத்தினார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. எப்போதும் மற்றவர்களின் குரலை ஆண்டவருடைய குரலாகக் கருதி தன்னுடைய சொந்த விருப்பத்தை நாடாமல் வாழ்ந்தவர் இவர். இந்த ஆழமான தாழ்ச்சியும், இறை நம்பிக்கையும் இறைவன் இவரைத் தான் விரும்பிய இடத்திற்கு அனுப்பவும், இதற்காக அவரை ஆயத்தம் செய்யவும், இப்பணியை பயனுள்ள விதமாக நிறைவேற்றுவதற்கும் ஏற்றதாக அமைந்தது.

கைவிடப்பட்டு, துன்புறுத்தப்பட்ட இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்குப் பணிபுரியத் தனது வாழ்வை அர்ப்பணித்தார். இலங்கையில் கலாபனை அதிகம் என்றும், ஒல்லாந்தரின் காவல்களும் உண்டு என்பதையும் அறிந்து கொண்டவராய் உயிரை துச்சமென நினைத்தாலே இலங்கை தீவிற்கு செல்ல முடியும் என்பதனை தெளிவாகப் புரிந்து கொண்டார். தன்னை வழிநடத்த வேண்டுமென்று இறைபராமரிப்பில் நம்பிக்கை கொண்டார். தம்மைத் தயார்படுத்தினார். அவர் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் மனித ஞானத்தில் அவர் தனது இலட்சியத்திலிருந்து விலகிச் செல்வதாகத் தோன்றினாலும், அவரது வாழ்வின் நிகழ்வுகள் அவர் தனது இலட்சியத்தை நோக்கியே நடத்தப்பட்டார் என்றும், அந்த இலட்சியத்தை அடைவதற்கு வேண்டிய அறிவையும், அனுபவத்தையும் கொடுத்தன என்பதும் உண்மை. இவரது ஒவ்வொரு அடியிலும் இறைவனின் வழிகாட்டுதல் அதிகமாய் இருந்தது.

இலங்கைக் கத்தோலிக்கர்கள் எல்லா நிலையிலும் முழுமையாகக் கைவிடப்பட்டு இருந்தார்கள். போர்த்துக்கேய மன்னன் இந்தியாவின் மறைப்பணித்தளங்களின் காவலனாகவும், அவற்றின் மட்டில் எல்லா அதிகாரங்களையும் கொண்டிருந்தான். எனினும் இந்தியாவிலிருந்த அவனது பிரதிநிதிகளை திருச்சபை சிவில் அதிகாரிகள் இலங்கை கத்தோலிக்கருக்கு உதவுவதற்காக எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இலங்கையைத் தன்னுடைய மறைமாவட்ட நிர்வாகத்திற்குள் கொண்டிருந்த கொச்சின் ஆயர் முதலாக தனது மந்தையின் ஒரு பகுதியாக இருந்த இலங்கை கத்தோலிக்கருக்கு உதவ எதுவித முயற்சியும் மேற்கொண்டதாக தெரியவில்லை. போர்த்துக்கேய ஆட்சியின் போது இலங்கையில் நற்செய்திப் பணியாற்றிய துறவற சபைகள் முதலாக இங்குள்ள கத்தோலிக்கருக்கு உதவி செய்ய முடியாமல் அல்லது தங்கள் சபையினர் முன்பு மதம் மாற்றியவர்கள் மட்டில் அக்கறையில்லாமல் இருந்தார்கள்.

போர்த்துக்கேய அரசு இலங்கைக் கத்தோலிக்கர் மட்டில் ஒன்றும் செய்ய முடியாத நிலை இருந்ததென்பது உண்மையும், யதார்த்தமும் ஆகும். இந்திய மறைமாவட்டக் குருக்கள் பெருந்தொகையினர் கோவாவில் படித்தவர்கள். பயிற்றப்பட்டவர்கள். அறிவும் அனுபவமும் கொண்டவர்கள். பங்குகளில் பணியாற்றிய அனுபவமுள்ளவர்கள். எனினும் வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரியும் பழக்கம் துறவற சபைகளினால் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்ற காரணத்தால் தங்கள் நாட்டிற்கு வெளியே சென்று பணிபுரிவதை அவர்கள் விரும்பவில்லை. மேலும் கோவா குருக்கள் குழுவாகவன்று தனிநபர்களாக இருந்தனர். அவர்களுள் ஒருவர் இலங்கைக்குச் சென்று பணிபுரிந்து அத்தீவில் இறந்ததால் அவருடைய இடத்திற்கு இன்னுமொருவரை அனுப்பப்படுவதற்கான உத்தரவாதம் இருக்கவில்லை. ஏனெனில் ஒரு குரு இலங்கைக்கு செல்வதற்கு தானாகவே முன்வந்தால் அன்றி எந்த ஆயராலும் ஒரு மறைமாவட்டக் குருவை ஆபத்துக்கள் நிறைந்த இவ்வாறான பணிக்கு செல்லும்படி கட்டளையிட முடியாதிருந்தது. இலங்கைத் திருச்சபையைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய ஒரே வழி அப்பொறுப்பை ஒரு துறவற சபை ஏற்றுக்கொள்வதாகும். ஆனால் இக்காலத்தில் இந்தியாவில் பணியாற்றிய துறவறசபைகள் இந்தியர்களைத் தங்கள் சபைக்குள் உள்வாங்குவதில்லை என்னும் கடும் போக்கான கொள்கையைக் கையாண்டனர். அதேவேளை இப்பின்னணியில் ஒரு ஐரோப்பியத் துறவி இலங்கைக்குள் ஒல்லாந்தரின் கண்காணிப்பின் மத்தியில் நுழைவது முடியாததான விடயமாக இருந்தது.

### 1.6 இலங்கைப் பணிக்கான அழைப்பு

இலங்கையில் பணியாற்றுவதற்கு யோசேவ்வாஸ் அடிகளுக்கு இறைவனின் அழைப்பு வந்தது. எப்படி இலங்கையின் நிலையினை அறிந்து கொண்டார் என்பதனை உறுதியாக கூற இயலவில்லை என்றாலும், துன்பங்களை அனுபவித்த கத்தோலிக்கர்கள் மட்டில் அக்கறையுள்ள ஒரு குருவாக இருந்தார். எனினும் அயலில் ஒரு நாடு உண்டு. அங்கே எந்தவொரு குருவுமில்லை. ஆனால் கோவையில் பல குருக்கள் தங்கள் குருத்துவக் காலத்தை வீணடித்துக் கொள்கிறார்கள். இது இவருக்கு மனவேதனையை ஏற்படுத்தியது. இலங்கையில் பணி செய்வதிலும் பார்க்க வேறு எவ்வகையில் கடவுளுக்கு பணிபுரிய முடியும் என்பதில் உறுதியாய் இருந்தார்.

இலங்கை செல்லும் விடயம் பற்றி யோசேவ்வாஸ் தன் சக நண்பர்களுடன் கலந்துரையாடினார். அவர்களுள் சிலர் தன்னோடு சேர்ந்து இலங்கைத் திருச்சபைக்கு மீண்டும் உயிர் அளிப்பர் என உள் மனதில் எண்ணினார். ஆனால் அவர்களோ இதனை நடைமுறை வாழ்க்கைக்கு முரணானது எனக் கருதினார்கள். ஒல்லாந்தரின் அடக்குமுறைகளை எண்ணிப் பயந்திருந்த இவர்கள் இலங்கையில் பணி செய்ய விரும்பவில்லை. ஆனால் யோசேவ்வாஸ் அடிகள் எக்குருவாயினும் துன்பப்படுகின்ற கத்தோலிக்கருக்குப் பணி செய்ய இலங்கைக்குச் செல்கின்றபோது அவர் தனிமையையும், பெரும் ஆபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டும். அவர் மீண்டும் கோவாவிற்கு திரும்ப வேண்டும் எனும் சிந்தனை சற்றும் இல்லாதவராக இருக்கவேண்டும் எனும் எண்ணம் கொண்டவராய் இருந்தார்.

மற்றைய குருக்கள் எவரும் தன்னோடு இணைந்து கொள்ளாத நிலையில் அவருக்கு வேறு எதுவித உதவியும் இருக்கவில்லை. தனியாகவே செல்வோம். ஆகவே, அன்ரோனியோ, பிறண்டோவின் மரணத்தையொட்டியும், இலங்கைக்குப் பணிசெய்யக் குருக்களை அனுப்புவதற்கென்றும் கூட்டப்பட்ட கோவாவின் குழுக்கள் அவைக்கு யோசேவ்வாஸ் அடிகள் சென்றார். இலங்கைக்கு பணிசெய்ய போவதற்காக யோசேவ்வாஸ் அடிகள் முன்வந்தமை அவைக்கு மகிழ்ச்சியூட்டியது. காரணம் இலங்கைத் திருச்சபையை அதன் துன்பங்களிலிருந்து விடுவிக்க விரும்பியதற்காக அல்ல. மாறாக இவ்வாறு ஒரு குருவை இன்னொரு இடத்திற்கு அனுப்புவதில் தாங்கள் அக்கறை கொண்டுள்ளோம் என்பதற்காகவே. எனவே யோசேவ்வாஸ் அடிகளை கோவா பேராயரின் குருமுதல்வராக, இலங்கைக்கு அனுப்புவதற்குப் பதிலாக கன்னடத்திற்கு போகும்படியாக அவை முன்மொழிந்தது. இலங்கையைப் போன்றே கன்னடத்திலும் நீண்ட காலமாக குருக்கள் எவரும் இல்லை என்பதை யோசேவ்வாஸ் அடிகள் நன்கு அறிந்திருந்தார். ஆனால் அவர் இலங்கைக்குப் பதிலாக கன்னடத்திற்கு அனுப்பும் அவையின் நோக்கத்தை அறியாதவர் போல் இருந்தார். இந்நிலையில் யோசேவ்வாஸ் அடிகளார் தன் ஆன்மீக வழிகாட்டியிடம் சென்று அறிவுரை பெற்றுக்கொண்டார். அவர் யோசேவ்வாஸை கன்னடத்திற்கு போகுமாறு அறிவுறுத்தினார். ஏனெனில் கன்னட மாநிலமானது ஒல்லாந்தரால் ஆளப்பட்டுக் கொண்டிருப்பினும் அவர்களது நிர்வாகம் கொழும்பிலிருந்து செயற்பட்டுக் கொண்டிருந்தது. இப்படியான சந்தர்ப்பத்தில் கன்னடத்திலிருந்து இலங்கை மண்ணிற்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

யோசேவ்வாஸ் அடிகள் பங்குனி 1681இல் தனது மருமகன் யோசேப் கர்வாலோ அவர்களுடன் தனது பணியைக் கன்னடத்தில் ஆரம்பித்தார்.

### 1.7 கன்னடத்தில் பணிகளும் ஏற்பட்ட சவால்களும்

#### 3.8.1 கன்னடத்தில் கத்தோலிக்கரின் நிலை

கன்னடத்தின் நிலை கவலைக்குரியதாக இருந்தது. போர்த்துக்கேயப் படைகள் தமது அரணாயிருந்த கன்னட இராச்சியக் கரையோரங்களைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்ட வேளையில் கோவை பேராயரும், தமது ஆளுகையின் கீழிருந்த இப்பகுதிகளில் பணிபுரிந்த போர்த்துக்கேய குருக்களைத் திரும்ப அழைத்துக் கொண்டார். அக்காலச் சூழ்நிலை மதவழிபாட்டிற்கு ஏற்றதாக அமையாததால், இந்த முடிவுக்கு வருவதைத் தவிர மாற்று வழியொன்றும் இருக்கவில்லை. இங்கு ஆலயங்கள் எல்லாம் அழிக்கப்பட்டிருந்தன. செபஸ்ரியன் டி றோகோ என்பவரின் கூற்றுப்படி குருக்கள் எவரும் நாட்டிலில்லாதபடியால் அந்த ஆலயங்களெல்லாம் எசமானில்லாத இல்லங்கள் போலிருந்தன.விசுவாசிகளுக்கு அருட்சாதனங்கள் வழங்கப்படவில்லை. தற்செயலாக கோவைக் குருக்கள் யாராவது கரையோரங்களை சந்திக்கச் சென்றால், பிள்ளைகளின் திருமணச்சடங்கை நிறைவேற்றிய அதேவேளையில் பெற்றோரின் திருமணச் சடங்கையும் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

உரோமாபுரி தலையிடுவதைக் கோவை பேராயர் வன்மையாக எதிர்த்தார். இவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளினால் கன்னட பிரதேசத்தின் ஆன்மீக வாழ்வு நிலை பாதிப்படைந்தது. இப்பின்னணியிலேயே யோசேவ்வாஸ் அடிகள் இலங்கை சென்று பணியாற்ற முன்வந்தபோது, கோவை திருஅவை கன்னடா மீது தங்கள் நிர்வாக அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள அவரை கன்னடத்திற்கு அனுப்பியது. ஆனால் யோசேவ்வாஸ் அடிகள் கன்னட மக்கள் மீது கொண்ட பரிவால் தாம் கன்னடா சென்று பணிபுரிய முன்வந்தார். யோசேவ்வாஸ் அடிகள் மறைமாவட்டக் குரு முதல்வராகவும், கன்னட மறைமாவட்ட முதல்வராகவும் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டார்.....

ஆக்கம் செல்வி. காமலின் தயானி டேவிட்

தொடரும்

# புனித யோசேவ்வாஸைப் பின்பற்றி, நான் சிறிய புனிதராவேன்

அன்னைமரி மீது அதிக பக்தியுடையவராக திகழ்ந்தமை, அவருக்கு ஆலயம் அமைத்தமை, கண்டியில் திருச்சிலுவைக்கு முன் காலையும் மாலையும் முழந்தாள்படியிட்டு, செபமாலை செபித்தமையால் மிகவும் பிரபல்யமானார்.



1696ல் வரட்சியின்போது, தமது செபத்தால் மழைப் பொழியச் செய்தல். ஆற்றைக் கடத்தல். கண்டியில் வைசூரி நோயால் பாதிக்கப்பட்ட-வர்களைப் பராமரித்தல்.



ஒல்லாந்து ஆட்சிக்குட்பட்ட இடங்களில் பணியாற்ற கிடைக்காமை. மாறுவேடம் தரித்து இரவில் இரகசியமாக திருப்பலி ஒப்புக்கொடுத்து, மறையைப் பரப்பியமை. சிறையிலிருந்தமை, மட்டக்களப்பில், மரத்தில் கட்டுவிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டமை.



பொதுநிலை தலைமைத்துவம் வழங்கல். திருவழிபாட்டை தேசியமயமாக்களில் பங்களிப்பு. பவனி, பாஸ்கா நாடகம் இந்நாட்டிற்காக வடிவமைத்தல். தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மறைக்கல்வி நூல் மொழிபெயர்த்தல். 1705ல் இலங்கை எட்டு பங்குகளாகப் பிரிக்கப்படல்



# சுய முயற்சி

ஒரு வயற்காட்டில் ஒரு குருவி கூடு கட்டி அதில் குஞ்சு பொரித்திருந்தது.

அந்த வயற்காட்டில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்கதிர்கள் அறுவடைக்குத் தயாராய் இருந்தன.

ஒருநாள் தாய்க்குருவி உணவு தேடச் செல்லும் முன், தன் குஞ்சுகளிடம் “இப்போது அறுவடை நேரம் நெருங்கிவிட்டது. நாம் கூட்டை மாற்றவேண்டும். நில உரிமையாளர் வந்தால் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று கவனித்து வையுங்கள்” என்று கூறிச் சென்றது.

அங்கு வந்த நில உரிமையாளர் தன் மகனிடம் நாளை நம் உறவினருடன் வந்து கதிர்களை அறுக்கவேண்டும் என பேசிக் கொண்டதைத் தன் தாயிடம் குஞ்சுகள் கூறின.

அதற்குத் தாயக் குருவி கவலை வேண்டாம். இப்போது நாம் கூட்டை மாற்றத் தேவையில்லை என்றது.

மறுநாளும் தாய்க்குருவி உணவு தேடச் செல்லும் முன், அதையே கூறிச் சென்றது. அன்றும் நில உரிமையாளர் தன் மகனிடம் நம் அண்டை, அயலாருடன் வந்து கதிர்களைக் கொய்ய வேண்டும் என்று கூறியதை, தாய்க்குருவி திரும்பியவுடன் குஞ்சுகள் அதனிடம் சொன்னது. அதற்குத் தாய்க்குருவி இப்போது கூட்டை மாற்ற அவசியம் இல்லை என்றது.

அதற்கு மறுநாளும் அதையே சொல்லிச் சென்றது தாய்க்குருவி.

அன்று நில உரிமையாளர் தன் மகனிடம், நாளை நாமே வந்து அறுவடை செய்யலாம் என்று கூறினார். நடந்ததைக் குஞ்சுகள் கூறியவுடன் தாய் குருவி எப்போது தங்கள் வேலையை, தாங்களே செய்யத் துணிந்துவிட்டனரோ, நாம் இன்றே கூட்டை மாற்றவேண்டும் என்றது.






- ✖ இவர் 1651ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி இந்தியாவின் கோவா எனும் நகரில் பிறந்தார்.
- ✖ இவர் இலங்கையில் ஒல்லாந்த அடக்குமுறை காலத்தில் இலங்கை கத்தோலிக்கர்க்கு சேவை செய்தார்.
- ✖ இவர் ஈழத்தில் யோசேவ்வாஸ் முனிந்திரர் எனவும் அழைக்கப்பட்டார்.
- ✖ இவர் 1711ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி கண்டி மாநகரில் இறந்தார்.
- ✖ 1995ம் ஆண்டு தை மாதம் 21ம் திகதி திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரினால் அருளார் பட்டம் வழங்கப்பட்டது.
- ✖ 2015ம் ஆண்டு தை மாதம் 14ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் காலிமுகத்திடலில் வைத்து புனிதராக திருநிலைப்படுத்தினார்.

ஆக்கம் : அபினா செவ்வந்தி, தரம் 07.

# புனித யோசேவ்வாஸ்

புனித அருளாளரான யோசேவ்வாசே
இந்த உலகில் எமக்கு ஒரு கொடையாக
வந்து பிறந்தீரே பல மக்களை சுகப்படுத்தி
பல பேருக்காக செபித்து
பல அவமானங்களை அனுபவித்து வாழ்ந்தீரே
இன்று புனிதர் பட்டம் பெற்று எங்களுக்காக
இறைவனிடம் செபித்து எங்களை வாழ
வைத்தீரே அதேபோல் நாங்களும் உம்மைப்
பின்பற்றி உதவி செய்து வாழ எங்களுக்கு
உதவி செய்யும்.

ஆக்கம் : போல் ராஜ், தரம் 07.

அவர் சொன்ன
வார்த்தைகளே
ஆண்டவரைக் காட்டியதே...
அவர் போன
பாதையெங்கும் அவரை
புனிதராக ஆக்கியதே...
அவர் இறந்து இறைபதம்
அடைந்தாலும்
அவரை உலகெங்கும்
போற்றியதே...
அவரை காண்பவர் எல்லாம்
இறைவனின் உள்ளத்தை
அடைந்தனரே...


ஆக்கம் : றொஷாலி, தரம் 07.

1651ம் ஆண்டு சித்திரை
மாதம் 21ம் திகதி பிறந்து
ஓர் ஏழையாக வாழ்ந்து
வெயிலால் தவித்த கண்டி
மக்களுக்கு குளிர்ச்சியை
அளித்து மக்கள்
உங்களுக்கு மரியாதை
செலுத்தி 1711ம் ஆண்டு
தை மாதம் 16ம் திகதி
இறந்து 2015ம் ஆண்டு
தை மாதம் 14ம் திகதி
புனிதரானார்.


ஆக்கம் : மார்க் வினில்ஷன், தரம் 07.





## புனித யோசேவ்வாஸ் ஆண்டையொட்டி மட்டக்குளி, புனித மரியாள் மறைப்பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களும், சித்திரங்களும்



ஆக்கம் : M. ஜெனிரா, தரம் 10



ஆக்கம் : C. மேரி கனிசியா, தரம் 10



ஆக்கம் : G. விஷாகரன், தரம் 10, புனித யோவான் மகா வித்தியாலயம்

## மாணவர் ஒளி



# உன்னால் முடியும் தம்பி!

தம்பி, தங்கை... உன்னால் முடியும்! எல்லாமே உன்னால் முடியும் என்று சொல்லவில்லை. உன்னுடைய உள் ஆற்றல், தனித்திறன், பயிற்சி அல்லது கல்வி, ஊக்கம் ஆகியவற்றின் அளவிற்கு ஏற்ப உன்னால் செயல்பட முடியும். வெற்றி பெறவும் முடியும். ஆனால் அதற்குத் தன்னம்பிக்கை மிக அவசியம்.

**"பயிற்சி இல்லாததால் அவர்களுக்கு அறிவு போதவில்லை. அறிவு இல்லாததால் நம்பிக்கை இல்லை. நம்பிக்கை இல்லாததால் வெற்றியை இழந்தார்கள்"** என்று ஜீலியஸ் சீசர் சொன்னான். ஐந்து வயதுப் பையன் ஒருவன் படம் வரைந்து, வண்ணம் தீட்டிக் கொண்டிருந்தான். **"என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"** என்று அம்மா கேட்டாள். **"கடவுளின் படத்தை வரைந்து கொண்டிருக்கின்றேன்"** என்றான் சிறுவன். **"கடவுள் எப்படி இருப்பார் என்று யாருக்கும் தெரியாதேப்பா..."** என்றாள் அம்மா. **"நான் வரைந்து முடித்தவுடன் எல்லோருக்கும் தெரிந்துவிடும் அம்மா"** என்றான் சிறுவன் உறுதியாக. அந்தச் சிறுவனின் மன உறுதி, தன்னம்பிக்கை எல்லோருக்கும் வேண்டும். தன்னம்பிக்கை என்றால் என்ன என்று விளக்குவதை விட தன்னம்பிக்கை உள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் என்று கூறுவது எளிது.

தன்னம்பிக்கை உள்ளவர்கள் தங்கள் காலில் நிற்பார்கள். துணிச்சலோடு, தோல்வி என்ற அச்சம் இன்றி ஒரு செயலில் இறங்குவார்கள். தங்கள் செயலுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வார்கள். முடிவெடுக்கும் திறனுடையவர்கள். உடல் உணர்ச்சி, ஆன்ம சக்தி பொங்கும் அவர்களிடம் சுருக்கமாகச் சொன்னால் நீங்கள் விரும்புகிற வாழ்க்கையை நீங்கள் வாழ முடியுமா என்பதைக் காட்டும் அளவுகோல்தான் தன்னம்பிக்கை.

### தன்னம்பிக்கை ஏன் வேண்டும்?

87.9 வீதத்தினர் தன்னம்பிக்கை இல்லாததால் வெற்றி பெறாமல் பின்தங்கிப் போகிறார்கள் என்பது ஓர் ஆய்வின் முடிவு. பணம் தேடுவதிலிருந்து வேலை, குடும்ப வாழ்க்கை, பிறருடைய அன்பை பெறுவது, இலக்கைத் தேடி அலைந்து வெற்றி காண்பது, உண்மையான மகிழ்ச்சி என்று வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் தேவைப்படுவது தன்னம்பிக்கைதான்.

எவ்வளவுதான் தன்னிலை அறியும் பயிற்சி பெற்றிருந்தாலும் சிலருக்குத் தங்களைப் பற்றியே ஓர் உறுதியான எண்ணம் இருக்காது. ஆனால் பிறர் தங்களை மதிக்க வேண்டும், பெற்றோர் - நண்பர்கள் - ஆசிரியர்கள் பாராட்ட வேண்டும் என்ற ஆசை இருக்கும். புதியனவற்றை உருவாக்க வேண்டும், சாதிக்க வேண்டும் என்ற ஆசை. ஆனால் நம்மிடம் தேவையான திறன்கள் உள்ளனவா என்ற ஐயம். சிலரிடம் யாரையும் சார்ந்திராமல் சுதந்திரமாகச் செயல்பட விருப்பம்; ஆனால் யாராவது உன்னிடம் திறன்கள் இருக்கின்றன என்று உற்சாகப்படுத்த வேண்டும் என்ற தேவை. இப்படிப்பட்டவர்களுக்குத்தான் தன்னம்பிக்கை ஊட்டும் பயிற்சி அவசியம்.

### தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது எப்படி?

முதலாவதாக, கடவுள்மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். திருவிவிலியத்தில் தாவீது கோலியாத்தை வென்ற நிகழ்ச்சி வருகிறது. தாவீது இடைச்சிறுவன். கோலியாத் இஸ்ரயேலரின் பகைவன். இராட்சதன் போன்ற உடல் அமைப்பு. இஸ்ராயேல் படையே நடுங்கி நிற்கிறது. சிறுவன் தாவீது அவனை எதிர்கொள்கிறான். **"நீ வாளையும், ஈட்டியையும் ஏந்தி என்னை எதிர்க்க வருகிறாய். நான் ஆண்டவரின் பெயரால் வருகிறேன்"** என்று சூளுரைத்து ஒரு கவண் கல்லால் அரக்கனை வீழ்த்துகிறான். இறை நம்பிக்கை தாவீதுக்கு வெற்றியைத் தேடித் தருகிறது.

இயேசு கிறிஸ்துவின் சீடர் பவுலடியார் மூன்று வழிகளில் **"நம்பிக்கை"** என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவின் உறவில் மேலுள்ள நம்பிக்கை, தன்மேல் நம்பிக்கை, பிறர்பாலுள்ள நம்பிக்கை, கடவுளில் நம்பிக்கை இல்லை என்றால் சுயநலம் மேலோங்கும். தன்மேல் நம்பிக்கை இல்லை என்றால் தோல்விதான். பிறர்மேல் நம்பிக்கை வைத்துவிட்டால் எல்லாவற்றையும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்போம். மன அழுத்தமே மிஞ்சும். எனவே, முதலில் உங்களுடைய சுய மதிப்பீட்டைக் கடவுளின் விழுமியங்களுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளுங்கள். எத்தகைய பிரச்சினைகள், சிக்கல்கள், இருந்தாலும் நம்முடைய நம்பிக்கை அவற்றை வெற்றி கொள்ளும்.

அடுத்து நன்றி பாராட்டுங்கள், உங்களுடைய திறமைக் குறைகளை, தோல்விகளை எண்ணி மனம் தளராமல் உங்களுக்குக் கடவுள் தந்திருக்கும் தனித்திறன்கள், அன்புநிறை பண்புநலன்கள் ஆகியவற்றைக் குறித்து நன்றி செலுத்துங்கள். உங்களுடைய வெற்றிகளை, அவை எத்துணை சிறியனவாக இருந்தாலும் பட்டியலிடுங்கள். நேற்றைய வெற்றிகள் இன்றைக்கு நம்பிக்கையை வளர்கும் ஊக்கிகள்!

மூன்றாவதாக நல்ல நண்பர்களை, தன்னம்பிக்கையுள்ள நண்பர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். எனக்குப் பழக்கமான ஒருவர் அரசாங்க எழுத்தர் வேலை பார்த்து வந்தார். ஓய்வு நேரத்தில் பொறியியல் படித்து வந்தார். அவருடைய நண்பர்கள் சிலர் அவரைக் கேலி செய்தார்கள். **"உனக்கெல்லாம் எதற்கு? உன்னால் ஏ.எம்.ஐ.ஈ எல்லாம் படிக்க முடியுமா?"** என்று அவருடைய முயற்சிக்குத் தடை போட்டார்கள். ஆனால் அவர் அசைக்க முடியாத தன்னம்பிக்கையுடன் படித்தார். பட்டம் பெற்றார். எழுத்தர் வேலையை விட்டு விட்டு பொறியியலாளராகி விட்டார். கேலி பேசிய நண்பர்கள் எழுத்தாளர்களாக இன்னும் இருக்கிறார்கள். எனவே, உற்சாகமூட்டும் நண்பர்களுடன் பழகுங்கள். நீங்கள் சோர்ந்து போகும்போது, அவர்களும், அவர்கள் தோல்வி மனப்பான்மையில் துவண்டு போகும் போது நீங்களும் உற்சாகமூட்டலாம். நம்பிக்கை ஊட்டலாம். இல்லையென்றால் ஒரு பெரிய சரக்குப் பேருந்தை ஒரு சிறிய கல் நகராமல் தடுத்து நிறுத்தி விடுவது போல உங்களுடைய முன்னேற்றத்தை தோல்வி மனப்பான்மையுடைய நண்பரின் ஒரு சொல் கெடுத்துவிடும்.

இன்னொரு இன்றியமையாத பண்பு உங்களுடைய மனநிலை. உங்களைப் பற்றி நல்லதையே மனக்கண்முன் கொண்டு வாருங்கள். உங்களுடைய சிறப்புகளை ஒரு தாளில் எழுதுங்கள். மனதிற்கு ஓர் உற்சாகம் கிடைக்கும். தோல்விக்குப் பிறகும் மன உறுதியோடு இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். திறந்த மனதோடு எல்லாவற்றையும் பாருங்கள். தோல்விக்குப் பிறர் மேல் பழி போடாமல் அதற்கான பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுங்கள். பிறருடைய வெற்றிகளை மனந்திறந்து பாராட்டுங்கள். வெறுப்பை உமிழாதீர்கள். உடல், மூளை, உணர்வு ஆகியவை களைப்படையும் வரையில் உழையுங்கள். உங்கள்மேல் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரவேண்டும். உங்களைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள்.

நீங்கள் பிறந்த வீட்டிற்கும், உங்களுடைய சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் உங்களால் இயன்றதைச் செய்யுங்கள். பிறருக்கு உதவுவது, நீங்கள் ஆற்றும் நல்ல செயல்கள் உங்களுடைய தன்னம்பிக்கையை மேலும் வளர்க்கும். இவற்றோடு கீழே குறிப்பிட்டவற்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

- நல்ல உடற்பயிற்சி, சத்துள்ள உணவு உண்டு உடல் நலத்தைப் பேணுங்கள்.
- வேகமாக நடங்கள். உறுதியாகப் பாதங்களைப் பதித்து நில்லுங்கள்.
- பேசும்போது அழுத்தம் திருத்தமாகப் பேசுங்கள். வாய்க்குள்ளேயே முணுமுணுக்காதீர்கள்.
- முன்னால் இருப்பவருடைய கண்களைப் பார்த்துப் பேசுங்கள்.
- வகுப்பறையிலோ, கூட்டங்களிலோ முன் வரிசையில் அமருங்கள்.
- கூட்டங்களில் உரையாற்றப் பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.
- உற்சாகம் ஊட்டும் உரைகளைக் கேளுங்கள். நூல்களைப் படியுங்கள்.
- ஓடி ஒளிந்து கொள்ளாதீர்கள். எதனையும் எடுத்துச் செய்ய முன் வாருங்கள்.

**சிலர் மட்டும் ஏன் தன்னம்பிக்கை இல்லாமல் இருக்கிறார்கள்?**

- சிறுகுழந்தையாக இருக்கும்போது பெற்றோரால் ஒதுக்கப்படுதல் அல்லது அரவணைப்பின்மை.
- குண்டான, மிக ஒல்லியான உடலமைப்பு, தேவையற்ற கோபம், மன அழுத்தம் தகுதிக்கேற்ற மதிப்புக் கிடைக்காதது, அச்சம், கூச்சம், தோல்வி, பயம், உந்துதல் இன்மை, தற்சார்பின்மை...

இவற்றை எல்லாம் எளிதில் வெற்றிக்கொள்ள முடியும். முதலில் பிறரோடு உங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதை விட்டுவிடுங்கள். தாழ்வு மனப்பான்மையை விட்டொழியுங்கள். உங்களுடைய ஒரு சிறப்பான திறனை மேலும் வளர்த்துக் கொள்ளுங்கள். மனிதரைப் படிக்க கற்றுக் கொள்ளுங்கள் வெற்றிக்குப் பாட அறிவு 15% என்றால் மக்கள் பற்றிய அறிவு 85%.

தன்னம்பிக்கை அவசியம்தான். ஆனால் மிதமிஞ்சக் கூடாது. மிதமிஞ்சிய தன்னம்பிக்கையினால்தான் ரஷ்ய நாட்டின்மேல் படையெடுத்துத் தோல்வி கண்டான் நெப்போலியன். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். நெஞ்சில் உறுதி இருக்கும்போது வானத்தையும் வளைத்துப் போடலாம். எண்ணுபவர்கள் மன உறுதி கொண்டவர்களாக இருந்தால் எண்ணிய இலக்கை உறுதியாக அடையலாம். தன்னம்பிக்கை கொண்டோர் மக்களிடம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். உலகையே மாற்றிட முடியும்!

## சிந்தனைக்காக சில துளிகள்

- சுயநலம் துறந்து பிறநலத்தில் கால்பதித்தால் இயேசுவைக் காணலாம்.
- தீமையை வெறுத்து நன்மையை நாடினால் உதயமாகும் கிறிஸ்தவம்
- வறியோரில் அன்பைக் காட்டினால் உன்னிலும் இறையன்பு மிளிரும்.
- ஆசானை மதித்தால் ஆசீர்களால் நிரம்பி வாழலாம்.
- அனாதைகளை ஆதரித்தால் ஆண்டவர் உன்னை அனாதையாக விடமாட்டார்.

**பிரபல்ய மலைகள்**

- அரராத் மலை - நோவாவின் பேழை தங்கிய மலை
- கார்மேல் மலை - எலியாவிற்கு கடவுள் அக்கினியினால் பதில் வழங்கிய மலை
- ஒலிவ மலை - இந்த மலைச்சார்பில் கெத்சமனே தோட்டம் உள்ளது.
- சீனாய் மலை - இறைவன் மோசேக்கு பத்து கட்டளைகளைக் கொடுத்த மலை
- ஒரேபு மலை - எரிகின்ற முட்செடி நடுவே ஆண்டவர் மோசேயுடன் பேசிய மலை
- கொல்கொத்தா (மண்டையோடு) இயேசு சிலுவையில் உயிர்விட்ட மலை.

**ஆக்கம் : திருமதி. பேர்ணி மரீனா, புனித சூசையப்பர் மறைப்பாடசாலை மறையாசிரியர், பலாங்கொடை**

## விரதமும் விருந்தும்

- ✖ கோபமாகிய உணவை விட்டுவிடு பொறுமையில் விருந்தாடு
- ✖ குறைகூறுகின்ற உணவை விட்டுவிடு பிறரை பாராட்டுவதில் விருந்தாடு
- ✖ பிறரைக் கண்டிக்கின்ற உணவை விட்டுவிடு பிறரை மன்னிப்பதில் விருந்தாடு
- ✖ புரளி பேசுகின்ற உணவை விட்டுவிடு அர்த்தமுள்ள பாராட்டுதலில் விருந்தாடு
- ✖ நம்பிக்கையின்மை எனும் உணவை விட்டுவிடு நம்பிக்கையில் விருந்தாடு
- ✖ கர்வமாகிய உணவை விட்டுவிடு தாழ்ச்சியில் விருந்தாடு
- ✖ ஆத்திரமாகிய உணவை விட்டுவிடு அமைதியில் விருந்தாடு
- ✖ சுயநலமென்னும் உணவை விட்டுவிடு பிறர் சேவையில் விருந்தாடு
- ✖ உன்னில் இரக்கப்பட வேண்டும் என்னும் உணவை விட்டுவிடு பிறருக்கு இரங்குவதில் விருந்தாடு
- ✖ கவலை என்னும் உணவை விட்டுவிடு இறை மகிழ்ச்சியில் விருந்தாடு




# துறவியர் உலக நாளன்று திருத்தந்தை வழங்கிய மறையுரை

## "இயேசுவுடன் இணைந்து நாமும் மக்களைச் சந்திக்கச் செல்வோம்"



இறைவன் வாக்கு மாறாதவர் என்ற காரணத்தால், வாழ்வில் நம்பிக்கை கொண்டிருப்பது சிறந்தது என்பதை, வயதில் முதிர்ந்த சிமியோன், அன்னா ஆகியோரிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 02.02.2017 விழாயன் மாலை வழங்கிய மறையுரையில் கூறினார். அர்ப்பண வாழ்வை மேற்கொண்டோர் உலக நாள், மாசி 2, வியாழனன்று சிறப்பிக்கப்பட்டதையொட்டி, மாலை 5.30 மணிக்கு, புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில், துறவியருக்காக சிறப்புத் திருப்பலி நிறைவேற்றியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மறையுரையில் இவ்வாறு கூறினார். நமது முன்னோர் நமக்கு வழங்கியுள்ள நம்பிக்கை கனவுகளை, நமது வாழ்நாளில் எடுத்துரைத்து, நாம் சந்திக்கும் மற்றவர்கள் உள்ளத்தில் நம்பிக்கைச் சுடரை ஏற்றிவைப்பது நமது கடமை என்று, திருத்தந்தை எடுத்துரைத்தார்.

அர்ப்பண வாழ்வை கடந்தால் போதும் என்ற எண்ணத்துடன், இவ்வாழ்வை ஆர்வமின்றி வாழும் சோதனைக்கு இடம் தரும் துறவியர், தங்கள் உள்ளத்தை மூடியவர்களாக, வாழ்வை பயன் ஏதுமின்றி கழிக்கின்றனர் என்று, திருத்தந்தை தன் மறையுரையில் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

இத்தகைய ஆர்வமற்ற மனநிலை, கனவுகளையும், அவற்றுடன் வரும் சவால்களையும் நிராகரித்து, நற்செய்தியை பரப்புவதற்கு, வழங்கப்படும் பணியையும் நாம் இழப்பதற்கு வழி வகுக்கிறது என்று திருத்தந்தை சுட்டிக்காட்டினார். தன் மக்களுடன் கலந்து, கரைந்து வாழ்ந்த இயேசு, நம்மையும் அத்தகைய கரைதலுக்கு அழைக்கிறார் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவுடன் இணைந்து நாமும் மக்களைச் சந்திக்கச் செல்வோம் என்று தன் மறையுரையில் அழைப்பு விடுத்தார்.




## நொபெல் அமைதி ஆர்வலர்களுக்கு... திருத்தந்தை செய்தி

"நடவடிக்கை எடுங்கள்! வாழ்வை முழுமையாக வாழுங்கள்! நீங்கள் வாழும் சான்று வாழ்வைப் பார்க்கும்போது, இவ்வாறு நீங்கள் ஏன் வாழ்கின்றீர்கள்? என்று மற்றவர்கள், உங்களைக் கேட்கலாம்" என்ற வார்த்தைகள், திருத்தந்தையின் டுவிட்டரில், வெளியாயின.

மேலும், நொபெல் அமைதி ஆர்வலர்கள், மக்கள் மத்தியில் புரிந்துகொள்ளுதலையும், உரையாடலையும் ஊக்குவிக்க எடுக்கும் முயற்சிகளைப் பாராட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ். தென் மெரிக்க நாடான கொலம்பியாவின் பொகோட்டாவில், மாநாடு நடத்திவரும் நொபெல் அமைதி ஆர்வலர்களுக்குச் செய்தி அனுப்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொலம்பியாவில், அரசுக்கும், புரட்சிக் குழுவுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருப்பது, மற்ற சமூகங்களுக்கும் தூண்டுதலாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தனது உலக அமைதி தினச் செய்தியிலிருந்து மேற்கோள் காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் தீர்மானங்கள், நம் உறவுகள், நம் செயல்கள் மற்றும், அரசியல் வாழ்வின் அனைத்து நடவடிக்கைகளில், வன்முறையற்ற தன்மை, முத்திரை பதிப்பதாய் இருக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார். திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், திருத்தந்தையின் பெயரில், இச்செய்தியை அனுப்பியுள்ளார். அமைதியும், ஒப்புரவும் என்ற தலைப்பில், பொகோட்டாவில் நடைபெறும், நொபெல் அமைதி ஆர்வலர்களின் 16வது உலக உச்சி மாநாடு, மாசி 5ஆம் திகதி நிறைவடைந்தது.

## முதலாளித்துவம் பணத்தை கடவுளாக்கினால் அதைப் புறக்கணியுங்கள்

தனது இலாபத்தையே நோக்கமாகக் கொண்டு செயல்படும் முதலாளித்துவம், சிலைவழிபாடு என்ற கட்டமைப்பாக மாறும் ஆபத்தை எதிர்நோக்குகின்றது, இத்தகைய முதலாளித்துவம், நலிந்த மக்களைப் புறக்கணிக்கின்றது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். பொருளாதாரத்தைப் பொதுவாக வைப்பதற்கு ஆதரவு வழங்கும் விதத்தில், பொருளாதார-சமூக அமைப்பின் விதிமுறைகளில் மாற்றம் கொண்டுவருவதற்கு அழைப்பு விடுத்த, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொருளாதாரத்தைப் பொதுவாக வைப்பதன் வழியாக, ஏழைகள் உட்பட, எல்லாரும் வாழ்வு பெறுவர் மற்றும், அதன் இலாபங்கள், ஒன்றிப்பு உணர்வை உருவாக்கும் என்றும் கூறினார்.

Focolare கத்தோலிக்க பக்தி இயக்கத்தோடு தொடர்புடைய, ஒன்றிப்புப் பொருளாதாரம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டதன் 25ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, அந்த அமைப்பின் 1,100 பிரதிநிதிகளை, மாசி 4ம் திகதியன்று, திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, இவ்வாறு கூறினார்.

காஸ்தெல்கந்தோல்போவில் கூட்டம் நடத்திவரும் இவ்வமைப்பினருக்கு உரையாற்றிய திருத்தந்தை, மனிதரைப் புறக்கணித்து, பணத்தைக் கடவுளாக வணங்கும் பொருளாதார அமைப்பில் மாற்றம் தேவை எனக் கூறினார். பணத்தைக் கடவுளாக



ஆக்குவது குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு வலியுறுத்திய திருத்தந்தை, உணவு, கல்வி, சிறாரின் எதிர்காலம் என, எதற்குமே வசதியில்லாதபோது பணம் முக்கியமானது, ஆனால், பணத்தின் நோக்கம் மாறும்போது, அது சிலை வழிபாடாகின்றது என்றும் கூறினார்.

49 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள், பிப்ரவரி 1, கடந்த புதனன்று, காஸ்தெல்கந்தோல்போவில் தொடங்கிய கூட்டம், மாசி 5, ஞாயிறன்று நிறைவடைந்தது.

மாசி மாத
செபக்கருத்து

## "தேவையில் இருப்போரை வரவேற்போம்"

தேவையில் இருப்போரை வரவேற்போம் என்ற தலைப்பில், பிப்ரவரி மாதத்திற்கென குறிக்கப்பட்ட திருத்தந்தையின் செபக்கருத்து, இப்புதனன்று மாலை, ஒரு காணொளித் தொகுப்பாக வெளியானது. உயர்ந்த கட்டடங்கள், பல்பொருள் அங்காடிகள், வீட்டு வசதி தொழில் ஒப்பந்தங்கள் ஆகியவை கொண்ட நகரங்களில் நாம் வாழ்கிறோம், ஆனால், நம்மில் சிலரை சமுதாயத்தின் ஓரத்தில் கைவிட்டுவிடுகிறோம் என்ற சொற்களுடன், திருத்தந்தை, இந்தக் காணொளித் தொகுப்பை தொடக்கியுள்ளார்.

இஸ்பானிய மொழியில் திருத்தந்தை வெளியிட்டிருக்கும் இந்தக் காணொளித் தொகுப்பில், சமுதாயத்தின் ஓரத்தில் கைவிடப்பட்டோரை, நாம் கைவிடக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். எனவே, தன்னுடன் நம்மையும் செபத்தில் இணையும்படி விண்ணப்பிக்கும் திருத்தந்தை, வறியோர், புலம்பெயர்ந்தோர், சமுதாயத்தின் ஓரங்களில் தள்ளப்பட்டோர், நமது சமுதாயங்களில் வரவேற்பும், வசதிகளும் பெறவேண்டும் என்பதை இம்மாத செபக்கருத்தாக வெளியிட்டுள்ளார்.

இயேசு சபையினரின் ஒரு தனிப்பட்ட முயற்சியாக இயங்கிவரும் செபத் திருத்தூதுப் பணியை ஒருங்கிணைப்போர், இவ்வாண்டு, திருத்தந்தை வெளியிடும் செபக்கருத்துக்கள், ஒவ்வொரு மாதமும் ஒரே ஒரு கருத்தாக இருக்கும் என்றும், அவசரத் தேவைகள் எழும் வேளையில், மாதத்தின் முதல் ஞாயிறு, திருத்தந்தை வழங்கும் மூவேளை செப உரையின்போது, கூடுதல் கருத்துக்களை அவர் வெளியிடுவார் என்றும், கூறியுள்ளனர்.

## திருத்தந்தையின் கண்காணிப்பில், புலம்பெயர்ந்தோர் பிரிவு




இவ்வாண்டு தை 1ம் திகதி முதல், வத்திக்கானில் தன் பணிகளைத் தொடங்கியுள்ள, ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை, குடிபெயர்ந்தோர், மற்றும் புலம்பெயர்ந்தோருக்கென தனிப்பட்ட ஒரு பிரிவைத் தொடக்கியுள்ளது.

திருத்தந்தையின் நேரடி கண்காணிப்பில் செயல்படும் இப்பிரிவு, @M_RSection என்ற பெயரில், சமூக வலைத்தளங்களில் செய்திகளையும், டுவிட்டர் செய்திகளையும் பகிர்ந்து வருகிறது.

கடந்த மாதம் 15ம் தேதி கடைப்பிடிக்கப்பட்ட 103வது உலக புலம்பெயர்ந்தவர் நாளையொட்டி, தொடக்கப்பட்ட இந்த முயற்சிக்கென, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சனவரி 12ம் தேதி முதல், 15ம் தேதி முடிய டுவிட்டர் செய்திகளைப் பகிர்ந்து வந்தார்.

அதே வண்ணம், மனித வர்த்தகத்திற்கு எதிரான உலக நாள், மாசி 8ம் தேதி கடைப்பிடிக்கப்பட்ட வேளையில், திருத்தந்தை தன் டுவிட்டர் செய்திகளை, மாசி 6, 7, மற்றும் 8 ஆகிய நாட்கள், @M_RSection என்ற முகவரியில் வெளியிட்டுள்ளார்.


# இம்மாதப் புனிதர்கள்



## புனித குளோட் — மாசி 15


புனித குளோட் இத்தாலியில் பிறந்தவர். திருமணமாகி இல்லற வாழ்க்கை வாழ்ந்தவர். தன் குடும்பத்துடன் துறவு வாழ்க்கை வாழ முடிவு செய்தார். இவரது மகன் குருவாகினார். தவறியவர்களையும் பொறுத்து மனம் திரும்ப வாய்ப்புக் கொடுத்தார். பெப்ரவரி 15, 756, இறந்த இப்புனிதர், தன் மனைவியின் கல்லறை அருகிலேயே புதைக்கப்பட்டார்.

## புனித பிரான்சிஸ்கோவும் ஜெசிந்தாவும் — மாசி 20



பாத்திமாவில் அன்னை மரியாளைக் கண்டவர்கள். இந்த சிறுவர்களைத் தனது அமைதிச் செய்தியை உலகெங்கும் பறைசாற்ற அழைத்தாள் அன்னை மரியாள். உலக அமைதிக்காக ஜெபமாலை ஜெபிக்கவும், பாவிகள் மனம் திரும்பவும் வேண்டுமென்று மன்றாடவும் இச்சிறுவர்களுக்கு அறிவித்தார் அன்னை மரியாள். 1908இல் பிறந்த பிரான்சிஸ்கோ 1919ஆம் ஆண்டும், 1910ஆம் ஆண்டு பிறந்த ஜெசிந்தா 1920ஆம் ஆண்டு இறந்தனர்.

## புனித ஒனாசிமுஸ் — மாசி 16



புனித பவுல் பிலமோனுக்கு எழுதிய திருமுகத்தில் இவர் தனது இதயம் (பிலமோன் 1:2) என்று குறிப்பிடுகின்றார். இவரை விசுவாச வழிக்குப் புனித பவுல் கொண்டு வந்தார். புனித பவுலின் உடன் உழைப்பாளராகவும், புனித ஒனேசிமுஸ் பணியாற்றி யுள்ளார். (கொலோ 4:9)

## புனித கன்னி மரியாளின் ஊழியர் சபை — மாசி 17



1233ஆம் ஆண்டு அன்னை மரியாளின் ஆரோபண நாளன்று இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் ஏழு இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஜெபித்தனர். அன்னை மரியாள் இவர்கள் அனைவருக்கும் காட்சியளித்து, உலகப் போக்கிலிருந்து விலகி தனது சேவை -யில் நிலைக்கும்படி அறிவுறுத்தினார். அதன்படியே இவர்கள் புளோரன்ஸ் நகர் அரு- கில் இருந்த செனாரியோ மலையில் வாசம் செய்து வாழ்ந்தனர். இவர்கள் 1. பொன்பீலியோ மொனால்டோ 2. போனாயுண்டா மானெட்டோ 3. மானெட்டோ அன்ட்டெலேசே 4. அமதுயோ அமதேயி 5. உகுச்சியோனே உகுச்சியோனி 6. கொஸ்தனோயோ சொஸ்தனேயி 7. அலெ- சீயோ பல்கோனியோ இவர்கள் மரியாளின் ஏழு வியாகுலங்களைத் தங்களது சிறப்புப் பக்தியாகக் கொண்டனர். இவர்களது சபை மரியாளின் ஊழியர் சபை என்றும் அழைக்கப்படுகின்றது.

## புனித போலிகாப் மறைசாட்சி — மாசி 23



அப்போஸ்தலரும் நற்செய்தியாளருமான புனித யோவானின் சீடர் இவர், சிறிய வயதிலேயே 80ஆம் ஆண்டில் திருமுழுக்குப் பெற்றார். மிகவும் இளவயதிலேயே 86ஆம் ஆண்டு ஸ்மிர்னா திருச்சபையின் ஆயராக நியமனம் பெற்ற இவர் 70 ஆண்டுகளாக ஆயராக பணிபுரிந்தார். புனித இரனேயுஸ் இவரது மாணவர். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டபோது இவரை எரித்துக் கொல்ல தீர்ப்பிடப்பட்டது. எனினும் தீ இவரைத் தீண்டவில்லை. எனவே ஈட்டியால் குத்தப்- பட்டார். இவரது காயத்திலிருந்து சிந்திய இரத்தப்பெருக்கினால் தன் உயிரைத் தியாகம் செய்தார். 166ஆம் ஆண்டு இறந்தபோதும், இவரது எலும்புகள் இன்னும் உரோம் மாநகரின் புனித அம்புரோஸ் ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

# மனித வர்த்தகரின் மனமாற்றத்திகாக செபிப்போம்



**'வாழும் இறைவனின் சாயல், இத்தனை கொடுமையாக நடத்தப்படுவதை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது'**

**திருத்தந்தை**


"மனிதர்களை வர்த்தகம் செய்வோர், இறுதியில் இறைவனுக்குக் கணக்கு கொடுக்க வேண்டும். அவர்களது மனமாற்றத்திற்காக செபிப்போம்" என்ற சொற்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிப்ரவரி 8, இவ்வியாழனன்று வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் இடம் பெற்றன. சூடான் நாட்டிலிருந்து அடிமையாக விற்கப்பட்டு, இறுதியில், இத்தாலி நாட்டில் கனோசியன் துறவு சபையில் இணைந்த புனித ஜோசப்பீனா பக்கீட்டா அவர்களின் திருநாள், கத்தோலிக்கத் திருஅவையில் கொண்டாடப்படும் நாளான, மாசி மாதம் 8ம் தேதி, மனித வர்த்தகத்திற்கு எதிரான உலக விழிப்புணர்வு மற்றும் செப நாளாகவும் சிறப்பிக்கப்படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளாகச் சிறப்பிக்கப்பட்டு வரும் இந்த உலக நாளையொட்டி, திருத்தந்தை அவர்கள் இத்திங்கள், மற்றும் செவ்வாய் ஆகிய நாட்களில் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்திகள், மனித வர்த்தகத்தை மையப்படுத்தி அமைந்துள்ளன.

"அடிமைப்படுத்தப்பட்டுள்ள எண்ணற்ற சிறாரின் அழுகுரலைக் கேட்போம். அவர்களின் துன்பங்களைக் கண்டு, எவரும் அக்கறையற்றவர்களாக இருக்கக்கூடாது" என்ற செய்தியையும், "வாழும் இறைவனின் சாயல், இத்தனை கொடுமையாக நடத்தப்படுவதை நாம் சகித்துக்க கொண்டிருக்க முடியாது" என்ற செய்தியையும், திருத்தந்தை தன் டுவிட்டரில் வெளியிட்டார். அதற்கு முன்னர், "இன்றைய உலகின் திறந்ததொரு காயமாக, கிறிஸ்துவின் உடலில் விழும் சாட்டையடியாக, மனித வர்த்தகம் அமைத்துள்ளது" என்ற சொற்களை, தன் டுவிட்டர் செய்தியாக, இத்திங்களன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டார்.

**நன்றி வத்திக்கான் வானொலி**

## மனித வர்த்தகத்திற்கு எதிரான உலக விழிப்புணர்வு மற்றும் செப நாள்




மனித வர்த்தகத்திற்கு எதிரான உலக விழிப்புணர்வு மற்றும் செப நாள், மாசி மாதம் 8ஆம் திகதி அன்று கத்தோலிக்கத் திருஅவையில் மூன்றாவது முறையாக சிறப்பிக்கப்பட்டது. "அவர்கள் குழந்தைகள், அடிமைகள் அல்ல" என்ற சொற்கள், இவ்வுலக நாளின் மையக்கருத்தாக அறிவிக்கப்பட்டிருந்தது. மனித வர்த்தகத்திற்கு எதிராக பணியாற்றும் துறவியர் உலக அமைப்பு, ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை, அனைத்துலக கத்தோலிக்கப் பெண்கள் கழகம், துறவு சபைகளின் உலகத் தலைவர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த நீதி அமைதி பணிக்குழு ஆகிய அனைத்தும் இணைந்து, மனித வர்த்தகத்திற்கு எதிரான உலக விழிப்புணர்வு மற்றும் செப நாளை உருவாக்கின.

அடிமையாக விற்கப்பட்டு, புனிதமான துறவியாக இறந்த ஜோசப்பீனா பக்கீட்டா அவர்கள் திருநாளான, மாசி மாதம் 8ம் திகதியை இவ்வுலக நாளாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2015ம் ஆண்டு உருவாக்கிய வேளையில், இந்த நாள், 154 நாடுகளில் கடைபிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மனித வர்த்தகத்திற்கு எதிரான உலக விழிப்புணர்வு மற்றும் செப உலக நாள் சிறப்பிக்கப்பட்ட வேளையில், மிலான் உயர் மறைமாவட்டத்தில், ஒருநாள் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத்தாலி நாட்டை வந்து சேரும் புலம்பெயர்ந்தோரில், 90 விழுக்காட்டினர் மனித வர்த்தகர்களின் பிடியில் சிக்கியுள்ளனர் என்றும், உலகெங்கும் தற்போது மனித வர்த்தகத்திற்குப் பலியானவர்களின் எண்ணிக்கை, 3 கோடியே 50 இலட்சம் என்றும், மிலான் உயர் மறைமாவட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்று கூறுகிறது.

**நன்றி வத்திக்கான் வானொலி**

# தவக்காலத்தில் ஒரு நாள் ஒரு நற்செயல்

- 01 பங்குனி — நம் பாவங்களை நினைத்துப் பார்ப்போம்
- 02 பங்குனி — இந்த நாளில் ஒரு நேரமாவது விசுவாச அறிக்கையை உணர்ந்து சொல்வோம்
- 03 பங்குனி — வீட்டில் குடும்பமாக சிலுவை முன் செபிப்போம்
- 04 பங்குனி — பிறருக்காக செபிப்போம்
- 05 பங்குனி — பங்கு அளவில் நடைபெறும் தியானங்களில் பங்கு பெறுவோம்
- 06 பங்குனி — மன்னிக்க முடியாதவர்களை மன்னிப்போம்
- 07 பங்குனி — குடும்ப செபமாலை சொல்லுவோம்
- 08 பங்குனி — முடிந்த ஒருத்தல் முயற்சி செய்வோம்
- 09 பங்குனி — கோபத்தை கட்டுப்படுத்வோம்
- 10 பங்குனி — முடியாத யாருக்காவது முடிந்த உதவி செய்வோம்
- 11 பங்குனி — ஏழு திருவருட் சாதனங்களை தியானிப்போம்
- 12 பங்குனி — முதியோருக்காக செபிப்போம்
- 13 பங்குனி — ஆலயம் தூய்மைப்படுத்த உதவி செய்வோம்
- 14 பங்குனி — பங்கில் உள்ள அனைத்து குடும்பங்களுக்காகவும் செபிப்போம்
- 15 பங்குனி — மறைமாவட்ட ஆயர்களுக்காக செபிப்போம்
- 16 பங்குனி — பிடித்த உணவை சமைக்காமல் இருப்போம்
- 17 பங்குனி — ஒரு வறியவருக்கு உதவி செய்வோம்
- 18 பங்குனி — மரியாவின் வியாகுலங்களை தியானிப்போம்
- 19 பங்குனி — நற்கருணை மட்டில் ஆர்வம் கொள்வோம்
- 20 பங்குனி — இளைஞர்களுக்காக செபிப்போம்
- 21 பங்குனி — சுற்றுச் சூழல் பற்றி சிந்திப்போம்
- 22 பங்குனி — பக்கத்து வீட்டாருக்காக செபிப்போம்



# மலையகத்தில் மரியாயின் சேனையின் முதல் தமிழ் கொமிசியம்




கடந்த 18-12-2016 ஞாயிறு மாலை 3.30 மணிக்கு பதுளை மறை மாவட்டத்தில் நாய பெத்தை அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில், பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சன்ட் பெர்ணாண்டோ S.S.S அவர்களினால் "அமல மரி இராக்கினி" என்ற பெயரில் மரியாளின் சேனை கொமித்சியமாக உயர்த்தப்பட்டது. இவ்விழாவில், பதுளை மறைமாவட்டத்தின் மரியாயின் சேனையின் ஆன்மிக இயக்குனர் அருட்பணி பெனடிக்ட் இயூஜீன் அ.ம.தி அடிகளார் வழிநடத்தலுடன் அனைத்து நிகழ்வுகளும் மிக சிறப்பாக இடம் பெற்றன. மரியாயின் சேனை இலங்கை சேனாத்தூஸ் தலைவர் சகோதரர். பெஸ்டியன்பிள்ளை செயலாளர், சகோதரர். ஜோன் செல்வட் தொடர்பாளர், சகோதரர். மரிய சேவியர் ஆகியோர் இவ்விழாவின் முக்கிய நிகழ்வுகளை நடத்தினார்கள். இன்னும் இவ்விழாவை சிறப்பித்து ஆசீர்கள் கூற அன்னை வேளாங்கன்னி ஆலய பங்குத்தந்தை டிலந்த அடிகளார் மரியாயின் சேனையை வழிநடத்தினார். அருட்சகோதரி அடலினா அ.கா, அருட்சகோதரி நிலானி அருட்சகோதரி சில்வியா அவர்களும் சிறப்புரைகள் கூறி வாழ்த்துக்களை தெரிவித்தனர். இன்னும் அப்புத்தளை புனித வனத்துச் சின்னப்பர் ஆலய பங்கில் இயங்கிவரும் கியுரியாவின் மூத்த தலைவி சகோதரி அன்னமேரி அவர்கள் முதலாவது மரியாயின் சேனை அப்புத்தளை காகல்ல தோட்டத்தில் 1990 ஆம் ஆண்டு கொழும்பு பரிகார மாதா கியுரிய தலைவர் சகோதரர் மரிய ரட்ணம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு பிரசீடியம் இன்று 17 பிரசீடியல்களும் 2 கியூரியாக்கள் சேர்ந்து அது ஒரு கொமித்சியமாக உயர்நிலை பெறுவதில் மிக மகிழ்ச்சியடைவதாகவும் இக்காலங்களில் அன்னை மரியாள் தனக்கு செய்தவற்றை தனது கண்ணீரால் சபையினர் முன்னிலையில் அன்னைக்கு நன்றி கூறினாள்.

**தொடர்ச்சி 15ஆம் பக்கம்**



அண்ணல் மகாத்மா காந்தியின் 69வது நினைவு தின நிகழ்வு -30) திங்கட்கிழமை தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. சௌமிய இளைஞர் நிதியத்தின் தலைவர் எஸ். பி.அந்தோனிமுத்துவின் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்வில் சர்வமத் தலைவர்கள், கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி குழு தலைவருமான சுஜித் பெரேரா, பாடசாலை அதிபர் மோகன்ராஜ் ஆகியோர் குத்து விளக்கேற்ற, மகாத்மா காந்தியின் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார். கடந்த வருடம் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்ட தெகியோவிற்ற பாடசாலைக்கான புதிய காணியை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் வழங்கவும் இறைஆசி வேண்டி தெகியோவிற்ற பங்கு தந்தை அருட்தந்தை அயால் அடிகளார் மற்றும் கண்ணியர்மட அருட்சகோதரிகள் பிரார்த்தனை செய்தனர்

**தகவல் : எஸ். பி. அந்தோனிமுத்து**

## வாழ்த்துகின்றோம்



இலங்கை அமலமரி தியாகிகள் சபையின் கொழும்பு மாகாண முதல்வராக அருட்தந்தை. எர்வின் மொறாயஸ் அ.ம.தி அடிகளார், நியமிக்கப்பட்டுள்ளார். அடிகளாரது பணி சிறக்க ஞான ஒளி செபத்துடன் வாழ்த்துகின்றது.

## ஹொரனை பங்கைச் சார்ந்த நியூச்செட்டல் தோட்டத்தில் திருக்குடும்ப திருவிழா




ஹொரனை பங்கைச் சார்ந்த நியூச்செட்டல் தோட்டத்தில் திருகுடும்ப தேவாலயத்தின் வருடார்ந்த திருவிழா 22ம் திகதி கொடியேற்றம் செய்து, ஆரம்பிக்கப்பட்டது. நவநாட்கள் அருட்தந்தை பேனாட் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது. 28ம் திகதி மாலை ஆராதனையை அருட்தந்தை தேவசீலன் அடிகளாரால் வழிநடத்தப்பட்டது. 29ம் திகதி புதிதாக புணரமைக்கப்பட்ட ஆலயத்தில் பங்கு தந்தையின் தலைமையில் திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருவிழாவின் பின் அன்னதானமும் வழங்கப்பட்டது. **தகவல். அருட்சகோதரி ஜசிந்தா.**



கொழும்பு டிலாசால் கல்லூரியில் நடைபெற்ற 2016ஆம் ஆண்டிற்கான கரோல் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய அருட்தந்தை எர்வின் மொறாயஸ் அடிகளார், கல்லூரி அதிபர் அருட்தந்தை நியூமன் முத்துத்தம்பி அடிகளார் மற்றும் வருகை தந்திருந்த அருட்பணியாளர்கள் ரீட் ஷெல்டன் அடிகளார் மற்றும் லியோ பெரேரா அடிகளார் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

**தகவல் : அருட்பணி நியூமன் முத்துத்தம்பி (அ.ம.தி)**

## மழைபெய்து வரட்சி நீங்க புனித யோசப்வாஸ் திருவிழாவில் விசேட பிரார்த்தனை



தற்போது நாட்டில் நிலவும் வரட்சி நீங்கி மழை பெய்ய வேண்டி விசேட பிரார்த்தனை புனித ஜோசப்வாஸ் திருவிழா திருப்பலியின்போது இறை ஆசி வேண்டி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அத்துடன வரட்சி காரணமாக தமிழகத்தில் மரணமானவர்களது ஆன்மா சாந்திக்காகவும் இந்தியாவிலும் - இலங்கையிலும் நிலவும் வரட்சி நீங்கி மழைபெய்து நாடும் நாட்டு மக்களும் செழிப்படையவும் பிரார்த்திக்கப்பட்டது. எட்டியாந்தோடடை புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற இத்திருவிழா திருப்பலியை உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. ஜுட் அருளானந்தன் (பு.ஆ.ச) அடிகளார் நடாத்தினார். பிரார்த்தனைகளை இரத்தினபுரி மறைமாவட்ட மேய்ப்புப் பணிசபை அங்கத்தவரும் கேகாலை மாவட்ட மரியாயின் சேனை இணைப்பாளருமான எஸ்.பி. அந்தோனிமுத்து அவர்கள் நடத்தினார். புனித யோசவ்வாஸ் ஒன்றியத்தினர்...

**தொடர்ச்சி 15ஆம் பக்கம்**

## ஹொரனை மத்துகமை பங்கில் பயிற்சிப் பாசறை





ஹொரனை மத்துகமை பங்கில் பொதுநிலை தலைவர்களுக்கான பயிற்சிப் பாசறை இம்மாதம் 10, 11ஆம் திகதிகளில் நடைபெற்றது. மத்துகமையைச் சார்ந்த தோட்டங்களில் தலைமைத்துவம் ஏற்று விசுவாசப் பணிகளில் ஈடுபடும் மறையாசிரியர்கள் உட்பட ஏனைய தலைவர்களுக்கான ஒருநாள் பயிற்சிப் பாசறை பண்டாரகமை பொலிடன்ஸ் இல்லத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி பாசறையானது அருட்தந்தையர்களாலும், அருட்சகோதரிகளினாலும் வழிநடத்தப்பட்டது. பல்வேறு சவால்கள் மத்தியிலும் எவ்வாறு கத்தோலிக்க விசுவாசத்தை வாழ்ந்து பேணி காப்பது என்று அன்றைய தினம் கலந்துரையாடப்பட்டது.

**தகவல் மற்றும் படங்கள் : அருட்சகோதரி ஜசிந்தா**

## 01 மரியன்னையின் அன்புக்கு

மற்றும் இல்லங்களின் அரசியாக மரியன்னையை ஏற்படுத்துவோம். கிம்புலாப்பிட்டிய பங்குத்தந்தை அருட்தந்தை சரத் நிமல் அபேசிரிவர்தன அடிகளார் ஏற்பாடு செய்திருந்த இந்த மாலை ஆராதனைக்கு அருட்பணி. பெற்றிக் பெரேரா, அருட்பணி ஜுட் சமந்த, அருட்பணி. ருவித் சந்தசிறி அடிகளார்கள் மற்றும் பல குருக்கள், துறவிகள் விசுவாசிகள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

மாலை ஆராதனை முடிவில் கிம்புலாப்பிட்டிய திருத்தலத்தில் புனித பாப்ரா அன்னையின் திருச்சுரூப மண்டபம் கர்தினால் ஆண்டகையினால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நிறைவில் அழகான வானவேடிக்கை நிகழ்வும் நடைபெற்றது.

## 01 திருப்பாலத்து சவை

முகவரி

**அருட்பணி பெசில் ரொகான் பர்னாந்து**
**பாப்பிறை மறைபரப்புச் சபை தேசிய இயக்குனர்**
**தேசிய செயலகம்**
**இல 19 பல்கம் இடம்**
**கொழும்பு 08**

2017 ஆடி மாதம் 29ஆம் திகதி ஓர் விசேட நாள் என்பதையும் அத்தினத்தில் உங்கள் வருகை முக்கியம் என்பதையும் நினைவிற் கொள்ளுங்கள்-



## மணமகன் தேவை

வத்தளையைச் சேர்ந்த 25 வயதுடைய கத்தோலிக்க மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொ.பே 0719456026 (A0724)

## 01 கொழும்பு உயர் மறை...

அத்தோடு, அன்றைய தினம் தரம் 6ற்கு மேற்பட்ட மாணவர்கள் மாத்திரமே பங்கேற்கலாம். மாணவர்கள் பாடசாலை சீருடையில் வருகைதரவேண்டும். பாடசாலை மற்றும் மறைப்பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பொறுப்பாளர்கள் இதனை கவனத்திற்கொண்டு செயற்படவும்.

## 01 அகில இலங்கை

அகில இலங்கை திருவிவிலியப் போட்டியில் கொழும்பு உயர் மறைமாவட்ட மாணவர்கள் முதலிடம் பெற்று தமக்குரிய சான்றிதழ்களையும், சின்னங்களையும் நீர்கொழும்பில் நடைபெற்ற அரச நத்தார் தின விழாவின் போது மேதகு ஜனாதிபதி அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டார்கள்.

தேசிய மறைக்கல்வி விவிலிய அப்போஸ்தலிக்க பணி மற்றும், கிறிஸ்தவ மத விவகார அமைச்சு இணைந்து ஏற்பாடு செய்த அகில இலங்கை திருவிவிலியப் போட்டியில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் தமிழ் மறைக்கல்வியை பிரதிநிதித்துவப்படுத்தி, பங்குபற்றிய எமது மாணவர்கள், இரத்தினப்புரி, திருகோணமலை, யாழ்ப்பாணம் மறைமாவட்ட மாணவர்களோடு போட்டியிட்டு முதலிடம் பெற்று வெற்றி வாகை சூடியுள்ளனர். இம்மாணவர்கள் கொட்டாஞ்சேனை, புதுச்செட்டித்தெரு, வத்தளை ஆகிய பங்குகளைச் சார்ந்தவர். **தகவல் : திரு சகாயராஜ்.**

## 14 மலையகத்தில்...

மேலும் அருட்தந்தை பெனடிக் இயுஜீன் அ.ம.தி அடிகள் மரியாயின் சேனையின் மீதுள்ள நம்பிக்கை பக்தி அவரின் அயராத உழைப்பு என்பதே இன்று மரியாயின் சேனை ஒரு கொமித்சியமாக உயர முக்கிய காரணம் என்று வாழ்த்தினர். அடுத்து பதுளை கியூரியா தலைவி சகோதரி அந்தோனியம்மா தனதுரையில் ஆன்ம ரீதியில் சபைகளை அறியாது இருந்த நாங்கள் மரியாயின் சேனையில் சேர்ந்து சேவையிலும், செபத்திலும் வளர்ந்து இன்று பதுளை மலையகத்தோட்டப் பகுதிகளின் மாபெரும் உயர்நிலையடைந்து "அமலமரி இராக்கினி" கொமிசித்சியமாக உயர்த்தப்பட்டு அதன் தலைவியாக என்னை நியமித்ததில் நன்றி கூறுகின்றேன். மரியாள் எம்முடன், நாமும் அவளுடன், சகோதரர் அ.மரிய சேவியர் கூறியது போல் இன்று பதுளை மறை மாவட்டத்திற்கு ஒரு பொன்னான நாளாக பொறிக்கப்படல் வேண்டும் என்பது உண்மையே. தொடர்ந்து பதுளை ஆயர் தனது ஆசீச் செய்தியை வழங்குகையில் பதுளை மறைமாவட்டத்தில் 19 பங்கில் 7 பங்குகளில் தமிழ் மரியாயின் சேனை நடைபெறுவதாக பெருமையுடன் கூறினர்.

மற்றைய பங்குகளிலும் உங்களின் சேவைகள் வளர வேண்டும். பல பிரசீடியங்கள் உருவாக வேண்டும். பதுளை மறை மாவட்ட முழுவதும் இன மொழி பேதமின்றி அது வளர வேண்டும். எப்பொழுதும் நான் உங்களுடன் அருட்தந்தை பெனடிக்ட் இயுஜீன் அ.ம.தி அடிகளாரை நான் மீண்டும் மரியாயின் சேனையின் பதுளை மறைமாவட்டத்தின் புதிய ஆன்மீக இயக்குனராக உத்தியோக பூர்வமாக நியமிக்கின்றேன் என்றார். மேலும் கொழும்பில் இருந்து வந்து சேவையாற்றும் இலங்கை செனாத்தூஸ் தொடர்பாளர் சகோதரர் அ.மரிய சேவியர் அவர்களையும் இலங்கை செனாத்தூஸ் தலைவர் சகோதரர் பெஸ்டின் பிள்ளை, செயலாளர் சகோதரர் ஜோன் செல்வம் அவர்களையும் வாழ்த்தி பாராட்டுகின்றேன் என்று கூறி தனது ஆசி உரையை முடித்தார். இறுதியாக இறுதி செபத்துடன் ஆயரின் ஆசீர்வாதத்துடன் மலையக புதிய கொமிசியத்தின் நிகழ்வுகள் முடிவுற்றது. தொடரும் மலையகம் முழுவதும் மரியாயின் சேனை கொடி பறக்க அருட்பணி பெனடிக்ட் இயூஜின் அ.ம.தி அடிகளாரின் உதவியுடன் நன்றி.

**தகவல் : ரொக் பர்னாந்து**

## 14 மழைபெய்து....

மக்களுடன் அமைப்புப்படுத்தியிருந்த திருப்பலியின் முன்னுரை வழங்கிய அந்தோனிமுத்து இந்தியாவின் கோவாவில் பிறந்த புனித ஜோசப்வாஸ் இலங்கைக்கு வந்து அவர் ஆற்றிய மறைபணியின்போது இவ்வாறான வரட்சியால் மக்கள் அவதியுற்றனர். தொற்று நோயின் காரணமாக பலரது உயிர்கள் மாண்டன. புனித யோசப்வாஸ் இறை ஆசிவேண்டி நடாத்திய பிரார்த்தனையால் மழை பெய்தது அந்த புதுமை நடந்த இடமான கண்டி அம்பிட்டிய தேசிய குரு மடத்தில் யோசப்வாஸ் திருத்தலம் நிர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த புதுமையை அறிந்த அன்றைய கண்டியை ஆண்ட ராஜசிங்க அரசன் இவருக்கான பாதுகாப்பை வழங்கியதாக சரித்திரம் சான்று பகிர்கின்றது. என்றார் வரட்சியால் வாடும் இலங்கை மக்களும் இந்திய மக்களும் வளமான வாழ்வுபெற மழை வேண்டி பிரார்த்திப்பது நமது கடமையாகும் இந்த வரட்சிகாரணமாக தங்கள் விவசாய நிலங்களைபார்த்து சோகமடைந்த பலர் தமிழகத்தில் அதிர்ச்சி அடைந்து மாரடைப்பால் மாண்டும் விட்டனர் அவர்களுக்காவும்பிரார்த்திப்போம் என்றார் தமிழ், சிங்கள மொழிகளில் இடம்பெற்ற இத்திருவிழாவின்போது செபமாலை தியானமும், புனித யோசப்வாஸின் பிரார்த்தனை, அவரது திருச்சுரூப ஆசீர்வாதம் - திருப்பலியும் இடம்பெற்றது.

**எஸ்.பி.அந்தோனிமுத்து, நிகழ்ச்சி ஒருங்கினைப்பாளர்**

## எது எப்போது திறக்கும்?

ஒரு படைத்தளபதி மிடுக்காகப் போய் ஒரு முனிவரிடம் கேட்டார்

**'மோட்சத்தின் கதவு எப்போது திறக்கிறது?, நரகத்தின் கதவு எப்போது திறக்கிறது?'**

முனிவர் அவரைப் ஏற இறங்கப் பார்த்தார். **'நீங்கள் யார் வீட்டு காவல்காரர்?'** என்று கேட்டார்.

தளபதிக்குக் கோபம் வந்தது. தன் இடையில் சொரிகியிருந்த கத்தியில் கை வைத்தார்.

**'கத்தி இருக்கிறதா? அது வெண்ணெய் வெட்டும் கத்தியா?'** என்றார் முனிவர்.

மேலும் கோபம் **'இல்லை உம்மை வெட்டும் கத்தி'** என்றபடி கத்தியை ஓங்கினார்.

**"நண்பரே! இப்போது நமக்கு நரகத்தின் கதவு திறந்து கொண்டிருக்கிறது'** அவர் கத்தியை உறையில் போட்டார். முனிவர் முன் மண்டியிட்டு வணங்கினார்.

**'ஐயா முன்கோப்பட்டு விட்டேன்! மன்னியுங்கள்'** என்றார்.

முனிவர் அவரை அமர வைத்தார்.

கொஞ்சம் பழங்கள் வந்தன!

**'இப்போது நமக்கு மோட்சத்தின் கதவு திறந்து கொண்டிருக்கிறது'**

நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனிதரை சந்திக்கும்போதும் ஒரு கதவை திறக்கின்றோம். அது மோட்சத்தின் கதவா?

நரகத்தின் கதவா?

மற்றவர்கள் நரகத்தின் கதவை திறந்தால் நாம் என்ன செய்கின்றோம்?

புத்திசாலிதனமாக தப்பித்துக்கொள்கின்றோமா?

இல்லை! அவரோடு சேர்ந்து நகரத்தின் கதவை கடக்கின்றோமா?

**முன்கோபமும் ஆத்திரமும் நம்மை எங்கே கொண்டு போய்ச்சேர்க்கும்?**

**முன்கோபத்தினால் நன்மை வர வாய்புண்டா?**

**நிதானத்தினால் தீமை வர வாய்ப்புண்டா**

## உத்தியோகப்பூர்வ அறிக்கை

அதி மேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ஆண்டகை அவர்கள் நிர்வாகம் மற்றும் புதிய கொள்கை தொடர்பமைவு விடயமாக தமக்கு ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு அக்குவைனஸ் கல்லூரி, தூய சூசையப்பர் கல்லூரி கொழும்பு 10 மற்றும் தூய பேதுரு கல்லூரி கொழும்பு 04 என்று மூன்று ஆலோசனைக் குழுக்களை நியமித்துள்ளார். தற்காலத்துக்கு ஏற்றவாறு பொருத்தமான பணியினை மேற்கொள்வதற்காக இவ்வழைப்பினை விடுத்துள்ளார். இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவது இப்பணிக்காக மூன்று வருட காலத்திட்டத்தின் அடிப்படையில் கீழ்வரும் குழுக்கள் 2017 மாசி மாதம் 1ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**அக்குவைனஸ் கல்லூரி**

1) பேராயர் - தலைவர்
2) துணை ஆயர் மெக்ஸ்வல் சில்வா
3) கல்வி மற்றும் நிர்வாக முகாமையாளர்
4) பொருளாளர்
5) அதிபர் அக்குவைனஸ் கல்லூரி
6) அருட்பணி கெமிலஸ் பர்னாந்து
7) சிரேஷ்ட பேராசிரியர் C.A.N. பர்னாந்து, அக்குவைனஸ் கல்லூரி உறுப்பினர்
8) திரு. ஷமில் பெரேரா PC
9) திரு ஐவன் விதானஆரச்சி
10) திரு ஹார்ட்லி பெரேரா

**தூய சூசையப்பர் கல்லூரி**

1) பேராயர் - தலைவர்
2) துணை ஆயர் மெக்ஸ்வல் சில்வா
3) கல்வி மற்றும் நிர்வாக முகாமையாளர்
4) பொருளாளர்
5) அதிபர் தூய சூசையப்பர் கல்லூரி
6) திரு. விஜித் கன்னங்கர்
7) திரு ஜயந்த பெரேரா, தலைவர் நலன்புரிச் சங்கம்
8) திரு. ரொமேஷ் டி சில்வா PC
9) திரு ஜொனத்தன் எலஸ், CEO, ஹற்றன் நெஷனல் வங்கி
10) Dr. ஷிவாந்த பர்னாந்துபுள்ளே, நரம்பியல் அறுவைசிகிச்சை ஆலோசகர்
11) திரு ஜொயல் செல்வநாயகம்

**தூய பேதுரு கல்லூரி**

1) பேராயர் தலைவர்
2) துணை ஆயர் மெக்ஸ்வல் சில்வா
3) கல்வி மற்றும் நிர்வாக மேலாளர்
4) பொருளாளர்
5) அதிபர் தூய பேதுரு கல்லூரி
6) அருட்பணி பொனி பர்னாந்துபுள்ளே
7) Dr. கெலும் கமகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர சிரேஷ்ட விரிவுரையாளரும் மற்றும் நலன்புரிச் சங்க பொருளாளர்
8) செல்வி. கேஷினி பெரேரா, கணக்காளர், பாடசாலை வருவாய்த்துறை ஆலோசகர்
9) திரு. ஸ்ரீனாத் பர்னாந்து, தலைவர் நலன்புரிச் சங்கம்
10) திரு. ரொமேஷ் டி மெல் தலைவர் - பழைய மாணவர் சங்கம்

**அருட்பணி ஐவன் பெரேரா**
**கொழும்பு உயர் மறைமாவட்ட கல்வி இயக்குனர்**
**மற்றும்**
**அரசாங்க / தனியார் பாடசாலை முகாமையாளர்**
**மேல் மாகாணம்** (Q16N7731)




# பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு

## வயிற்றுப்போக்கு



1. வயிற்றுப்போக்கு என்பது கொடிய உயிர்கொல்லி நோய் என்பதை பெற்றோர் எல்லோரும் அறிதல் வேண்டும்.
2. வயிற்றுப்போக்கு முக்கியமாகத் தண்ணீரினால் ஏற்படும் நோயாகும். ஆகவே, குழந்தைகளுக்கு தண்ணீரை வடிகட்டி காய்ச்சி ஆற வைத்து கொடுக்க வேண்டும்.
3. வயிற்றுப்போக்கு இருக்கும் குழந்தைகளுக்கு முறையான சிகிச்சை செய்வதை விடுத்து மூடநம்பிக்கைகளான விபூதி மந்திரித்தல், குடலாத்தம் எடுத்தல், தாயத்து கட்டுதல், ஜிலேபியின் ஜீராவைக் கொடுத்தல், கசகசா அரைத்து ஊற்றுதல் போன்றவற்றைச் செய்யக்கூடாது.
4. வயிற்றுப்போக்கு ஏன் கொடிய நோய் எனில் குழந்தைகள் வேகமாக உடலில் நீரிழந்த நிலையினை அடைந்து தளர்ந்து விடுவார்கள்.
5. உடல் நீர் இழந்த நிலை என்றால் என்ன என்று பெற்றோர்கள் அறிந்து இருப்பது நல்லது.
6. உடல் நீர் இழந்த நிலையின் ஆரம்பக் கட்டத்தில் குழந்தைகளின் நாடித்துடிப்பு அதிகரிக்கும், நாக்கு வரண்டும், சிறுநீர் போவது குறைந்தும், நிறைய தாகத்தோடும் இருப்பார்கள்.
7. உடல் நீர் இழந்த நிலையின் கடுமையான கட்டத்தில் சிறுநீர் போவதே அற்றுப்போவதும், நாடித்துடிப்பு நூலிழைப் போன்றும் நாக்கு வரண்டும், கண்கள் குழிவிழுந்தும், தலையில் உச்சிக்குழி அதிக குழியுடனும், தோலின் மீழ்த்தன்மை குறைந்தும் - அதாவது தோலினைப் பிடித்து இழுத்தால் அது அப்படியே நிற்பது போன்றும், வேகமாக மூச்சு விடுவதும் இருக்கும்.
8. வயிற்றுப்போக்குடன் தொடர்ந்து இருக்கும் வாந்தி, அளவுக்கு அதிகமான தண்ணீர் போன்ற வயிற்றுப்போக்கு குறுகிய காலகட்டத்தில் அதிக முறை வயிற்றுப்போக்கு, வயிற்று உப்புசம், சிறுநீர் அற்றுப்போதல், குழிவிழுந்த கண்கள், வேகமான சுவாசம் போன்றவை இருந்தால் வயிற்றுப்போக்கினை அபாயகரமானதென பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும்.
9. வயிற்றுப்போக்கு இருக்கும் குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடிய உணவை எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தக்கூடாது.
10. அவ்வாறு உணவு கொடுக்காது நிறுத்திவிட்டால் குழந்தை இன்னும் சோர்ந்துவிடும்.
11. வயிற்றுப்போக்கு இருக்கும் குழந்தை தாய்ப்பால் குடிக்கும் குழந்தையாய் இருந்தால் தாய்ப்பாலைத் தொடர வேண்டும்.
12. குழந்தை வாந்தி மட்டும் எடுத்தால் கெட்டியான ஆகாரத்தை நிறுத்திவிட்டு நீராகாரத்தைக் கொடுப்பது நல்லது.
13. வயிற்றுப்போக்கு இருக்கும் குழந்தை இழந்த நீரினை மீண்டும் பெறுவதற்காக சர்க்கரை - உப்பு கரைசல் மாவினை தண்ணீரில் கலந்து கொடுத்தல் நல்லது.
14. உலகச் சுகாதார கழகம் பரிந்துரைக்கும் சர்க்கரை - உப்பு பொடியினை ஒரு லீட்டர் தண்ணீரில் கரைத்து கொடுத்தல் நல்லது.
15. இந்த சர்க்கரை - உப்பு பொட்டலங்கள் கடைகளில் விற்கப்படுகின்றன. இவற்றை வாங்கி வயிற்றுப்போக்கு இருக்கும் குழந்தைகளுக்கு பாலாடை கொண்டோ அல்லது டம்ளரிலிருந்து ஸ்பூன் மூலமாகவோ கொடுக்கலாம்.
16. குழந்தை சராசரியாக ஒரு கோப்பை அளவு மலம் கழித்தால் ஒரு கோப்பை அளவு சர்க்கரை - உப்பு நீரை அளிக்க வேண்டும்.
17. பேதி எத்தனை முறை ஆகிறதோ அத்தனை முறை சர்க்கரை - உப்பு நீரைக் கொடுக்கலாம்.
18. இந்த சர்க்கரை - உப்பு பொட்டலங்கள் இப்போது சிறிய பாக்கெட்டுகளில் வருகிறது. அவற்றை 200 மி.லி தண்ணீரில் கரைத்து குடிக்க வைக்கவேண்டும்.
19. அவ்வாறு 200 மி.லி தண்ணீரில் கரைக்கப்பட்ட கரைசலை நான்கு மணி நேரத்திற்குள்ளாக கொடுத்து முடித்துவிட வேண்டும்.
20. ஒரு லீட்டர் தண்ணீரில் பெரிய பாக்கெட் சர்க்கரை - உப்பு பொட்டலத்தைக் கரைத்துக் கொள்ளவேண்டும். அதனை இருபத்தி நான்கு மணி நேரத்திற்கு வைத்திருந்து சிறிது சிறிதாக புகட்ட வேண்டும்.
21. இந்த சர்க்கரை - உப்பு கரைசலின் ருசி குழந்தைகளுக்குப் பிடிக்காது. அதற்காக நாமே வீட்டில் இத்தகைய சர்க்கரை - உப்பு கரைசலை தயார் செய்து கொடுக்கலாம்.
22. ஒரு டம்ளர் (200மி.லி) தண்ணீரைக் கொதிக்க வைத்து ஆற வைத்து அதில் இரண்டு தேக்கரண்டி சர்க்கரையையும் மூன்று விரலால் ஆன ஒரு சிட்டிகை உப்பு மாவினையும் போட்டு அதனை அடிக்கடி குடிக்க கொடுக்க வேண்டும்.
23. வயிற்றுப்போக்கு இருக்கும் குழந்தைகள் நிறைய தண்ணீர் குடிக்கும். அதை நிறுத்தக்கூடாது. நிறைய தண்ணீர் குடிப்பது நல்லது.
24. வயிற்றுப்போக்கு இருக்கும் குழந்தைகளுக்கு இளநீர், மோர், தயிர், அரிசிக்கஞ்சி போன்றவற்றை கொடுப்பது நல்லது.
25. ஆறுமாத குழந்தைக்கு அரை லிட்டரும், ஒரு வயது குழந்தைக்கு ஒரு லிட்டரும் ஒன்றரை வயது குழந்தைக்கு ஒன்றரை லிட்டரும் சர்க்கரை - உப்பு நீரை அதிகமாக கொடுத்தல் வேண்டும்.
26. வயிற்றுப்போக்கு இருக்கும் போது அரரொட்டி (ஆரோரூட்) மாவினை கஞ்சியாக காய்ச்சியும் கொடுக்கலாம்.
27. விபூதி மந்திரித்தல், தாயத்து கட்டுதல் போன்றவற்றால் குணமாகிறது என்பது மூடநம்பிக்கைதான். ஏனெனில், சாதாரணமாக வைரஸ் கிருமிகளால் ஏற்படும் வயிற்றுப்போக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு நீடிக்கும். இந்த காலகட்டத்தில் செய்யப்படும் கை வைத்தியங்களால் நோய் நலமாகிவிட்டது என்று நம்புவது முறையான நம்பிக்கை ஆகாது. அவ்வாறு விபூதி மந்திரிக்காது விட்டாலும் நோய் குணமாகிவிடும்.

# இளநீர்

## வெறும் வயிற்றில் பருகுவதே நல்லது!



இயற்கை நமக்கு தந்த ஓர் அற்புத பானம் தான் இளநீர். இத்தகைய இளநீரில் ஏராளமான மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன. இதனை பருகுவதன் மூலம் நம் உடலில் உள்ள அதிகப்படியான வெப்பம் குறையும். மேலும் நம் முன்னோர்கள் இளநீரை வெறும் வயிற்றில் குடித்தால் தான் நல்லது என்று கூறுவார்கள். இப்படி வெறும் வயிற்றில் குடிப்பதால், தற்போது நாம் சந்திக்கும் பல உடல்நல கோளாறுகளுக்கு மருந்து மாத்திரைகளின் உதவியின்றி குணப்படுத்த முடியும். சரி, இப்போது நாம் இளநீரை வெறும் வயிற்றில் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று பார்ப்போம்.

**செரிமான பிரச்சினை:**

இளநீரில் உள்ள அதிகப்படியான நார்ச்சத்தால், செரிமானம் மேம்படும். அதிலும் இளநீரை தினமும் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், வயிற்றில் சுரக்கும் அமிலத்தால் ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம்.

**உடல் எடை பிரச்சினை:**

இளநீர் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பானம். இதனை ஒருவர் தினமும் காலையில் குடித்து வந்தால், நீண்ட நேரம் பசி எடுக்காமல் இருக்கும் மற்றும் கண்டதை சாப்பிட வேண்டுமென்ற எண்ணம் தடுக்கப்படும். இதனால் உடல் எடை குறைவதோடு, சீராக பராமரிக்கப்படும். முக்கியமாக இளநீரில் சிறிது கொழுப்புக்களும் உள்ளதால், ஒரே வேளையில் அளவுக்கு அதிகமாக பருகுவதைத் தவிர்க்க வேண்டும்.

**இரத்த அடர்த்தி மேம்படும்:**

இளநீரை ஒருவர் தினமும் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், இரத்தத்தின் அடர்த்தி 50 சதவீதம் அதிகரிக்கும்.

**நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்:**

இளநீர் உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தை வலிமைப்படுத்தி, உடலைத் தாக்கும் கிருமிகளிடமிருந்து உடலுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கும்.

**சிறுநீரக ஆரோக்கியம்:**

இளநீரில் உள்ள சிறுநீர்ப்பெருக்கி பண்புகள், சிறுநீரகங்களை சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள உதவும். முக்கியமாக இளநீரை ஒருவர் தினமும் குடித்து வந்தால், சிறுநீரகம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் இருந்து விலகி பாதுகாப்புடன் இருக்கலாம்.

**தைராய்டு:**

இளநீர் தைராய்டு ஹார்மோன்களின் உற்பத்தியைத் தூண்டி, தைராய்டு சுரப்பியின் செயல்பாட்டை மேம்படுத்தும்.

**நாள்பட்ட சோர்வு:**

எப்போதும் சோர்வை உணர்கிறீர்களா? தினமும் காலையில் வெறும் வயிற்றில் இளநீரைக் குடித்தால், உடலின் ஆற்றல் மேம்பட்டு, உடல் சோர்வு தடுக்கப்படும்.

**கொலஸ்ட்ரால்:**

வெறும் வயிற்றில் இளநீர் குடித்தால், உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ரால்கள் குறைந்து, கொலஸ்ட்ரால் பிரச்சினையில் இருந்து விடுபடலாம்.

# வீட்டில் இருக்கும் பொருட்களை பாதுகாப்பதற்கான டிப்ஸ்

1. கடையிலிருந்து பிளாஸ்டிக் கவரில் வெண்ணெய் வாங்கி வந்தால் அப்படியே ∴பிரிட்ஜில் இரண்டு மணி நேரம் வைத்திருந்து, பின் எடுத்தால் கையில், கவரில் வெண்ணெய் ஓட்டவே ஓட்டாது.
2. தக்காளியை சிறிது வேகவிட்டுத் தோல் உரித்து மிக்ஸியில் நைஸாக அரைத்து ∴பிரிட்ஜில் வைத்துக் கொண்டால் (உப்பு, மிளகாய்ப்பொடி, மிளகுத்தூள் சேர்த்து கொதிக்கவிட்டு பின் ஆற வைத்து), தக்காளி சாஸாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். தக்காளி இல்லாத சமயத்தில் சாம்பார், ரசத்திற்கும், கிரேவிகள் செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. சுக்கு, ஏலக்காயைப் பொடி செய்து வைத்துக் கொண்டால் டீ போடும்போது அவ்வப்போது சேர்த்துக் கொள்ளலாம்.
4. இடியாப்பமாவு, பூரண கொழுக்கட்டைமாவு பிசையும் பொழுது அரை டம்ளர் கொதிக்கும் பாலையும் விட்டு கிளறினால் நல்ல வெள்ளையாக இருக்கும்.
5. தினமும் இரவு பால் அருந்தும்போது சர்க்கரைக்குப் பதில் வெல்லம், ஏலக்காய் சேர்த்து கொதிக்கவிட்டு அருந்தினால் இரும்புச்சத்து சேரும். சுவையும் நன்றாக இருக்கும்.
6. வாரம் ஒருமுறை இஞ்சியையும், பூண்டையும் தனிதனியாக அரைத்து விழுதாக ∴பிரிட்ஜில் வைத்துக் கொண்டால் சைவ பிரியாணி மற்றும் அசைவ பிரியாணி செய்யும் பொழுது எளிதாக இருக்கும்.
7. நூடுல்ஸ் செய்யும்பொழுது வெங்காயம், தக்காளி வதக்கும்போது சிறிது மிளகுத்தூள், உப்பு, மிளகாய்த் தூளையும் அதில் உள்ள மசாலாவோடு சேர்த்து செய்தால் சுவை கூடுதலாக இருக்கும்.




## அரசுத்தலைவர் டிரம்ப் சமய சுதந்திரத்தைப் பாதுகாக்க...




அமெரிக்க ஐக்கிய நாட்டில், சமய சுதந்திரம், கடந்த பல ஆண்டுகளாக, இதுவரை இல்லாத அளவுக்கு, பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றது என்று சொல்லி, சமய சுதந்திரத்தை ஊக்குவிக்கும் அரசாணையில், அரசுத்தலைவர் டிரம்ப் அவர்கள், கையெழுத்திடுமாறு, அந்நாட்டு ஆயர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். அமெரிக்க ஐக்கிய நாட்டு கத்தோலிக்கருக்கென, இணையதளத்தில் வெளியிட்டுள்ள கடிதத்தில், சமய சுதந்திரத்தை மதிப்பதற்கு உதவும், அரசாணையை அரசுத்தலைவர் வெளியிடுவதன் வழியாக, தனிநபர் மற்றும் நிறுவனங்களின் சமய சுதந்திரம் காக்கப்படும் என்று, ஆயர்கள் கூறியுள்ளனர். இணையதளத்திலுள்ள (www.votervoice.net/ USCCB/Campaigns) இக்கடிதத்தில், தனிநபர்கள் கையெழுத்திடுமாறும், ஆயர்கள் கூறியுள்ளனர். சமய சுதந்திரம் குறித்த அரசாணை வரைவுத் தொகுப்பு, கடந்த சனவரி இறுதியில் ஊடகங்களில் கசிந்ததைத் தொடர்ந்து, ஆயர்கள், இணையதளத்தில், இக்கடிதத்தை வெளியிட்டுள்ளனர். இதற்கிடையே, டிரம்ப் அவர்களின் குடியேற்றதாரர் குறித்த அரசாணைக்கு, பலதரப்பினரும், எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மறைக்கல்வியுரை : அமைதிக்கும் தேறுதலுக்கும் ஆதாரம், நம்பிக்கை

மிகக்குளிராக இருந்த உரோம் நகரின் தட்ப வெப்ப நிலை, ஓரளவுக்கு மாற்றம் கண்டு, சிறிதளவு வெப்பம் அதிகரித்துள்ள நிலையில், இப்புதனன்று, குளிர்காற்றின் மத்தியிலும், சூரியனும் பிரகாசமாக ஒளிர்விட, வத்திக்கானின், அருளாளர் திருத்தந்தை 6ம் பவுல் அரங்கம், திருப்பயணிகளால் நிரம்பி வழிந்தது. கிறிஸ்தவ நம்பிக்கைக் குறித்து தான் வழங்கிவரும் புதன் மறைக்கல்வி உரைகளின் தொடர்ச்சியாக, இப்புதனன்று, “ஒருவரை ஒருவர் தேற்றுதல் மற்றும் அமைதியின் ஆதாரமாக, நம்பிக்கை உள்ளது” என்ற தலைப்பில் தன் சிந்தனைகளை மக்களோடு பகிர்ந்து கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்தவ நம்பிக்கைக் குறித்த நம் மறைக்கல்வி தொடரில், நம்பிக்கை எனும் நற்பண்பு என்பது நமதாண்டவரின் உயிர்ப்பிலும், நம் உயிர்ப்பு குறித்து அது தரும் வாக்குறுதியிலும் தன் அடித்தளத்தைக் கொண்டுள்ளது என நாம் ஏற்கனவே நோக்கியுள்ளோம். கிறிஸ்தவ நம்பிக்கை என்பது, முற்றிலும், தனிமனிதருக்குரிய ஒரு விடயம் சார்ந்தது, அதேவேளை, சமூகத்திற்கும் உரிய பொதுவான ஒன்று. மற்றவர்களின் தேவை குறித்த செயல்முறை அக்கறையின் வழியாகவும், ஒருவர் ஒருவருக்கான செபம் வழியாகவும், ஒருவர் ஒருவரை நம்பிக்கையில் உறுதிப்படுத்த வேண்டும் என புனித பவுல், தொடக்க கால திருஅவையின் அங்கத்தினர்களை அடிக்கடி ஊக்கப்படுத்தினார். ஏழைகளுக்கும், விசுவாசத்தில் பலவீனமாக இருப்பவர்களுக்கும், துன்புறுவோருக்கும், சோதனைகளால் பலமிழந்து இருப்பவர்களுக்கும் இந்த ஆதரவு வழங்கப்பட வேண்டும். பிறரன்போடு தன் இணைப்பைக் கொண்டுள்ள கிறிஸ்தவ நம்பிக்கையானது, அன்புடன் கூடிய அக்கறை மற்றும் ஒருவர் ஒருவருக்கான ஆதரவு இவற்றைக் கொண்ட சமுதாய உடலாகவே மாறவேண்டும். உடல் என்பது திரு அவை, அதன் ஆன்மாவே, தூய ஆவியானவராகும். கிறிஸ்துவின் வாக்குறுதிகளில் நாம் கொண்டுள்ள விசுவாச சாட்சியம் என்பது, மேலும் விரிவடைந்து, சமூகம் முழுமையின் வாழ்வையும் வளப்படுத்த வேண்டும் என்பதற்கானது. இருளான மற்றும் துன்பம் நிறைந்த நேரங்களில், நம்பிக்கை என்பது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல என்பது நமக்குத் தெரியும். இருப்பினும், கடவுளின் பராமரிப்பில் முழு அக்கறை கொண்டவர்களாக, அனைத்து மனித குடும்பத்திற்கும் நம்பிக்கையில் வாழும் சாட்சிகளாக செயல்படும் வகையில் நம் சமூகங்கள் தொடர்ந்து உழைப்பதற்கு, நம் இதயங்களில் குடியிருக்கும் தூய ஆவி நமக்கு கற்பிப்பாராக.

இவ்வாறு, தன் மறைக்கல்வி உரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செவ்வாய்க் கிழமையன்று ஜப்பானில், Justo Takayama Ukon என்ற பொதுநிலையினர், அருளாளராக அறிவிக்கப்பட்டது குறித்து எடுத்துரைத்தார். விசுவாச வலிமை, மற்றும், பிறரன்பிற்கான அர்ப்பணத்தின் சாட்சியமாக விளங்கும் இந்த அருளாளர், 1615ம் ஆண்டு மனிலாவில் மறைசாட்சியாக உயிரிழந்தார். மேலும், இப்புதனன்று, திருஅவையில் சிறப்பிக்கப்பட்ட, “மனித வர்த்தகத்திற்கு எதிரான உலக விழிப்புணர்வு மற்றும் செப நாள்” குறித்தும் நினைவூட்டி, இத்தகைய துன்ப நிலைகளுக்கு உள்ளாகும் மக்களின், குறிப்பாக, சிறார்களின் விடுதலைக்கு அனைவரும் உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டார் திருத்தந்தை. வரும் சனிக்கிழமையன்று, 25வது நோயுற்றோர் உலக நாள் சிறப்பிக்கப்படவிருப்பதையும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைத்து நோயுற்றோருக்காகவும், அவர்களை பராமரிப்பவர்களுக்காகவும் சிறப்பான விதத்தில் செபிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

இறுதியில், அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# டிரம்ப் ஆணை, கிறிஸ்தவப் பாரம்பரியத்திற்கு இழுக்கு

“அன்னியருக்கு அன்பு காட்டுங்கள் ஏனெனில் எகிப்தில் நீங்களும் அன்னியராய் இருந்தீர்கள்” என்று விவிலியம் கூறும் அறிவுரைக்கு முரணாக, அரசுத் தலைவர் டொனால்டு டிரம்ப் அவர்களின் அண்மைய அரசாணை உள்ளது என்று, அமெரிக்க ஐக்கிய நாட்டில் பணியாற்றும் இயேசு சபையினரின் இரு மாநிலத் தலைவர்கள் இணைந்து ஓர் அறிக்கையை, பிப்ரவரி 1, இப்புதனன்று வெளியிட்டுள்ளனர்.

ஏழு இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதி மறுத்து, அரசுத் தலைவர் டிரம்ப் அவர்கள் அண்மையில் வெளியிட்டுள்ள அரசாணையைக் கண்டனம் செய்து, கலிபோர்னியா, மற்றும் ஒரேகான் மாநிலங்களின் இயேசு சபைத் தலைவர்கள் இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளனர். டிரம்ப் அவர்கள் வெளியிட்டுள்ள இவ்வாணையின் விளைவாக, ஆயிரமாயிரம் பெண்களும், குழந்தைகளும் போரின் கொடுமைகளுக்கு மீண்டும் உள்ளாக்கப்படுகின்றனர் என்றும், இவ்வாணை, கிறிஸ்தவ, மற்றும் அமெரிக்க பாரம்பரியத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அவமானம் என்றும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வேற்றுமைகள் வளர்ந்துவரும் இன்றைய உலகில், சுவர்களைக் கட்டுவதற்குப் பதில், பாலங்கள் அமைப்பதில் இயேசு சபையினர் இன்னும் தீவிர முயற்சிகள் மேற்கொள்வர் என்பதை, Scott Santarosa, மற்றும், Michael Weiler என்ற இரு மாநிலத் தலைவர்களும் இவ்வறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர். இதற்கிடையே, Ignatian Solidarity Network (ISN) என்ற இயேசு சபை அமைப்பு, அமெரிக்க ஐக்கிய நாடு, மற்றும் கனடாவில் வாழும் மக்களுடன், இந்த அரசாணையைக் குறித்த ஒரு கலந்துரையாடலை, மாசி 2, வியாழன் மாலை, வலைத்தளம் வழியே மேற்கொண்டது என்று ICN கத்தோலிக்கச் செய்தி கூறுகிறது.

# தடுப்பாணையை விரைவில் நீக்குவது நன்மை பயக்கும்



ஒரு நாட்டிலிருந்து வெளியேறும் புலம்பெயர்ந்தோரை மீண்டும் அந்த நாட்டில் குடியேற்றுவது ஒன்றே நிரந்தர தீர்வு என்றும், இடைப்பட்ட காலத்தில் அவர்களுக்கு புகலிடம் அளிப்பது மனிதாபிமானம் என்றும், ஐ.நா. பொதுச்செயலர் அந்தோனியோ கூட்டேரஸ் அவர்கள் கூறினார். அரசுத்தலைவர் டொனால்டு டிரம்ப் அவர்கள், ஏழு நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியருக்கு, அமெரிக்க ஐக்கிய நாட்டில் நுழையும் அனுமதியை மறுத்திருப்பதையொட்டி, இப்புதனன்று கருத்து வெளியிட்ட கூட்டேரஸ் அவர்கள், இந்தத் தடுப்பாணையை விரைவில் நீக்குவது நன்மை பயக்கும் என்று கூறினார். உலகத் தீவிரவாதத்தை நீக்குவதற்காக இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படும் காரணம், தனக்கு ஏற்புடையது அல்ல என்றும், தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் யாரும், தங்கள் சொந்த நாட்டு கடவுச் சீட்டுடன் அமெரிக்க ஐக்கிய நாட்டில் நுழைவதில்லை, மாறாக, அவர்களில் பலர் ஐரோப்பிய கடவுச் சீட்டுடன் அந்நாட்டில் நுழைந்துள்ளனர் என்றும், கூட்டேரஸ் அவர்கள் எடுத்துரைத்தார். துன்புறும் மனித சமுதாயத்திற்கு உதவிகள் செய்வதில், அமெரிக்க ஐக்கிய நாடு, பல முயற்சிகள் மேற்கொண்டு வந்துள்ளது என்றும், தற்போது, இந்த அரசாணை வழியே மனிதாபிமான உதவிகள் நிறுத்தப்பட்டிருப்பது, கவலையைத் தருகிறது என்றும், ஐ.நா. பொதுச்செயலர் கூட்டேரஸ் அவர்கள், செய்தியாளர்களிடம் கூறினார்.

‘நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியவும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்



# உள்ளத்தை தொடும் போதனைகள்

## வாழ்விற்கு புதிய வழிமுறைகள்

அதிகாரம் 01

## 03. மலைப் பொழிவு



**மத் 5:1** இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரருகே வந்தனர்.

**மத் 5:2** அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை

**மத் 5:3** ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.

**மத் 5:4** துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.

**மத் 5:5** கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.

**மத் 5:6** நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர்.

**மத் 5:7** இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.

**மத் 5:8** தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.

**மத் 5:9** அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.

**மத் 5:10** நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

**மத் 5:11** என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே!

**மத் 5:12** மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்.

**விளக்கம் :** இயேசுவின் மலைப்பொழிவு வசனங்கள், பாக்கியங்கள் அல்லது பேறுகள் என்று அழைக்கப்படுகின்றன. அவைகள் எத்தகையோர் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என அறிவிக்கின்றன. ஏனெனில் இவர்கள் சொந்தப் புண்ணியங்களாலும் கடவுளின் சிறப்பு பாதுகாப்பிலும் விளங்குகின்றனர். இயேசு இங்கு பண்புடைய மனிதர்களைப் பற்றி, குறிப்பாக யாரெல்லாம் தங்களுடைய செயல்களாலும், வாழ்வாலும் மனிதக் குலத்திற்குப் பயனளிக்க விழைந்து, பொதுநன்மைக்காக தங்களுடைய சொந்த விருப்பங்களைத் தியாகம் செய்கின்றார்களோ அவர்களைப் பற்றியே இயேசு குறிப்பிடுகினறார். எடுத்துக்காட்டாக புனித பிரான்சிஸ் அசிசி, மகாத்மா காந்தி, மாட்டீன் லூத்தர் புனித தெரசா இன்னும் இவர்களைப் போன்று ஆயிரம் ஆயிரம் பேர் இயேசு அறிவித்த பேறுகளைப் பெறுகின்றனர். இப்பேறுகளைப் பற்றிய அதிக விளங்கங்களை லூக்கா நற்செய்தித் தொகுப்பில் எண் 04இல் காணலாம்..

## 04. பேறு பெற்றவர்கள்

**லூக் 6:20** யேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை ”ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே.

**லூக் 6:21** இப்பொழுது பட்டினியாய் இருப்போரே, நீங்கள் பேறு பெற்றோர் ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுதுகொண்டிருப்போரே, நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள்.

**லூக் 6:22** மானிடமகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து, ஒதுக்கிவைத்து, நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும்போது நீங்கள் பேறுபெற்றோர்.

**லூக்6:23** அந்நாளில் துள்ளி மகிழ்ந்து கொண்டாடுங்கள் ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். அவர்களுடைய மூதாதையரும் இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்துவந்தனர்.

**லூக் 6:24** ஆனால் செல்வர்களே ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டீர்கள்.

**லூக் 6:25** இப்போது உண்டு கொழுந்திருப்போரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் பட்டினி கிடப்பீர்கள். இப்போது சிரித்து இன்புறுவோரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் துயருற்று அழுவீர்கள்.

விளக்கம் : நற்செய்தியில் மத்தேபு எழுதியுள்ள பேறுகளை லூக்கா நிறைவுப்படுத்துவதாக உள்ளது. லூக்காவில் “ஐயோ கேடு” என்ற வசனங்களையும் காண்கின்றோம். இயேசு இவ்வார்த்தையைப் பயன்படுத்தி மக்களின் வாழ்வைத் துயரப்படுத்த விரும்பவில்லை. மாறாக மக்களின் வாழ்வை மகிழ்ச்சிப்படுத்தவே இயேசு எல்லாம் செய்தார். எனவே அவர் கூறுகின்றார். “மக்கள் வாழ்வு பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன் (யோவான் 10:10). இயேசு பணக்காரர்களக்கு எதிராக இல்லை. மாறாக மற்றவர்களைப் பயன்படுத்திச் செல்வரானவர்களையும், சுயநலத்திற்காகவே செலவிடுபவர்களையும் எதிர்க்கின்றார்.

இயேசு அறிவிக்கும் பேறுகள் ஒரு புதிராகவே இருக்கின்றன. ஏனெனில் அதிர்ஷ்டமானவர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மாறாக அதிர்ஷ்டம் இல்லாதவர்கள் வாழ்வின் நேர்மறை மனப்பாங்கோடு காண்பதால் அவர்கள் பேறு பெற்றவர்கள் என வெளிப்படுத்துகிறார். காரணம் இவர்கள் ஏழ்மை, பசி, துன்பம், ஒடுக்கப்படுதல் ஆகியவற்றிற்கு உள்ளானார்கள். இத்தகைய துன்பங்களை நம்பிக்கையோடும், துணிவோடும் எதிர் கொள்பவர்களும் மகிழ்ச்சியாய் இருக்க முடியம் என்பதை இயேசு வெளிப்படுத்துகின்றார்.

## சுயக்கட்டுப்பாடு

‘யாரும் பார்க்கிறார்களோ இல்லையோ, எப்போதும் சரியானதைச் செய்வதுதான் கட்டுப்பாடு’

‘மனதைக் கடிவாளமிட கட்டுப்பாடு மிக அவசியம் இல்லாவிட்டால் மன அமைதி இருக்காது

‘அடக்கப்படாத குதிரையால் இலக்கை அடைய முடியாது. நீராவியோ, அல்லது வாயுவோ ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருந்தால் தான் சக்தியைக் கொடுக்கும். எந்தவொரு வாழ்வும் கட்டுப்பாடான அர்ப்பணமான மையப்படுத்தும் வாழ்வாக இல்லாவிட்டால் வளர்ச்சிப் பெறாது.

‘சுயக் கட்டுப்பாட்டைச் சொல்லிக் கொடுப்பதுதான் கட்டுப்பாட்டின் சிறப்பு’

‘இலக்குகளுக்கும், சாதனைகளுக்கும் இடையேயுள்ள பாலம் தான் கட்டுப்பாடு

‘ஒரு நபர் விதிமுறைகளை எவ்வளவு தூரம் மதிக்கிறாரோ, அந்த அளவிற்குக் கட்டுப்பாட்டை மதிக்கிறார் என்று அர்த்தம்’

கட்டுப்பாடு குறிப்பாக சுயக்கட்டுப்பாடு இல்லாத ஒருவரிடத்தில் கடமை தவறாத பற்றுறுதியை எதிர்பார்க்க முடியாது

‘உரிமை என்பது பிறர் நம்மை கட்டுப்படுத்துவதைவிட, நம்மையே நாம் கட்டுப்படுத்தக் கிடைக்கும் ஒரு வாய்ப்பு



# தவக்காலம் திருவழிபாட்டுக் கண்ணோட்டம்

## ஒரு மனத்துயரின் காலம் ....
## ஒரு மனமாற்றத்தின் காலம் ....
## ஒரு பாவமன்னிப்பின் காலம் ....
## ஒரு இறை இரக்கத்தின் காலம் ....
## ஒரு மகிழ்ச்சியின் காலம் ....

**தவக்காலம் ஒரு மனத்துயர் மனமாற்றத்தின் காலம்**

இதற்கு இறைவேண்டலுடன் தவமும் உறுதுணையாய் இருக்கின்றன. தவக்காலம் ஒரு பாவமன்னிப்பின் காலம், இதற்கு இறையருள் பக்கபலமாய் இருக்கின்றது. தவக்காகலம் ஒரு மகிழ்ச்சியின் காலம் (குறிப்பாக தவக்காலம் நான்காம் ஞாயிறு) இதற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் அதில் நமது பங்கேற்பும் அல்லது உயிர்தெழுதலில் நமக்கு உள்ள பங்கும் சான்றுகளாய் நிற்கின்றன.

இத்தகைய சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்ட இத்தவக்காலம் எவ்வாறு திருவழிபாட்டுக் நிகழ்வுகளில் ஒன்றாக இணைந்தது. அது எவ்வாறு எதற்கு நமக்கு அழைப்பு விடுக்கின்றது என்பதை இவண் அறிவோம்.

**1] தவக்காலத்தின் நாள்கள் திருவழிபாட்டில் நுழைதல்**

தவக்காலம் திருநீற்றுப் புதன் அன்று ஆரம்பமாகி புனித சனிக்கிழமையோடு நிறைவடைகின்றது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பெருவிழாவை தகுதியான விதத்தில் கொண்டாடத் தயாரிக்கும் ஓர் அருளின் காலமாக, இறை இரக்கத்தின் காலமாக அமைந்திருக்கிறது. நாம் கிறிஸ்துவின் பாடுகளிலும் இறப்பிலும் சிறப்பாகப் பங்கு கொள்வதின் வழியாகக் கிறிஸ்துவின் அருளைப் பெருமளவில் பெற நமக்கு உதவும் காலமாக திகழ்கிறது.

ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்த்து (குறிப்பு : ஆண்டவரின் நாளில் நோன்பு அனுசரிக்கப்படுவதில்லை) பிற நாற்பது நாள்களே தவக்காலத்தின் நாள்கள் ஆகும். இந்த நாற்பது நாள்களுக்கு (இன்னொரு விதமாகச் சொன்னால், எண் 40க்கு) விவிலியப் பின்னணி உண்டு.

- ❊ நோவா காலத்தில் பெரு வெள்ளம் நீடித்தது 40 நாள் (தொ.நு 7:9)
- ❊ மோசே சீனாய் மலையில் நோன்பு இருந்தது 40 நாள்கள்
- ❊ எலியா இறைவாக்கினர் உண்ணா நோன்பு இருந்தது 40 பகலும் 40 இரவும்.
- ❊ யோனா நினிவே மக்கள் மனம் திரும்பப் போதித்தபோது, அவர்கள் தவம் மேற்கொண்டது 40 நாள்கள்.
- ❊ மரியாவும் யோசேப்பும் இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தது அவர் பிறந்த 40ஆம் நாளில் (லூக் 2:2)
- ❊ இயேசு பாலைநிலத்தில் உண்ணா நோன்பு இருந்தது 40 நாள்கள் இரவும் பகலும் (மத் 4:2)

இஸ்ராயேல் மக்களைப் பொருத்தமட்டில் இவ்வாறு கடவுளோடு ஒப்புரவாகவும் இயேசுவைப் பொருத்தமட்டில் தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவும் எடுத்துக் கொள்ளப்பட்ட தவமுயற்சிகள் தான் தொடர் நிகழ்வுகளாக கிறிஸ்தவர்களின் வாழ்வில் குடிகொண்டன. இவை பாஸ்கா திருவழிபாட்டுக் கொண்டாட்டத்திற்குத் தயாரிப்பாக நிலைநின்றன.

வரலாற்றுப் பூர்வமாகப் பார்க்கின்றபொழுது 3,4ஆம் நூற்றாண்டுகளில் கீழைத் திருச்சபையிலும் மேலைத் திருச்சபையிலும் பாஸ்காக் கொண்டாட்டத்திற்கான தயாரிப்புக் காலம் 40 நாள்களாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இவை, ஏற்கனவே சொன்னதுபோல, தவம், உண்ணா நோன்பு, மத வழிபாடுகளாலும் கீழே காண இருப்பதுபோல திருமுழுக்குக் கொண்டாட்டங்களாலும் நிகழ்த்தப்பட்டுள்ளன. உரோமில் 4ஆம் நூற்றாண்டில் மூன்று வாரங்கள் ஒறுத்தல்கள் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. 7ஆம் நூற்றாண்டில், மேற்கத்தியத் திருச்சபையில் 40 நாள்கள் இவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 13ஆம் நூற்றாண்டில் தவக்கால மறையுரைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. திரிதெந்து பொதுசங்கமும் இதை "நம்பிக்கையாளரின் அறிவுரைகள்" என அழைக்கிறது. நாளடைவில் திருச்சபை இக்காலத்தில் புனிதர்களின் திருவிழாக்களின் எண்ணிக்கையைக் குறைத்தது. அன்றாட மறையுரை விவிலிய வழிபாடு ஆகியவற்றை நோக்கி கவனம் செலுத்தியுள்ளது.

**2] தவக்காலச் சிறப்புத் திருநிகழ்வுகள்**

**அ] திருச்சிலுவை பாதைத் திருச்சடங்கு :** இது கிறிஸ்துவின் பாடுகளையும் இறப்பையும் தியானிக்க உதவும் ஒரு பக்தி முயற்சி. இது பிரான்சிஸ்கன் சபையினரால் 14ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. திருச்சிலுவைப் பாதையின் நிலைகளின் எண்ணிக்கை 14 என்பதை திருத்தந்தை கிளமெந்து XII (1730 - 40) அவர்கள் நிலைப்படுத்தினார். இத்திருச்சடங்கை தனித்தோ குழுவாகவோ செயல்படுத்தலாம்.

**2] புனித வாரம் :** தவக்காலத்தின் இறுதி வாரம் புனித வாரமாகக் கொண்டாடப்படுகின்றது. இது திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு தொடங்கி பாஸ்கா திருவிழிப்புக்கு முன் வரை கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வாரத்தில் எண்ணெய் மந்திரிப்புச் சடங்கும் இயேசுவின் இறுதி இராவுணவு கொண்டாட்டமும் திருச்சிலுவை ஆராதனை திருச்சடங்கும் இடம் பெறுகின்றன.

I) திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு கொண்டாட்டம் 4ஆம் நூற்றாண்டில் எருசலேமிலும்
II) எண்ணெய் மந்திரிப்புச் சடங்கு 2ஆம் நூற்றாண்டில் கீழைத் திருச்சபையிலும்
III) திருச்சிலுவை ஆராதனை 7ஆம் நூற்றாண்டில் உரோமையிலும் திருவழிபாட்டில் இடம் பெற்றிருக்கின்றன.

**3] தவக்காலம் திருவழிபாட்டிற்கான சிறப்பு அம்சங்கள்**

இச்சிறப்புக் காலம் இரு முக்கிய பரிமாணங்களைக் கொண்டிருக்கிறது. இவை தவக்கால சிறப்பு வழிபாடுகளில் நன்முறையில் பங்கேற்க நம்மை அழைக்கிறது.

அ) தவம் மேற்கொள்ளுதலும்
ஆ) திருமுழுக்கிற்காகத் தயாரிப்பதும் திருமுழுக்கை நினைவுகூர்தலும்,

**அ] தவம் மேற்கொள்ளுதல்**

தவம் மேற்கொள்ளுதல் பலவிதமான தவச் செயல்களை உள்ளடக்கி இருக்கிறது. குறிப்பாக ஓறுத்தலும், உண்ணா நோன்பும், இவை தவிர, இறைவேண்டலில் நீண்ட நேரம் ஈடுபடுவது. விவிலிய வழிபாடுகளில் ஈடுபடுவது, தவக்கால மறையுரைகள், பாவமன்னிப்பு பெறுதல் திருப்பலியில் அடிக்கடி பங்கு கொண்டு நற்கருணை அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்வதும் போன்ற செயல்களும் தவம் மேற்கொள்ளுதலுக்குச் சிறப்புச் செய்பவை.

தவம் மேற்கொள்ளுதல் வெகுவாக உள்ளார்ந்த வழிபாட்டைக் குறிப்பதாக இருந்தாலும் இது வெளியார்ந்த நல்செயல்களைக் குறிக்கத் தவறுவதில்லை. எடுத்துகாட்டாக தர்மம் செய்தலும் பிறர் அன்புச் செயல்களில் ஈடுபடுதலும்.

**ஆ] திருமுழுக்கிற்காகத் தயாரிப்பதும் திருமுழுக்கை நினைவு கூர்தலும்**

தொடக்காலத் திருச்சபையில் திருமுழுக்கிற்காக தயாரிப்பது மிகச் சிறப்பான இடத்தை பெற்றிருக்கிறது என்பதை திருவழிபாட்டு நிகழ்வுகள் வழியாக நாம் அறிய முடிகிறது. இதற்கு முதியோர்களுக்கான புகுமுக அருளடையாளக் கொண்டாட்டத்திற்கான தயாரிப்புக் காலங்களும் அதன் கொண்டாட்டங்களும் (மூன்று ஆண்டுகள்) சான்றுகளாகத் திகழ்கின்றன.

இக்காலத் திருச்சபையில் பாஸ்காத் திருவிழிப்புக் கொண்டாட்டத்தில் திருமுழுக்கு அருளடையாளக் கொண்டாட்டம் நடைபெறுமேயானால், அதற்காகத் தயாரிக்கப்படுவதும் தயாரிக்கப்படுபவர்களும் ஒருபுறம் உண்டு, மறுபுறம் திருமுழுக்கு கொண்டாட்டம் இடம் பெறாதபொழுதும், நமது கிறிஸ்தவ வாழ்வை மேன்மைப்படுத்த இத்தவக்காலம் நம்மைத் தயாரிக்கிறது. இதன் முத்தாய்ப்பாக அமைந்திருப்பதுதான் பாஸ்காத் திருவிழிப்புக் கொண்டாட்டத்தில் சிறப்பாக இடம்பெறும் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்கும் திருச்சடங்கு.

தவக்காலத் திருவழிபாடு நாம் திருமுழுக்குப் பெற்றவர்கள் என்பதை நினைவு கூரவும் அத்தகைய சிறந்த நிலையை இன்னும் ஆழப்படுத்தவும் உதவுகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றி, "மறுகிறிஸ்து"வாக நாம் வழிநடத்தப்படுகின்றோம். எவ்வாறெனில் இவ்வருள் நம்பிக்கையால் நம்மை ஒளிர்விக்கிறது. புதுவாழ்வால் நம்மை மீண்டும் புதுப்பிக்கிறது. தீமைகளை விலக்குகிறது. குழு வாழ்வுக்கு நம்மை இட்டுச் சென்று இவ்வுலகில் சகோதரர், சகோதரிகளாக வாழ படிப்பிக்கின்றது. இறுதியாக ஆண்டவரின் இறுதி வருகைக்காக நம்மை காத்திருக்கச் செய்கிறது.

**4] திருவழிபாட்டு வாழ்வுச் சிறப்புக் கண்ணோட்டத்தில்**

தவக்காலம் அனைத்துலகத் திருச்சபையின் ஒறுத்தலுக்கும் புதுப்பித்தலுக்கும் வழிவகுகின்றது. எனவே ஒரு தனிப்பட்ட நபர் மட்டும் தனது ஈடுபாட்டைக் காண்பித்தல் போதுமானது அல்ல, மாறாக அனைவரும் கிறிஸ்துவின் மறைஉடலின் உறுப்பினர்களாகத் திகழ்ந்து இச்செயல்களில் ஈடுபட வேண்டும்.

- ✷ திருப்பலியில் ஒரே உள்ளமும் ஒரே மனமும் கொண்டவர்களாகத் திகழ்தல்.
- ✷ பங்குத் திருச்சபையில் நடைபெறும் அருளடையாளக் கொண்டாட்டங்களில் அனைவரும் பங்கு கொள்ள முன்வருதல்.
- ✷ முழங்கப்பட்ட நற்செய்திக்கும் விளக்கப்பட்ட மறையுரைக்கும் செவிசாய்த்து வாழ்தல்.
- ✷ கிறிஸ்துவின் மறை உடலாக வாழ முற்படுதல்
- ✷ கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழப்படுத்த வழி காணுதல்.
- ✷ தங்களது இறைவேண்டலை வாழ்வாகவும் வாழ்வையே கிறிஸ்துவைப் போன்று இறைவேண்ட-லாகவும் மாற்ற முனைதல்.
- ✷ கடவுளோடும் நம் சகோதர சகோதரிகளோடும் ஒப்புரவாக ஈடுபடுதல்.
- ✷ கிறிஸ்துவின் பாடுகளைத் தியானித்து அவற்றில் பங்கொள்ளும் விதமாக திருச்சிலுவைப்பாதை வழிபாட்டில் பங்கு கொள்ளுதல் நம் அன்றாடச் சிலுவையைச் சுமக்க கிறிஸ்துவின் பாடுகள் வழியாக ஆறுதலும் ஆற்றலும் பெறுதல்.

இவ்வாறு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பெருவிழாவை சிறப்பாக கொண்டாடவும் கிறிஸ்துவின் பாஸ்கா மறை நிகழ்வுகளில் தகுதியுடன் பங்குபெறவும் தவக்காலம் மனத்துயர் காலமாக (மனமாற்றத்தின் காலமாக), பாவமன்னிப்பின் காலமாக (இறை இரக்கத்தின் காலமாக), மகிழ்ச்சியின் காலமாக நம் ஒவ்வொருவருக்கும் அமையட்டும்.

**நன்றி : தோழன் 2013**




சிட்டுக்குருவி ஒன்று மரத்தினின்று கீழே விழுந்தது. அதன் அருகில் சென்று பார்த்த பொழுது, மீண்டும் மீண்டும் பறக்க முயன்று இயலாமல், கீழே விழுந்தது.

பறந்தால் தான் பறவை நீந்தினால்தான் மீன். நிமிர்ந்தால்தான் மனிதன் மனிதனை நிமிர விடாமல். குனியவைக்கும், குறுக வைக்கும், கட்டுக்கள் மலிந்து போன உலகில் கட்டுக்களை உடைத்து, கயிறுகளை அறுத்து, மனிதன் பெருமிதம் கொள்ளும், நேரமெல்லாம் விடுதலை நேரங்கள் தான்.

**நம் விடுதலை எவ்வாறு**

# வஹாக்கோட்டை தேசிய திருத்தலம்
## தவக்கால திருயாத்திரை – 2017 (தவக்கால நிகழ்ச்சி நிரல்)

### திருநீற்றுப் புதன்
**திருப்பலிகள் : காலை 7.00 மணிக்கு மற்றும் மாலை 5.00 மணிக்கு**

### வாராந்த விசேட திருவழிபாடுகள்
**வெள்ளிக்கிழமைகளில் : கல்வாரியில்**
மாலை 4.00 மணிக்கு திருச்சிலுவைப்பாதை மற்றும் திருப்பலி

**ஞாயிறு திருப்பலிகள் : ஆலயத்தில்**
காலை 7.00 மணி மற்றும், காலை 10.30 மணிக்கு

### யாத்திரிகர்களின் கவனத்திற்கு
- திருயாத்திரைக்காக வரும் இறைமக்கள் உங்களது வசதிக்கேற்ப, திருச்சிலுவைப்பாதைத் தியானம் மற்றும் திருப்பலிகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம்.
- தங்குமிட வசதிகள் மற்றும் உணவு வசதிகளை, முன்கூட்டியே நீங்கள் அறிவித்தால், அவை ஒழுங்கு செய்து தரப்படும்.

**இறை அன்பை அனுபவிக்க உங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்!!!**

### புனித வார நிகழ்வுகள்
**குருத்தோலை ஞாயிறு : ஆலயத்தில்**
திருப்பலிகள் : காலை 7.00 மணி மற்றும் 10.30 மணிக்கு

**பெரிய வியாழன் (ஆண்டவரின் இராவுணவு)**
**பாதம் கழுவும் திருச்சடங்கு** மாலை 5.00 மணிக்கு, அதனைத் தொடர்ந்து **திவ்விய நற்கருணை ஆராதனை** நள்ளிரவு வரை

**பெரிய வெள்ளி : திறந்த வெளிச் சிலுவைப்பாதை**
பகல் 2.00 மணிக்கு கல்வாரியில் ஆரம்பமாகி, அதனைத் தொடர்ந்து **ஆண்டவரின் திருப்பாடுகளின் திருவழிபாடு** இடம் பெறும்.

**அல்லேலூயா சனிக்கிழமை**
திருவிழிப்பு திருவழிபாடு இரவு 11.00 மணி முதல்

### உயிர்த்த ஆண்டவரின் பெருவிழா (பாஸ்கா) ஞாயிறு திருப்பலி காலை 8.00 மணிக்கு

மேலதிக விபரங்களுக்கு :
அருட்தந்தை டொம் ஷென்சன வசார பு.ஆ.ச அடிகள், திருத்தல பரிபாலகர்,
புனித ஆசீர்வாதப்பர் சபை குருக்கள்,
புனித அந்தோனியார் தேசிய திருத்தலம், வஹாக்கோட்டை
தொ.பே இல 0775-515616 / 066-2289210 (Q16N7720)

## ஹொரனை கல்வாரி திருத்தலம் 2017

**கருப்பொருள் : இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் என்கிறார் ஆண்டவர் ( யோவேல் : 2:12)**

**தவக்கால நிகழ்வுகள் :**

**விபூதிப்புதன் பங்குனி மாதம் 01 :** திருப்பலி மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.


**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் :** காலை 8.00 மணிக்கு திருச்சிலுவைப்பாதை, அதனைத் தொடர்ந்து சிங்களம், தமிழ் மொழிகளில் திருப்பலி நடைபெறும்.
பங்குனி மாதம் 12ஆம் திகதி விசேட ஆராதனைகளோடு திருப்பலி தமிழ் மொழியில், கொழும்பு உயர் மறைமாவட்ட **துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின்** தலைமையில் மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

**பரிசுத்த வாரம் :**

| | |
|---|---|
| சித்திரை 09 : | குருத்தோலை ஞாயிறு காலை 10.00 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும். |
| சித்திரை 13: | பெரிய வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும். |
| சித்திரை 14 : | பெரிய வெள்ளிக்கிழமை பொது சிலுவைப்பாதை பி.ப 1.30 மணிக்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடைபெறுவதோடு திருச்சிலுவை முத்தி, மாலை 3.00 மணிக்கு நடைபெறும். |
| சித்திரை 15 : | அல்லேலூயா சனிக்கிழமை மாலை 7.00 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும். |
| சித்திரை 16 : | உயிர்ப்பு ஞாயிறு காலை 8.30 மணிக்கு திருப்பலி சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும் |

*இந்த வழிபாடுகளில் மட்டுமன்றி தங்களுக்கு விரும்பிய நாட்களிலும், நேரங்களிலும் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்க ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.*

❁ உணவு மற்றும் மேலதிக தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். அருட்தந்தை ஒகஸ்டின் ரொஹான் அடிகள், தொ.பே. இல. 034-2261132, 072-9694877, (web : horanacatholicchurch.com)



**ஹொரனை கல்வாரி திருத்தலத்திற்கான பாதை ஒழுங்கு**

**கொழும்பு - ஹொரனை பாதை (பேருந்து இல. 120)**

**இரத்தினப்புரி - ஹொரனை :** இரத்தினப்புரி - கிரிஅல்ல - இங்கிரிய - ஹொரனை - களேதண்டுகொட புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்.

**மாத்தறை ஹொரனை பாதை :** மாத்தறை - காலி - களுத்துறை - பானந்துறை - பண்டாரகம - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்.

**தக்ஷித்த லங்கா அதிவேக பாதை ஊடாக**
கொட்டாவையில் இருந்து - கெலனிகம ஊடாக வெளியேறி - இரத்தினப்புரி வீதி - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட - புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்

**காலியில் இருந்து** கெலனிகம ஊடாக வெளியேறி (Panadura Exit) - இரத்தினப்புரி வீதி - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட - புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்

**உங்கள் அனைவருக்கும், தூய ஆவியானவரால் நிரம்பப்பட்ட தவக்காலமும், பாஸ்கா காலமும் அமைய இறைவனை மன்றாடுகின்றேன்.**
பங்குதந்தை மற்றும் பங்கு மக்கள் (Q16N7721)


**கொழும்பு கத்தோலிக்க அச்சகம்**

**உங்களது அனைத்து விதமான அச்சகத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளலாம்....**



தொடர்புகொள்ளுங்கள்
இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927
பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colomboarchdiocesancatholicpress.com

**COLOMBO CATHOLIC BOOKSHOP**

**கத்தோலிக்க மறை சார்ந்த அனைத்து வகையான புத்தகங்கள் மற்றும் திருச்சுருபங்கள், படங்கள் பரிசுப்பொருட்களை தற்போது பெற்றுக்கொள்ளலாம்.**



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்